பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 11 செவ்வாய்க்கிழமை (27.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 243

# இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி இலங்கை வருகிறார்

## வடக்கு, கிழக்கு சென்று அவர் ஆராய்வார்

புதுடில்லி, ஜூலை 27

**"இலங்கையில் தமிழர் பகுதிகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கு அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்படவுள்ளார்."**

**- இவ்வாறு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு நேற்றுக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை நிலைவரம் குறித்து ஆய்வு செய்வதற்காக, மத்திய வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி, கொழும்புக்குச் செல்ல உள்ளார். அந்த அதிகாரி இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்த உள்ளார்.- என்றுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் தற்போதைய நிலைமையை கணக்கிடவும் - மறுவாழ்வுப் பணிகளுக்கு காலக்கெடு நிர்ணயிக்கவும் ஒரு சிறப்புத் தூதுவரை இந்தியா இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் கடந்த 18ஆம் திகதி கடிதம் (24ஆம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண தனியார் பஸ் வேலை நிறுத்தம் வாபஸ்

கொழும்பு, ஜூலை 27

மேல்மாகாண தனியார் பஸ் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மேல்மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகாரவுடன் நேற்றுக்காலை நடத்திய பேச்சுக்களின் போது முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண உதயனுக்குத் தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் இன்று கடையடைப்பு

வவுனியா, ஜூலை 27

வவுனியாவில் வர்த்தகர்களைக் கடத்திக் கப்பம் கோரல், கொலை செய்தல் போன்ற சம்பவங்களைக் கண்டித்து இன்று வவுனியாவில் கடையடைப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா வாடிவீட்டு உரிமையாளர் கடத்தப்பட்டு பின்னர் கப்பமாக ஆறு லட்சம் ரூபா பெற்று விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே வவுனியா வர்த்தகர்கள் இன்று கடைகளைப் பூட்டித் தமது எதிர்ப்பைக் காட்டவுள்ளனர். (ஒ-ஐ)

## தமிழர் அரசியல் பலத்தை இழக்காமல் இருக்க அனைவரும் வாக்காளர்களாக பதிவது அவசியம்

### அதற்கு இன்னும் 4 நாள்களே உள்ளன என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை27

தமிழர்களாகிய எம்மிடம் தற்போது உள்ள ஒரே ஒரு பலமான அரசியல் பலத்தை இழக்காமல் தக்கவைத்துக்கொள்ள 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளராகத் தம்மைப் பதிவு செய்து கொள்வது அவசியம். இதற்கான காலக்கெடு இம்மாதம் 31 ஆம் திகதியாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுவித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

எமது சமூகம் ஆயுதப் போராட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட நிலையில் அரசியல் போராட்டத்தை மட்டும் நம்பி இருக்கிறது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் குறையாது பேணுவதன் மூலமே அதனைச் செய்ய முடியும். தற்போது எமது நாட்டில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையே நடைமுறையில்(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவை நீதிமன்றில் நாளை மறுதினம் ஆஜராகுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை, 27

இறுதிக்கட்ட போரின் போது வெள்ளை கொடிகளை ஏந்தி சரணடையச் சென்ற விடுதலைப்புலிகளின் தலைவர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றம்சுமத்தப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை நாளை மறுதினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற போது, ஜெனரல் சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரிப்பதற்காக பிரதம நீதியரசர், 3 மேல் நீதிமன்ற நீதிபதிகளை கொண்ட(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. கட்சியின் தீவிர ஆதரவாளர் சிறிகொத்தா முன்னால் தற்கொலை முயற்சி

### தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டார்

கொழும்பு, ஜூலை, 27

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறி கொத்தாவிற்கு முன்னால் நேற்றுமாலை ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து கடும் காயங்களுக்குள்ளான அவர் முதலில் களுபோவில தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளரான இவர்,(24ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளருக்கு விருது வழங்கும் விழா இன்று

கொழும்பு, ஜூலை 27

இலங்கை பத்திரிகை நிறுவனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழா இன்று கல்கிஸை, மவுண்ட்லவேனியா ஹோட்டலில் நடைபெறும்.

மூத்த பத்திரிகையாளர்கள், சாதனை புரிந்தோர் இவ்விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மவுண்ட்லவேனியா எம்பயர் போல்ரூம் மண்டபத்தில் இவ்விழா இன்று மாலை 7.00மணிக்கு ஆரம்பமாகும். (ஒ-சி)

## அரசமைப்புத் திருத்தம் குறித்து கூட்டமைப்பு விரிவாக ஆராயும்

### முஸ்லிம், மலையக கட்சிகளுடனும் பேச்சு நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 27

அரசமைப்புத் திருத்தம், தேர்தல் முறை மறுசீரமைப்பு, இன்றைய அரசியல் நிலைமை ஆகியன தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றுடனும் மற்றும் மலையகக் கட்சிகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தவுள்ளதாக கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தத்தின்போது தேர்தல் முறைமை மாற்றம் செய்யப்படும் பட்சத்தில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படாமல் இருப்பது குறித்தும், அரசமைப்புத் திருத்தம் குறித்தும் மற்றும் இன்றைய அரசியல்(24ஆம் பக்கம் பார்க்க)

## 4 மாதங்களில் 430 சிறுவர்கள் காணாமற்போய்விட்டனர்

### 205 பேர் குறித்து இன்னும் தகவல் இல்லை

கொழும்பு, ஜூலை 27

இந்த வருடம் முதல் நான்கு மாதங்களில் 430 சிறுவர், சிறுமியர் காணாமற்போயிருந்தனர் என பொலிஸ் திணைக்களத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்களில் 270 பேர் சிறுமிகள் எனவும், 160பேர் சிறுவர்கள் எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவர்களில் 225 பேர் (24ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவர்கள் இருவர் மோ.சைக்கிள் விபத்தில் உயிரிழப்பு

### கந்தர்மடத்தில் நேற்று முன்தினம் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நேற்றுமுன்தினம் இரவு யாழ். நகரில் - கந்தர்மடம் பழம் வீதியில் இடம்பெற்ற கோரவிபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது :-

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட இறுதிவருட மாணவனான ஆனைப்பந்தியைச் சேர்ந்த சாந்தகுமார் சந்துரு (வயது 24) தமது பிறந்த நாளான அன்று தனது நண்பரான பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனான சுண்டுக்குளியைச் சேர்ந்த அன்ரன் யோகராஜா கலிஸ்ரஸ் கஜேந்திரனுடன் மோட்டார் சைக்கிளில் இரவு 11.30 மணியளவில் சென்றுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உவகையுடன் வாழ்த்துகிறோம்



இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தை நிலைநிறுத்தப் பணியாற்றியமைக்காக 2009ஆம் ஆண்டு சிறப்பு விருதினை இன்று பெறும் ''உதயன்'', ''சுடரொளி'' பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர்

**வித்தியாதரன்**

சரியானதை, உண்மையெனத் தெரிந்ததை
உறுதிபடச் சொன்னவன். அதனால் சாவுதான்
முடிவென்று தெரிந்தும் பின்வாங்கியதில்லை.
தன்னை எதிர்ப்பவர்களையும் நண்பர்களாக்கும்
வசீகரத்தை மைதானத்திலே பெற்றுக்கொண்டவன்.
ஏனெனில் வித்தி தேசிய நிலை அணிகளில் விளையாடிய வீரன்.
எமது இனத்தின் விடிவுக்காய், எழுச்சிக்காய்,
உயர்வுக்காய் தொடர்ந்தும் அவன் சேவை
களத்தில் தேவை.

(சி-569182) **வடமராட்சியான்.**

## நிறை சேவை



கடந்த 2000ஆம் ஆண்டு சாவகச்சேரி வைத்தியசாலை முற்றாக அழிவுற்றது. இருப்பினும் முக்கியமான மருத்துவ நிறுவனத்திற்கு 2005ஆம் ஆண்டுவரை நிதி ஒதுக்கப்படவில்லை. யாழ்.மாவட்ட அரச அதிபராக உயர்திரு. **க.கணேஷ்** பொறுப்பேற்றபின் குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கப்பட்டது. இருப்பினும் ஏ-9 பாதையில் ஏற்பட்ட தடையினாலும் நாட்டு நிலைமையாலும் வேலைகள் தடைப்பட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்புதான் வைத்தியசாலை நிர்வாகக் கட்டடம் பாவனைக்குக் கிடைத்தது. அவர் அடிக்கல் நாட்டிய சிறுவர் வீடுதி வேலைகளும் முடிவுறும் நிலையில் உள்ளன. வேறு விடயங்களுக்கும் நிதி ஒதுக்கித் தந்துள்ளார். இன்னும் நிறையவே செய்யவேண்டி இருந்தாலும் இவ்வளவும் செய்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் அவர் மன்னார் மாவட்ட அரச அதிபராகச் செயற்பட்டதால் அவரிடம் வவுனியா மாவட்டம் ஒப்படைக்கப்பட்டது. வவுனியாவில் மேற்கொண்ட செயற்திறன் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக தற்பெருமையற்றதும் சுயலாபம் கருதாமலும் சாதுரியமாகச் செயற்பட்டு யாழ்.மாவட்டத்திற்கு கஷ்டமான காலத்தில் உகந்ததைச் செய்தார். ஏறக்குறைய 50 ஆண்டுகள் அரச சேவை செய்ததை நாம் பாராட்டுவதோடு அவர் மன நிறைவோடு நெடுநாள் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை**
(சி-569189) **அபிவிருத்திச் சபை.**

## மணி விழா நாயகன் சேவைநலன் பாராட்டு

**உயர்திரு.சின்னத்தம்பி சித்திரவடிவேல்**



கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் கல்வி வளர்ச்சிக்காக கோட்டக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிவரும்

**உயர்திரு. சின்னத்தம்பி சித்திரவடிவேல்**

சேவையில் மேன்மேலும் சிறந்து சீரும் சிறப்பும் பெற்று இறையாசியுடன் பல்லாண்டு வாழவென வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகம்**
**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.**

## கண்ணீர்ப் பூக்கள்



எமது ஆருயிர் நண்பன்
செல்வன் அன்ரன் யோகராஜா
**கலிஸ்ரஸ் கஜேந்திரன்**
[ 3ஆம் வருட மாணவன், பொறியியற் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் ]
அவர்களின் அகால மறைவினால்
துயருறும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

(101030)

நண்பர்கள், பொறியியற்பீடம் - 3ஆம் வருடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



**கணநாதன் கஜேந்தினி**

எமது பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் செல்வி கணநாதன் கஜேந்தினியின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிற்காகவும் வேண்டுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,**
**யா/பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம.வி.**

## சிகிச்சைக்கு வந்த மூதாட்டி விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூலை27

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெறவந்த மூதாட்டியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக அவர் அனுப்பி வைக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்று சாவகச்சேரி வைத் தியசாலை முன்பாக இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த நாகலிங்கம் பூங்காவனம் (பூபதி - வயது 60) என்பவரே காயமடைந்தவராவார்.

கொடிகாமத்திலிருந்து வந்து வைத்தியசாலைக்கு செல்வதற்காக வீதியைக் கடந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள இவ் வைத்தியசாலை முன்பாக பாதசாரிகள் கடவை வீதியில் இல்லாதமை குறிப்பிடத்தக்கது. (ஐ-207)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை27

தமிழ்நாடு கோவையில் கடந்த மாதம் இடம்பெற்ற செம்மொழி மாநாட்டில் பேராளராகக் கலந்துகொண்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவரும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளருமான ச.லலீசன் சாவகச்சேரி பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தில் நேற்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நேற்று நடைபெற்ற ஆலய வேல் பவனி நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார். (ஒ-200)

## மதிலுடன் மோதிய ஓட்டோ பலத்த சேதமானது

யாழ்ப்பாணம், ஜூலை 27

கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ மதிலுடன் மோதியதில் அதில் பயணித்த சிறுமிக்குத் தலையிலும் சாரதிக்குக் காலிலும் காயமேற்பட்டது. ஓட்டோ பலத்த சேதமடைந்தது.

சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அருகில் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ம.வஸ்திகா (வயது-9) என்னும் சிறுமி தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர். (ஒ-207)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங் கள் நடைபெறும்.

ஓகஸ்ட் எட்டாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தான முதலிச்சிபுலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா ஓகஸ்ட் எட்டாம் திகதியும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ஐ-207)

* * *

கொழும்புத்துறை, ஜூலை 27

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் திருவிமாத் திருப்பலி மறுநாள் காலை 6.30 மணிக்கும் நடைபெற்று திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும். (ஐ-235)

## கண்ணீர் அஞ்சலி



**சாந்தகுமார் சந்துரு**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப் பிரிவு இறுதியாண்டு மாணவன்

**சாந்தகுமார் சந்துரு**

தனது பிறந்த நாளான 25.07.2010 அன்று அகால மரணமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்று ஆற்றொணாத் துயர் அடைந்தோம்.

அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது நெஞ்சங்கள் நிறைந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. **அயலவர்கள்.**

## அந்தியேட்டி அழைப்பு



**இராசரத்தினம் சந்திரசேகரம்**

தோற்றம்
24.04.1958

மறைவு
27.06.2010

கடந்த 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எம் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
**புஸ்பராசா குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
19.09.1930

மறைவு
28.06.2010



**திருமதி சின்னப்பு செல்வரத்தினம்**

கடந்த 28.06.2010இல் இறைவனடி சேர்ந்த எம் குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (28.07.2010) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பரமேஸ்வரி அம்மாள் வீதி,
கோப்பாய் தெற்கு.

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பல்கலைக்கழகத்தின் 3ஆம் வருட
பொறியியற்பீட மாணவன்
**அன்ரன் யோகராஜா**
**கலிஸ்ரஸ் கஜேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வருடமாணவர்கள்,
பொறியியல் பீடம்,
(101032) பேராதனைப் பல்கலைக்கழம்.

## மரண அறிவித்தல்



**கலிஸ்ரஸ் கஜேந்திரன்**
(பொறியியல் பீட 3 வருட மாணவன்)

115, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கலிஸ்ரஸ் கஜேந்திரன் நேற்றுமுன் தினம் (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அன்ரன் யோகராஜா (மிருசுவில்) ஜரீன் சாந்தகுமாரி (விளான்) தம்பதிகளின் ஏகபுதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**115, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (101026)

தகவல்:
**அன்ரன் (தகப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எல்லாம் சித்து விளையாட்டே!

வன்னிப்போரின்போது உயிர்தப்பி, இடம்பெயர்ந்து, முகாம்களில் கஷ்டப்பட்டு, தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள தமிழ் மக்களின் நிலை குறித்து இப்பத்தியில் அவ்வப்போது எழுதி வருகிறோம்.

அரசாங்கம் மீளக்குடியமர்வுப் பணிகளை ஆரம்பித்து பதினொரு மாதங்கள் ஆகின்றன. அவர்கள் மீளக்குடியமர்ந்தார்கள் என்பதற்கான சர்வதேச நியமங்களில் பத்துப் பதினைந்து வீதமாவது இதுவரை எட்டப்படவில்லை - எய்தப்படவில்லை என்பதே கணிப்பாக உள்ளது. சுருங்கக் கூறின், மீளக்குடியமர்ந்த மக்களில் மிகப் பெரும்பாலானோர் கூடாரங்களிலேயே வசிக்கிறார்கள்; இன்னும் சற்று உள்நிலையாகப் பார்த்தால் மரங்களில் தறப்பாள்களைக் கட்டி, அவற்றின் கீழ் வசிக்கிறார்கள், அடிப்படை வசதிகள் சிறிதளவும் இல்லாமல்.

இத்தகைய ஒரு பின்னணியில், வன்னி மக்களின் மீளக்குடியேற்ற நிலை குறித்து இலங்கை அரசும் இந்திய அரசும் தங்களுக்குள் கீச்சு மாச்சுத் தம்பளம் விளையாடுகின்றன. இதில் இந்தியத் தரப்பில் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தமிழக முதல்வர் கருணாநிதியும் ஆட்டக்காரர். இலங்கைத் தரப்பில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரின் சகோதரரும் அமைச்சருமான பஸிலும் ஆட்டக்காரர்கள்.

வன்னி மக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் முதல்வர் கருணாநிதி 'அரசியல் செய்கிறார்' என்பது அங்குள்ள எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு. அது எப்படியோ, வன்னி வாழ் தமிழர்களைப் பொறுத்தவரையில் யார் குற்றியும் தமக்கு அரிசி கிடைத்தால் அதாவது - இலங்கை அரசிடமிருந்தோ இந்திய அரசிடமிருந்தோ தமக்கு அவசியம் தேவைப்படும் உதவிகள் கிடைத்தால் போதும் என்ற நிலை.

இலங்கைத் தரப்போ வன்னி வாழ் மக்களின் மீள்குடியேற்றம், அதன் பின்னரான மக்களுக்குரிய தேவைகளைச் செய்துகொடுக்க 'கொட்டப்பெட்டி'அளவு நிதியைத்தான் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் (307கோடியே 43 லட்சம்) ஒதுக்கி இருக்கிறது. ஆகையால் வெளிநாட்டு உதவிகள் தாராளமாகக் கிடைக்கவேண்டும் என்ற தங்கு நிலை.

இந்தியாவோ, தான் வழங்கும் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாகவும் கண்டிப்பாகவும் உள்ளது. அது நியாயமான எதிர்பார்ப்பே. தான் இன்னாருக்கு என வழங்கும் உதவி சம்பந்தப்பட்டவர்களின் கைக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான பணத்தை, யாழ்ப்பாணத்தில் இந்தியன் வங்கியின் கிளை ஒன்றை நிறுவி, அதனூடாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தியாவின் இந்தத் திட்டம் இலங்கை அரசின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்குமோ என்னவோ தெரியவில்லை! அது ஒரு பக்கம்.

மறுபக்கத்தில் வன்னியில் மீளக்குடியமரும் மக்களுக்கு இந்தியா வழங்கும் உதவிகள் நேர்சீராகக் கிடைக்கின்றனவா என்பதனைக் கண்டறிய இலங்கைக்கு விசேட குழு ஒன்றை அனுப்ப இந்தியப் பிரதமர் முடிவு செய்திருக்கிறார்.

முன்னர் ஒருமுறை, அதாவது கடந்த ஜனவரி மாதத்தில் மீளக்குடியமர்வு, மற்றும் யாழ்ப்பாண நிலைமைகளை கண்டறிவதற்கென வந்த தமிழக எம்.பிக்கள் குழு இங்கிருந்த நிலைமைகளை அறிக்கையாகச் சமர்ப்பித்திருந்தது. அதுவெறும் பூசி மெழுகலாக இருந்தபோதிலும், அதில் மீள்குடியேற்றம் குறித்து அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதனாலோ என்னவோ இம்முறை இந்திய அரசின் தூதுக்குழு இங்கு வருவதற்கு முன்னர் இலங்கைத் தூதுக் குழு அங்கு முந்திக்கொண்டு செல்லவுள்ளது.

அதனை முந்திக்கொண்டு அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், சகோதரர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கொண்ட உயர் மட்டக் குழு புதுடில்லி செல்ல முடிவாகி உள்ளது.

இந்த அவசரத்தின் நோக்கமும் இலக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை. மீள்குடியமர்வு, புனர்வாழ்வு குறித்துப் புதுடில்லிக்கு விளக்கம் அளிக்கவே மூவர் குழு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் குழு இங்கு வந்து மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு குறித்து அறிந்து உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு முன்னர், இந்திய அரசு நிலைமையை நேரில் அறிந்துகொள்ள விடாமல் தடுத்துப் பூசி மெழுகும் தந்திரமே இது என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருவன் தனது தரப்பில் குற்றம் இல்லை எனில் அடுத்தவன் வீடு தேடிப்போய் காரணம் சொல்ல முற்படுவதில் அவசரம் காட்டுவது எதற்கு? இதனை சிறு பிள்ளையும் எளிதில் புரிந்து கொள்ளும். தமிழ்மக்கள் வாழ்வும் இலங்கை - இந்தியாவின் அரசியல் சதுரங்கமும் இப்போது சித்து விளையாட்டே!

# எமது இனத்தின் பிரதிநிதித்துவம் குறைவடையாது பாதுகாக்க அனைவரும் வாக்காளராகப் பதியுங்கள்

## இலங்கைத் தமிழரசுக்கட்சி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

திட்டமிட்டுக் குறைக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை நாம் கவனத்திற் கொண்டு 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்தல் வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், நிதி ஒதுக்கீடுகள், நிவாரணங்கள், உயர் கல்வி, சொந்தக்கிராம குடியிருப்பு உரிமை போன்ற விடயங்களுக்கு அடிப்படை ஆவணமாக வாக்காளர் பதிவு உள்ளது.

எனவே 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தம்மை வாக்காளர்காளகப் பதிவு செய்தல் அவசியமாகிறது. யாழ். மாவட்டத்துக்கு வெளியேயும் வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிப்பவர்கள் அனைவரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டு வருகிறது. சோல்பரி ஆணைக்குழு மேலதிகமாக ஒதுக்கிய 25 ஆசனங்களில் வடக்கு, கிழக்கு 8 ஆசனங்களும் ஏனைய மாவட்டங்களுக்கு 17 ஆசனங்களும் ஒதுக்கப்பட்டன.

ஆனால் 1978ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் 9 மாகாணங்களுக்குத் தலா 4 ஆசனங்கள் என நிர்ணயிக்கப்பட்டது. வடக்கு - கிழக்குக்கு 8 ஆசனங்கள் தொடர்ச்சியாக பேணப்பட்ட போதும் ஏனைய மாவட்டங்களுக்கு 28 ஆசனங்கள் அதாவது 11 ஆசனங்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு வரை 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலைமை மாறி இப்போது 9 நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

இதன்படி 2 பிரதிநிதிகளை நாம் ஏற்கனவே இழந்துள்ளோம். எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் வாழும் அனைவரும் வாக்காளர் பதிவேடு தயாரிப்பு நடவடிக்கைகளில் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களுடன் இணைந்து வாக்காளர் பதிவை உறுதிப்படுத்துவதுடன் எமது பிரதிநிதித்துவம் மேலும் குறைவடையக் கூடிய வகையில் செயற்படாது பாதுகாப்போம் - என்றுள்ளது. (ஒ-6)

# பல்கலைக்கழக மாணவர்கள் இன்று முதல் வகுப்பு பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் இன்று முதல் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட உள்ளனர் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

றுஹுணு பல்கலைக்கழக மாணவனின் கொலையைப் பொலிஸார் பொறுப்பேற்கும் வரை இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

இதனைப் பொலிஸார் பொறுப்பேற்காத பட்சத்தில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொழும்புக்கு வரவழைத்து எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவனான சுசந்த அருண பண்டாரவின் மரணத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

இதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக விழுமியங்களை மீறிச் செயற்பட்டுவருகின்றது என்று உயர்கல்வி அமைச்சர்எஸ்.பி.திஸாநாயக்கதெரிவித்தார்.

றுஹுணு பல்கலைக்கழக சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோடு இணைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்றும் உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, றுஹுணு பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவன் சுசந்த அருண பண்டாரவின் மரணம் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்யுமாறு கோரும் சுவரொட்டிகளை ஒட்டிய பல்கலைக்கழக மாணவர்கள் 6பேர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-சி)

## பல்கலை கல்விசார் உத்தியோகத்தர் இன்று அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 27

யாழ்.பல்கலைக்கழகம் உட்பட அனைத்துப் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வு கோரி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் இன்று குதிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

2006ஆம் ஆண்டு தொடக்கம் சம்பள உயர்வு தொடர்பாக பல்வேறு தடவைகள் பேச்சுகள் நடைபெற்றன. எனினும், இதுவரை உயர்வு கிடைக்காததோடு, கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இடைக்காலக் கொடுப்பனவு 2009 டிசம்பர் முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் இதுவரை அது வழங்கப்படவில்லை.

இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கலைப்பீட கலை அரங்குக்கு முன் ஒன்றுகூடுமாறு இச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனால், இன்று நடைபெற உள்ள பல்கலைக்கழக மாணவர்களது பரீட்சைகள் மேற்பார்வையாளர்களின்றி நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-சி)

# பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியுதவியுடன் குடாநாட்டின் பிரதான வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியுதவியுடன் இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

கொக்குவில் - வட்டுக்கோட்டை வீதி, கட்டுவன் - மல்லாகம் - சங்கானை வீதி, காரைநகர் சுற்றுவட்ட வீதி, தொண்டைமானாறு வல்வை - துன்னாலை வீதி, வல்வை - உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வீதி போன்ற பிரதான வீதிகள் தார் ஊற்றி புனரமைக்கப்படவுள்ளது.

இவற்றைவிட தொண்டைமானாறு - வல்வை - துன்னாலை வீதியிலும், வல்வை - உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வீதியிலும் உள்ள மதகுகளும் புனரமைப்புச்செய்யப்படவுள்ளன.

மேற்படி வீதிகளையும், மதகுகளையும் உடனடியாகப் புனரமைப்புச் செய்வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. - என்றார் அந்த அதிகாரி. (த-224)

# மீள்குடியமர்வு திருப்தியாகவா நடைபெறுகிறது? எல்லாம் அரசின் வெறும் வாய்ச்சவடால் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 27

மீள்குடியமர்தல் திருப்திகரமாக நடைபெறுகிறது என்பதெல்லாம் அரசின் வெறும் வாய்ச்சவடால்தான். மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதுவித வசதியும் இன்றிப் பரிதவிக்கின்றனர் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சந்திரசேகரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளான கிளிநொச்சி, பூநகரி, அக்கராயன் ஆகிய இடங்களுக்கு ஜே.வி.பியின் முன்னாள் எம்.பிக்களான ஆர். சந்திரசேரன் , பிமல் ரத்னாயக்க ஆகியோர் கடந்த வாரம் விஜயம் செய்து அங்கு மக்களின் வாழ்க்கை நிலையைக் கண்கூடாகப் பார்த்தனர்.

அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆர். சந்திரசேகரன் தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் பலருக்கு ஐயாயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. சிலருக்கு ஒரு ... வழங்கப்படவில்லை. கிளிநொச்சியிலிருந்து பூநகரி செல்லும் பாதை யுத்த காலத்திலிருந்து போலவே குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இங்குள்ள பாடசாலைகளுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் வழங்கப்படவில்லை. மரநிழலில் வகுப்புகளை நடத்தும் நிலையே காணப்படுகிறது. எதுவித உபகரணங்களோ தளபாடங்களோ வழங்கப்படவில்லை.

பூநகரிப் பகுதி அழிவுகளுடனேயே காணப்படுகிறது. எதுவித அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லை.

'வடக்கின் வசந்தம்' அரசின் மாபெரும் பித்தலாட்டமே. யுத்தம் முடிவுற்று ஒருவருடத்துக்கு மேல் ஆகியுள்ள போதிலும் அரசின் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தால் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை.

- இவ்வாறு அவர் சொன்னார்.(ஒ-சி)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 12 | 28.07.2010 புதன்கிழமை |
| திதி: | : துதியை மு.ப. 11.00 வரை |
| நட்சத்திரம் | : அவிட்டம் பி.ப. 02.52 வரை |
| சுபநேரம் | :04.32-06.02 வரை |
| ராகுகாலம் | : 12.02-01.32 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காயத்ரி ஜோதிட நிலையம்




இந்தியாவின்
பிரபல ஜோதிடர்

## சிவசங்கர் சுவாமிகள்

கேரளாவில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசிகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

**தொ.பே.: 077 7742605**
**077 8314448**

**கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:**
**காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.**

யாழ்.ரெஸ்ட் ஹவுஸ்,
230, இலுப்பையடிச் சந்தி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(100928)


# சித்திர பாடத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சித்திரபாட வழிகாட்டல் கருத்தரங்கு கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் துஷார குணத்திலகவின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை 31.07.2010 காலை 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை இடம்பெறும்.

கருத்தரங்கில் அனைத்து வலயங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், உயர்தர பரீட்சையில் சித்திர பாடத்திற்கு தோற்றும் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி கேட்டுள்ளார். (ஒ-323)

# தொழில் முயற்சியாளருக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை27

கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில் முயற்சி உருவாக்கத்திற்கான தொழில்நுட்ப மாற்று பயிற்சிப்பட்டறை நாளை புதன் கிழமையும் நாளைமறுதினம் வியாழக் கிழமையும் சுண்டுக்குளி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும்.

முதல்நாள் நிகழ்வில், புதிய இளம் தொழில் முயற்சியாளருக்கான பயிற்சிப் பட்டறையும் இரண்டாவது நாள் நிகழ்வில் தற்போது தொழில்முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கும், முதலீட்டாளருக்குமான பயிற்சிப் பட்டறையும்ண இடம்பெறும். (ஒ-323)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



*தாயின் மடியில் 02 . 09 . 1932*

*இறைவன் அடியில் 19 . 07 . 2008*

*மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட*

**திருமதி சீவரெட்ணம் சிவபாக்கியம்**

*ஆண்டுகள் இரண்டு போனாலும்*
*எமது இதயத்தின் வேதனை தான் ஆறிடுமா?*
*உங்கள் நினைவலைகளுடன்*
*வாழும் குடும்பத்தினர்.*

உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றென்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*நீங்காத நினைவுகளுடன்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(101022)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் அன்பிற்கும் நட்பிற்குமுரிய வாடிக்கையாளரும் கதிசன் இரும்பக உரிமையாளருமாகிய டென்சில் சேவியர் அவர்களின் பாசமிகு மகளான

**சுபாஜனா டென்சில் சேவியர்**

(மாணவி, கலைப்பிரிவு, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)

அவர்களின் பிரிவு குறித்து ஆற்றொணாத் துயருறுவதுடன் அவர்தம் குடும்பத்தினர் துயரில் நாமும் பங்கு கொண்டு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏரியன்ஸ் பெயின்ற்ஸ் (லங்கா) லிமிடெட்
யாழ். விநியோக நிலையம்,
32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

க.கிருஷ்ணராஜா,
பிரதேச முகாமையாளர்

(இ/569177)

# கண்ணீர் அஞ்சலி



எமது பங்குத்தந்தை வண.யேசுரட்ணம்
அவர்களின் மருமகளாகிய

**சுபாஜனா டென்சில் சேவியர்**

(மாணவி, கலைப்பிரிவு, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் -2011)

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பண்டத்தரிப்பு.*

செபமாலை மாதா ஆலய
பங்குமக்கள்.

(இ/569179)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் ★ 19 ★ 08 ★ 1986

காலனின் கையில் ★ 31 ★ 07 ★ 2007

திதி : பிரதமை (27.07.2010)

7/1, அன்னசத்திர லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

*அமரர்* **வடிவநாதன் கஜப்பிரவீன் (கஜன்)**

மண்ணுடன் மறைந்து ஆண்டு மூன்று போனாலும்
உன் நினைவு நெஞ்சுக்குள் நெருங்கி நின்று நெருக்குதல் தருகுதையா?

*வ.வடிவநாதன்,*
*7/1, அன்னசத்திர லேன்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(101017)

*உனது பிரிவால் துயருறும்:*
அப்பா, அம்மா, மனைவி,
மகன், சகோதரர்கள்.

# ஆண்டுகள் பத்தில் ....

*வேலுப்பிள்ளை கனகரட்ணம் (கனெக்ஸ்)*

(உதவித்திட்டமிடல் பணிப்பாளர் (A.D.P) பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)



பிறப்பு 1942 ★ 01 ★ 30

இறப்பு 2000 ★ 07 ★ 18

நீர் வாழ்ந்த இடம், நிழலாடும் உன் முகம்
நிஜமாக எம்முடன் இருக்க,
எமைவிட்டு மீளாத்துயில் கொள்ள
மனம்தான் வந்ததுவோ!

''செல்வகிரி''
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

*என்றும் உங்கள் நினைவுடன்:*
மேகா, திலீபன்,
கோகு, அர்ச்சனா.


# காணி விற்பனைக்கு

அரியாலை, நெடுங்குளம் சந்தியிலிருந்து சிறிது தூரத்தில், ஆட்காட்டி வீதியில் (குகன் வீதிக்கு அண்மையில்) கிணற்றுடன் கூடிய 1 1/4 பரப்புச் சதுரக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: **021 222 1884**

# வாடகைக்கு

நாவலர் வீதி, பிறவுண் வீதிச்சந்திக்கு அண்மையில் கல்வி கற்கும் ஆண் பிள்ளைகளுக்கான உணவுடன் கூடிய தங்குமிட வசதியுண்டு.
**தொடர்புகளுக்கு :- 0779237885**

# இலகு தவணை அடிப்படையில் விற்பனைக்கு

புதிய Micro Wave Oven (மைக்றோ வேவ் அவண்) Samsung விற்பனைக்குண்டு.
தினமும் பி.ப.5.15 இற்குப் பின்னர் பார்வையிடலாம்.
**தொடர்புகளுக்கு :-**
குணம், 517, நாவலர் வீதி,
வைமன் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்.

# AC Car - வாடகைக்கு

திருமண மற்றும் மங்கள காரியங்களுக்கு சௌகரியமான வெள்ளை நிற நவீன Toyotta Coralla AC கார் வாடகைக்கு விடப்படும். மற்றும் ஏனைய தேவைகளுக்கும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 0779074944 , 0772222083

# மணமகன் தேவை

1985இல் பிறந்த, 4இல் சூரியனும் செவ்வாயும் 23½ பாவமுடைய HNDA முடித்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்குப் படித்த மணமகன் தேவை.

**தொலைபேசி இல. :-**
0212262271


# தவறிவிட்டது

கந்தசாமி செந்தூரன் ஆகிய எனது (842353882 V) இலக்கமுடைய அ.அட்டையுடனும் வேறுசில முக்கிய ஆவணங்களுடனும் எனது பேர்ஸ் 26.07.2010ஆம் திகதி தும்பளை மேற்கு, கலட்டியில் உள்ள எனது வீட்டுக்கும், மாதனை காளி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P. : 0773760604, 0774394824, 0212264353



# VISA விசா

அவுஸ்திரேலியா,
அமெரிக்கா, லண்டன்
ஆகிய நாடுகளுக்கு
Visit மற்றும்
Work Permit விசா
பெற்றுக்கொள்வதற்கு

தொடர்பு : [illegible]


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை நேற்று (26.07.2010) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - ஐயாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம் பதிகளின் மருமகனும் தேவியின் (கனடா) அன்புக் கணவரும், யோகேஸ்வரி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), சந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதா கிருஷ்ணன் (பிரான்ஸ்), உமாநந்தினி (கனடா), சிவறூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், குறிஞ்சி (பிரான்ஸ்), நதி (பிரான்ஸ்), சாம்பவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் தம்புநாதர், காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், பத்மாதேவி, காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கணேசன் சுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், தெய்வநாயகி, நவநீதகிருஷ்ணன், பரமேஸ்வரிதேவி, குமாரசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**ஆர்.யோகேஸ்வரி (லதா)**
**0711524866**

*புன்னாலைக்கட்டுவன்.* (101025)

## சாந்தகுமார் சந்துரு

*(யாழ்.பல்கலைக்கழகம் கலைப்பீடம், இறுதியாண்டு)*



யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த சாந்தகுமார் சந்துரு நேற்றுமுன்தினம் (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சாந்தகுமார் - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும் சுரபி, சங்கரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாபரன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் சத்தியசீலன், சத்தியலிங்கம், காலஞ்சென்ற சத்தியதேவன், சசிக்குமார், வைத்திய கலாநிதி கௌரி மனோகரி ஆகியோரின் மருமகனும், சாந்தினிதேவி, சகுந்தலாதேவி, சசிதேவி, பரந்தாமன், தனஞ்செயன் ஆகியோரின் பெறாமகனும் தர்சிகா, கௌதமன், துவாரகன், அபிநயா, அனன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு இன்று (27.07.2010) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*186/20, குருநாதர் சுவாமி*
*கோயில் வீதி,*
*ஆனைப்பந்தி.* (சி-69186)

தகவல்:
**திரு.திருமதி சாந்தகுமார்**
*(பெற்றோர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தயாராகி வருகிறது 'ஓசன்பேள்' படகு

## யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 27

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விரைவில் 'ஓசன் பேள்' என்ற நவீன வசதிகள் கொண்ட மிகப் பெரிய படகினை ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தவுள்ளது.

சமாசத்தின் தலைவர் எஸ்.தவரட்ணம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் அண்மையில் இந்த நவீன படகு சமாசத்திற்கு வழங்கப்பட்டது.

தற்போது காரைநகரில் தரித்து நிற்கும் இந்தப் படகுக்குத் தேவையான மின்பிறப்பாக்கி, குளிரூட்டி மற்றும் இதர கருவிகளைப் பொருத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அத்துடன் இந்தப் படகுக்கு ரேடியோ, வயர்லெஸ் கருவிகளும் விரைவில் பொருத்தப்படவுள்ளன. அந்தப் பணிகள் நிறைவு பெற்றதும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் இப்படகை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் பலநாள்கள் தங்கி நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக இந்தப் படகில் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் தற்போது நிறைவடையும் தறுவாயில் உள்ளன.

இப்படகில் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காக மீனவர்கள் விரைவில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சுமார் நாற்பது அடி நீளம் கொண்ட இந்தப் படகு மூலம் பிடிக்கப்படும் மீன்களை உள்ளூரிலும் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் கொண்டுசென்று சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படகிற்கான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஐ.ஓ.எம் நிறுவனம் நிதியுதவியளிக்கவுள்ளது. (த-224)

# டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

வடமாகாணத்தின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விசேட கலந்துரையாடலில் வட மாகாணத்தின் சுகாதாரப் பணிப்பாளர்கள், கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள், அரச அதிபர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட முக்கிய பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-14)

# காணி உரிமம் தொடர்பான இலவச சட்ட உதவித் திட்டம்

மூளாய்,ஜூலை27

காணி உரிமம் தொடர்பான இலவச சட்ட உதவி வழங்கப்படும் செயற்றிட்டம் ஒன்று வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தால் நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

இச்செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி பகுதிகளில் காணி உரிமம் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் ஏகப்பட்ட பிரச்சினைகள் தீர்வுகாணப்படாத நிலையில் உள்ளது. காணி உறுதிகளைத் தொலைத்தவர்கள் பதிவு செய்யப்படாத காணி உறுதி உள்ளவர்கள் இவ்வாறான பல காணி உரிமம் தொடர்பான பிரச்சி னைகள் இப்பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றது.

எனவே மேற்படி இலவச சட்ட உதவியை வழங்கும் வகையிலான மேற்படி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-99)

# தென்மராட்சியில் டெங்கு நோயை கட்டுப்படுத்த படையினர் நடவடிக்கை

சாவகச்சேரி,ஜூலை27

தென்மராட்சியில் டெங்கு தாக்கம் அதிகரிப்பதை தடுக்க தென்மராட்சியில் உள்ள படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஆரம்ப கட்டமாக கடந்த 18 ஆம் திகதி கொடிகாமம் பொதுச் சந்தை வளாகத்தில் டெங்கு விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கும் சிரமதானமும் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் மங்கள விளக்கினை கொடிகாமம் நகர் இரண்டாவது கட்டளை அதிகாரி மேஜர் ஜெகலால் ,சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம், கச்சாய் ஆயுர்வேத மருந்தக வைத்தியர் திருமதி குமுதினி அரவிந்தன், கொடிகாமம் நகர சுகாதாரப் பரிசோதகர் அ. றெனோல்ட் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். தொடர்ந்து வரவேற்புரையை சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் பே.சிவராஜலிங்கம் நிகழ்த்தினார். கருத்துரைகளை மேஜர் ஜெகலால், நிகழ்த்தியதுடன் டெங்கு தொடர்பான விளக்கவுரைகளை சுகாதார பரிசோதகர் அ. றெனோல்ட், வைத்திய அதிகாரி திருமதி குமுதினி அரவிந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், படையினர் பிரதேசசபை ஊழியர்கள் கலந்துகொண்டனர். சந்தை வளாகத்தில் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

தொடர்ந்து படையினர், சாவகச்சேரி பிரதேசசபை, சுகாதார ஊழியர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (த-131)

# மயானம், வீதி புனரமைப்பு

வடமராட்சி,ஜூலை 27

வல்வெட்டித்துறை காட்டுப்புலம் மயானம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் வீதி என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு செப்பனிடப்பட்டது.

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வல்வெட்டித்துறை நகரசபை இச்சிரமதானப் பணிகளை மேற்கொண்டது. (க-236)

# யாழ்.மத்தியஸ்தர் சபையினால் இதுவரை 281 பிணக்குகளுக்கு இணக்கமான தீர்வு

## அதன் தலைவர் ஸ்ரீசக்திவேல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 27

கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் தனது பணியை முன்னெடுத்துவரும் யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபைக்கு இந்த வருடம் மே மாதம் வரையும் 497 பிணக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 281 பிணக்குகளுக்கு இணக்கம் காணப்பட்டு அதற்கான தீர்வுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 156 பிணக்குகளுக்கு இணக்கம் காணப்படாமைக்கான சான்றுப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மத்தியஸ்தர் சபையின் ஏற்பாட்டில் கடந்த 24ஆம் திகதி யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற மத்தியஸ்தர் தின விழா - 2010 நிகழ்வின்போது தலைமை உரை நிகழ்த்தும்போதே வி. ஸ்ரீசக்திவேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபை உருவாக்கப்பட்டது. இந்த சபைக்குரிய இட வசதியை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் செயற்பட உதவிய கல்லூரி அதிபரும் நன்றிக்குரியவர்.

யாழ்.மத்தியஸ்தர் சபைக்கு ஆரம்பத்தில் சற்று மந்தமாகவே பிணக்குகள் வந்தன. காலப்போக்கில் எமது செயற்பாட்டின் நம்பிக்கை துளிர்விட மிகக் கணிசமான பிணக்குகள் வரத் தொடங்கின. எல்லாப் பிணக்குகளும் தனியார் மூலம் பெறப்பட்டவை ஆகும்.

அண்மைக் காலத்தில் காவல் துறையினரால் சில பிணக்குகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்தகைய பிணக்குகளை கையாண்டு அதன் தீர்வின் பிரதியினை காவல்துறைக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

காணி, சீட்டு, எல்லை, குடும்பப் பிணக்கு எனப் பலதரப்பட்ட பிணக்குகள் கிடைத்துள்ளன. கடந்த ஆண்டு செலான் வங்கி சிறுதொழில் கடனாளிகள் தொடர்பாக 17 பிணக்குகள் பெறப்பட்டு அதில் 16 வெற்றிகரமாக இணக்கம் காணப்பட்டுள்ளன. அண்மையில் இலங்கை வங்கியின் 21 சிறு கடன் பிணக்குகளும் கிடைத்துள்ளன.

எமது சபையானது தன்னலமற்ற சேவையையும் அர்ப்பணிப்பும் மனிதாபிமான அணுகுமுறையில் பிரச்சினைகளை அணுகுவதனாலேயே மக்கள் மத்தியில் நன்மதிப்புடன்செயற்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே எமக்குப் பாராட்டுப் பத்திரம் கிடைக்கப்பெற்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற தேசிய மத்தியஸ்த தினத்தில் 1988ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாண மத்தியஸ்த குழுமத்தின் ஆரம்பம் முதல் இதுவரை பிரதேசத்தின் மக்களின் சிறந்த நடத்தை மற்றும் சகவாழ்வை விருத்தி செய்வதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் ஆற்றிய தன்னலமற்ற சேவைக்காக நான் பாராட்டப்படுவதாக நீதி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்பட்டமை எமது மத்தியஸ்தர் சபைச் செயற்பாட்டுக்கு கிடைத்த நன்மதிப்பாகும். இதற்கு என்னுடன் இணைந்து செயற்பட்ட அனைத்து உறுப்பினர்களின் உழைப்பும் நன்னடத்தையும் கட்டுப்பாடும் ஒத்துழைப்புமே காரணமாகும் - என்றார். (த-14)




# மட்டுவில் சவாரித் திடலை புனரமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை27

மட்டுவில் வடக்கில் மாட்டுவண்டில் சவாரித் திடலை மீண்டும் புனரமைக்க மட்டுவில் பகுதி இளைஞர்கள், அம்பாள் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கில் உள்ள சத்துரங்கிராய் திடல் கடந்த வாரம் மட்டுவில் பகுதி இளைஞர்களால் சிரமதான அடிப்படையில் செப்பனிடப்பட்டது.

தொடர்ந்து இந்தத் திடல் கனரக வாகன மூலம் செப்பனிட மட்டுவில் பகுதி படையதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சத்துரங்கிராய் பகுதி திடலில் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் மாட்டு வண்டில் சவாரி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. தென்மராட்சிப் பகுதி மாட்டு வண்டில் சவாரிப் பிரியர்கள் தற்பொழுது - வலிகாமம் பகுதிகளுக்குச் சென்று சவாரிகளில் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-130)



யாழ்.போதனா வைத்தியசாலையின் 23ஆம் இலக்க விடுதி நேற்று இடம் மாற்றம் செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. 512ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த இராணுவவீரர்கள் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் மற்றும் பொருள்களை இடமாற்றம் செய்வதற்கு உதவியளிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள் : தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையான மாணவர்களுக்கு விரைவில் இலவச சீருடைகள்

## யாழ்.செயலகம் ஏற்பாடு

மூளாய் , ஜூலை 27

யாழ்.மாவட்டத்தில் உள்ள வறுமை நிலையில் வாழும் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கும் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இச்செயற்றிட்டத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகளை யாழ்.செயலகம் ஆரம்பித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இச்செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வறுமையில் இருக்கும் மாணவர்களுக்கு மாற்றுச் சீருடை அணியும் வசதிக்காகவே மேற்படி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (த-99)

# பொலிகண்டியில் நடமாடும் சேவை

வடமராட்சி, ஜூலை 27

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை நகரசபை நடமாடும் சேவையொன்றை நடத்தியுள்ளது.

பொலிகண்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையின் போது துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமம் வழங்குதல், பொது நூலகத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்த்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இப்பகுதியைச் சேர்ந்த வரியிறுப்பாளர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டது.

(க-236)

## கண்ணீர் அஞ்சலி



25.07.2010 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த, வடமாகாண சமூக
நலத்துறைத் திணைக்கள தலைமைக்
காரியாலய சமூக சேவை உத்தியோகத்தர்
நா.இராஜமனோகரனின்
அன்புத் தந்தையார்

**பேரம்பலம் நாகராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட சமூகநலத்துறைத்
திணைக்கள உத்தியோகத்தர்கள்.

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம் , ஜூலை 27

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலமாக்கும் வேலைகளுக்காக உயரழுத்த மின்கம்பங்கள் இடமாற்ற வேண்டியிருப்பதால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

நெல்லியடி (நெல்லியடிச் சந்தியிலிருந்து மாலு சந்திப் பக்கமாக), மாலுசந்தி, பருத்தித்துறைப் பிரதேசம், மணற்காடு, அம்பன், குடத்தனை அத்துடன் கரந்தன், நீர்வேலி, கோப்பாய் ஆகிய இடங்களிலும் மின்தடை அமுலில் இருக்கும். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் அன்பிற்கும்
நட்பிற்குமுரிய வாடிக்கையாளரும் கதிசன்
இரும்பக உரிமையாளருமாகிய டென்சில்
சேவியர் அவர்களின் பாசமிகு மகளான

**சுபாஜனா டென்சில் சேவியர்**

(மாணவி, கலைப் பிரிவு, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் ஆறாத்துயர் அடைந்துள்ளதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண இருப்பகம்,
ஏசியன் பெயின்ற்ஸ்(வ) லிமிற்டெட்
விநியோக நிலையம்
32,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்,
ஊழியர்கள்.

(சி/569178)

# இடம்பெயர்ந்த மாணவர்களின் பெறுபேறு யாழ்.வலயத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் புதிய பாடத்திட்டப் பெறுபேறு மற்றும் கணித பாடத்துக்குரிய விசேட பரீட்சைப் பெறுபேறு என்பன யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குகிடைக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தந்து மேற்படி பெறுபேற்றினை பார்வையிடலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
27 . 02 . 1970



ஆண்டவன் அடியில்
08 . 07 . 2009

**கோபாலசிங்கம் பாலமுரளி**

திதி: பிரதமை

பாசத்தின் உறைவிடமே, பாரினில் வந்துதித்த-எம் ஆருயிரே ஐயா முரளி.

விதி செய்தசதியில் கதிகலங்கி தவிக்கின்றோம். தனயனை இழந்த துடிக்கின்ற
தந்தையை பாராயோ பெற்றஅன்னையவள் உதிரத்தின் துடிப்பினை பாரயோ
உடன்பிறப்புக்களின்களின் உருக்குலைவைப் பாராயோ
உற்றாரும், உறவினரும் உருகுவதைப்பாராயோ
இத்தனை பேர் தவிக்கின்றோம் எங்கு நீர் சென்றுவிட்டீர் எமது கண்ணில் படாமல்.
உமைக்காணமுடியாமல் ஓராண்டாய் தவிக்கின்றோம் விழிநீர் கூட காயவில்லை
வேகமாய் உருண்டது ஒருவருடம் ஒருவருடம். என்ன எத்தனை ஆயிரம் ஆண்டுகள்
சேன்றாலும் எம்மிடத்தில் நிலைத்து நிற்கும் நின்நினைவு.

03, ஸ்ரான்லிக் கல்லூரி
ஒழுங்கை, யாழ்ப்பாணம். (101009)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

# வலி.மேற்கில் முன்பள்ளிகளை சீராக்க விசேட திட்டம்

மூளாய், ஜூலை 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் முன்பள்ளிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

இப்பகுதியில் உள்ள முன்பள்ளிகள் பலவற்றின் செயற்பாடுகள் திருப்தி அற்ற நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வாறான முன்பள்ளிகளின் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கும், இயங்காமல் உள்ள முன்பள்ளிகளை மீள இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வலி.மேற்கு பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதேச செயலர் ஏற்கனவே பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

(99)

## மரண அறிவித்தல்

**கைலாசபிள்ளை சுகுமாரன்**

(முன்னைநாள் ஊழியர், மின்சாரசபை)



அரியாலை, 364, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சுகுமாரன் 25.07.2010 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பிரசில்லாவின் பெறாமகனும் காலஞ்சென்ற பரமு-முத்தம்மா தம்பதியரின் மருமகனும் குணலட்சுமியின் பாசமிகு கணவரும் தேவகுமாரன் (கனடா), விஜயகுமாரி (லண்டன்), ராஜகுமாரன் (கனடா), ரஞ்சித்குமாரன் (கனடா), ரமணகுமாரி (லண்டன்), சசிதகுமாரி (கனடா) ஆகியோரின் தந்தையும் வளர்மதி, ஐங்கரன், சுஜாதா, ரோகணா, திலக்ராஜ், ஜசிந்தன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசையா, சுப்பிரமணியம், கனகலிங்கம் ஆகியோரின் மருமகனும் ஆறுமுகம், இலட்சுமிப்பிள்ளை, செல்லத்துரை, கனகரட்ணம் ஆகியோரின் பெறாமகனும் ஜெயக்குமார், சுந்தரகுமார், ரூபகுமாரி, சுதாமதி, சுதர்சனன், காலஞ்சென்றவர்களான சூரியகுமாரி, சிவகுமார் ஆகியோரின் சகோதரரும் உமாமகாலிங்கம், தனபாலசிங்கம், பத்மநாதன், யோகநாதன், வரதராஜன், கிருபாகரன், விமலா, செல்வரத்தினம், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சந்தனமாதா கோயில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

செல்வரத்தினம்,
விமலா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18.11.1934
மறைவு: 24.04.2009



தோற்றம்: 10.04.1941
மறைவு: 26.07.2009

அமரர் **கதிர்காமு சின்னத்தம்பி** அமரர் **சின்னத்தம்பி சின்னம்மா**

திதி: பிரதமை

எங்கள் இதயக் கோயிலில் குடியிருக்கும்
அன்பான அப்பாவே! எமதருமையான அம்மாவே!!
நீங்கள் இருவரும் ஒரே ஆண்டில் எம்மைப் பிரிந்தீர்களே
பதறுகின்றோம், தவிக்கின்றோம் ஆறுதல் தர இருவருமில்லையே
ஏங்கித் தவிக்கும் எம் இதயத்தில் வாழும் உங்களை
அன்பு மலர்களால் தினமும் பூசிக்கின்றோம்
மானிட வாழ்வில் மறுபிறப்பென்றால் வாருங்கள் எம்மிடத்தே

அராலியடைக்கு,
வல்வெட்டிக்கோட்டை. (100592)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


சீட்டிழுப்பு இல. 2270
திகதி 25.07.2010

**மஹஜன சம்பத**

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்

Y 4 9 5 7 7 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 4 | 9 | 5 | 7 | 7 | 1 | ரூபா. | 14,608,225/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 4 | 9 | 5 | 7 | 7 | 1 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 9 | 5 | 7 | 7 | 1 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 07 |
| 3ம் பரிசுகள் | | | | 5 | 7 | 7 | 1 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 49 |
| 4ம் பரிசுகள் | | | | | 7 | 7 | 1 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 512 |
| 5ம் பரிசுகள் | | | | | | 7 | 1 | ரூபா. | 100/= | பரிசுகள் | 5426 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. | 20/= | பரிசுகள் | 53231 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 9 | 5 | 7 | 7 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 4 | 9 | 5 | 7 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 54 |
| 9ம் பரிசுகள் | | 4 | 9 | 5 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 520 |
| 10ம் பரிசுகள் | | 4 | 9 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 5247 |
| 11ம் பரிசுகள் | Y | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 21187 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,608,225.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,171,310.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

## நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி



யாழ்ப்பாணம் , ஜூலை 27

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிந்து வரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிப் பணிப் பகிஷ்கரிப்பை நேற்று வைத்தியசாலை வளாகத்தில் மேற்கொண்டனர்.

இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக அதில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றி வரும் எமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாது பின்னடிக்கப்பட்டு வருகிறது.

நாள் ஒன்றுக்குக் கொடுப்பனவாக 75 ரூபா வழங்கப்பட்டு வந்த எமக்கு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் அது 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு தற்போது நாளொன்றுக்கான கொடுப்பனவாக 175 ரூபா வழங் கப்பட்டு வருகிறது.

வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ள நிலையில் எமது பணிக்குஏற்ப கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். நிரந்தர நியமனம் பெற்றுள்ள ஊழியர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 675 ரூபா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நாம் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகிறோம். எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை எமது பகிஷ்கரிப்புத் தொடரும் - என்றனர்.

சுகாதாரத் தொண்டர்களாகக் கடமை புரியும் 43 பேர் இவ்வாறு பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (த-14)

# யாழ். ஆஸ்பத்திரியில் அடுத்த மாதம் முதல் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 27

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்படவுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வரும்போது பொருள்களைப் பொலித்தீன் பைகளில் கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு கொண்டு வரும் பொலித்தீன் பைகளை வைத்தியசாலை வளாகத்தினுள்ளேயே அவர்கள் வீசிவிட்டுச் செல்வதனால் டெங்கு அபாயம் தோன்றியுள்ளதாகவும், அதனால் இனிமேல் பொலித்தீன் பைகளில் பொருள்களைக் கொண்டு வரவேண்டாம் எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-319-23)

# நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஆலயச் சுற்றாடலில் பொலிஸ் ரோந்து

யாழ்ப்பாணம்,ஜூலை 27

நல்லூர்க் கந்தனைத் தரிசிக்க வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து ஆலயச் சுற்றாடல் பகுதியில் பொலிஸார் இரவு வேளையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினமும் ஆலயத்தில் கூடும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தென்பகுதியில் இருந்து சுற்றுலாப் பயணிகளும் யாழ். குடாநாட்டையும், தமது குடியிருப்புக்களையும் பார்வையிடுவதற்காக வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களும் பெரும் எண்ணிக்கையில் இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

இவர்கள் நல்லூர்க் கந்தனைத் தரிசிப்பதற்குச் செல்வதால் தினமும் அங்கு மக்கள் கூட்டம் அலை மோதுகின்றது.

இந்த வேளையில் ஆலய சுற்றாடலில் தூய்மை பேணவும், குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்கவும் பொலிஸார் அங்கு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இரவு வேளையிலும் ரோந்தில் ஈடுபடுகின்றனர். (த-224)

## 'அக்ரகாரா' சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

'அக்ரகாரா' காப்புறுதிச் சுற்று நிருபங்கள் தனிச் சிங்களத்தில் வருவதால் தமிழ் அரச ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களுக்கு தனிச் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இந்தத் தனிச் சிங்களக் கடிதங்களை வாசிக்க முடியாமல் தமிழ் அரச ஊழியர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.(50-224)

# தொழில் அமைச்சின் பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு,ஜூலை 27

தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்வது சம்பந்தமாக இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இன்று முதல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை தினமும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.15 மணிவரை இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. (50-86)

# நெடுந்தீவில் 'லங்காபெல்'

நெடுந்தீவு,ஜூலை 27

நெடுந்தீவில் 'லங்காபெல்' தொலைபேசி நிறுவனம் தொலைபேசிச் சேவைகளை ஏற்படுத்தியுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் தொலைபேசிக் கோபுரங்களை அமைத்துள்ள லங்காபெல் தொலைபேசி நிறுவனம் ஒரே நாளில் 50 இணைப்புக்களையும் வழங்கியுள்ளது. பொது மக்களும் 4 ஆயிரத்து 500 ரூபா செலுத்தி தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. (க-111)

# பல்கலாசார நிகழ்வு நயினாதீவில் நாளை

நல்லூர் , ஜூலை 27

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையில் நடைபெறும் பல்கலாசார நிகழ்வு நாளை புதன்கிழமை நயினாதீவு மேகலை அரங்கில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயக் குரு. பிரம்மஸ்ரீ வாமதேவக்குருக்கள், நயினை நாக விகாராதிபதி வண. நவன்டகல பதுமகீதி திஸ்ஸ நாயக்க தேரோ, புங்குடுதீவு பங்குத் தந்தை வண. லியோ ஆம்ஸ்ரோங் , நயினை மௌலவி இர்ஷாத் ஆகியோர் வழங்குவார்கள். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் திருமதி எம்.எஸ்.விக்கிரமசிங்க, யாழ். அரச அதிபர் திருமதி.இமல்டா சுகுமார், வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ். எம்.பி. வீரசேகர ஆகியோரும் யூ.என்.டி.பி நீதிக்கும் சமத்துவத்துக்குமான நிகழ்ச்சித் திட்ட தேசிய ஒருங்கிணைப்பாளரும் உரை நிகழ்த்துவார்கள்.

இன்றைய நிகழ்வின்போது யூ. என். டி. பி நிறுவனம், வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கே. தவராசாவிடம் சூழல் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்களை வேலணை பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய கலை நிகழ்வுகள் இடம் பெறும். (க-111)




# கல்வி டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 27

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேல் விசேட தேவைகள் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறிக்குரிய (Post Graduate Diploma in Special Needs Education) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று அடுத்தமாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-16)

# 'ஆர்க்' முன்பள்ளி விளையாட்டு விழா

வலி. வடக்கு ,ஜூலை 27

ஆர்க் திருக்குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு ஆர்க் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் எம். ரவிபாலாவும், சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் சி.சாந்தநாயகமும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ். ஹேமநளினியும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (50-86)



யாழ். மத்தியஸ்தர் சபையினால் நடத்தப்பட்ட 'மத்தியஸ்தர் தினவிழா - 2010' நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ்.மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமை உரை நிகழ்த்துவதனை முதலாவது படத்திலும், முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா ஆகியோர் உரை நிகழ்த்துவதனை இரண்டவது , மூன்றாவது படங்களிலும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி இ.த.விக்னராஜா உரை நிகழ்த்துவதனை நான்காவது படத்திலும் மத்தியஸ்தர் சபை நிகழ்ச்சித்திட்ட உத்தி யோகத்தர் ப.சனாதனன் செயற்பாட்டு உரை நிகழ்த்துவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதிப் படங்களிலும் காணலாம்.

(படங்கள்: உமா, ரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிக் குழுவின் ஆலோசனையை ஏற்று தமிழரின் தேசியப் பிரச்சினையை தீர்க்க முடியுமா?

உலகையும் குறிப்பாக இந்தியாவையும் தமிழரையும் ஏமாற்றுவதற்காக அமைக்கப்பட்டது தான் சர்வகட்சி குழு. இந்தக் குழுவின் தலைவராக இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவினால்


மஹிந்த

நியமிக்கப்பட்டவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. இவர் மஹிந்தா அரசில் அமைச்சராக பதவி வகிக்கின்றார். இந்த சர்வகட்சிக் குழுவில் பல கட்சிகள் இடம்பெற்று இருந்தாலும் இறுதியில் 13 கட்சிகளின் ஆலோசனையின் அடிப்படையிலேயே அரசியல் தீர்வு ஆலோசனையை அரசிடம் வழங்கியிருந்தது. இந்த ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டு 13 மாதங்கள் ஆகியும் இந்த அறிக்கையினை வெளியிடாமல் மௌனம் காத்துக்கொண்டிருந்தது மஹிந்த அரசு. திடீர் திருப்பமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியிலிருந்து தாவி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த எம்.பி. ஆர். யோகராஜன் அவர்கள் இந்த அறிக்கையினை ஊடகவாயிலாக வெளிக்கொண்டு வந்திருக்கின்றார். இதனைப் பகிரங்கப்படுத்துவதற்காக செய்தியாளர் மாநாடு ஒன்று இந்த வார ஆரம்பத்தில் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது. இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சர்வகட்சிக் குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்களான ஆர். யோகராஜன் எம்.பி., முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர், ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் நல்லையா குமரகுருபரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலோசனை அறிக்கை அளிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் மௌனம் காத்திருந்த மஹிந்த தலைமையிலான அரசு, ஏதோ தமிழரின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கும்படியான அரசியல் தீர்வொன்றை வைத்திருப்பதாக உலகநாடுகளிடம் தான் விஜயம் செய்யும் போதெல்லாம் கூறிவருகின்றார் மஹிந்தா வரலாறு, சமயம், வாழ்வியல் மற்றும் பூர்வீக பிரதேசங்களைக் கொண்ட மக்களின் பிரச்சினையை ஆகக் குறைந்தது அதிகாரப்பரவலாக்கல் மூலமாக ஒரு அரசியல் தீர்வை காண முடியும்.

ஏற்கனவே இலங்கையில் இருக்கும் மாகாணசபை ஊடாக தமிழருக்கு நடப்பில் இருக்கும் சட்டயாப்பை மாற்றி தமிழருக்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கினாலும் தமிழ்த் தலைமை அதனை ஏற்குமா என்றொரு சந்தேகம் இருந்த வேளையில் ஒரு அணு குண்டையே தூக்கிப்போட்டு விட்டது இந்த சர்வகட்சிக் குழு. இக்குழு கையளித்திருந்த இந்த தீர்வுப் பொதியைத் தான் தனது நாட்டிலேயே தயாரித்து வைத்திருக்கும் தீர்வுப் பொதி என்று தம்பட்டம் அடித்து வந்தார் மஹிந்தா. இவரின் உண்மைத் திரை இப்பொழுது அம்பலத்திற்கு வந்துவிட்டது.

சர்வகட்சிக் குழுவின் இறுதி அறிக்கையின் அம்சங்கள் பின்வருமாறு:

**அரசின் தன்மை:**

இலங்கைக் குடியரசானது ஒற்றையாட்சி அரசாகும் என்பதால் உணரப்படுவது யாதெனில் எங்கே அரச அதிகாரமானது மாகாணங்களுக்கிடையே பகிரப்பட்டிருக்க அரச மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கும் (மத) பேதமை, பிரிவினைப் பாங்கான போக்கை நலிவடையச் செய்வதற்குமான ஆழமான பொறிமுறைகளை கொண்டிருக்க வேண்டும். மாகாணங்கள் மற்றும் உள்ளூர்


திஸ்ஸ விதாரண

அதிகார சபைகள் குடியரசினுடைய தேசிய ஒற்றுமையையும் பிரிபடாத்தன்மையையும் பாதுகாப்பதற்கு சட்ட ரீதியாக கட்டளைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**தேர்தல் முறைமை:**

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவானது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை காணப்படத்தக்கதாக, தேர்தல் தொகுதி அடிப்படையிலான தொகுதிவாரி

இறுதியறிக்கை மூலமாக இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவருமோ என்னவோ ஈழத் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வை வழங்குமா என்பதை தீர்க்கமாக ஆராய்வதின் மூலமாக பதிலை எதிர்பார்க்கலாம்.

மஹிந்தாவினால் ஜூலை 11, 2006 அன்று சர்வகட்சி மாநாட்டை நடாத்தி இந்தக் குழுவை அமைப்பதாக அறிவித்தார்கள். ஆகஸ்ட் 13, 2007 அன்று மஹிந்தா அதிகார பூர்வமாக


யோகராஜன்

இந்த குழுவை ஆரம்பித்து வைத்தார். சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அங்கம் வகித்தபோதிலும் ஆலோசனை குழுவிலிருந்து இடைநடுவிலேயே விலகிக்கொண்டது. இந்த குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக ஜனாதிபதியினால் இரண்டு நிபுணர்கள் குழுவும் நியமிக்கப்பட்டது. இந்த சர்வகட்சி குழு 128 தடவைகள் கூடி ஜூன் 30, 2009 அன்று இந்த இறுதியறிக்கையை மஹிந்தாவிடம் கையளித்தது.

வன்னிப் போர் முடிந்து ஒரு வருடமாகியும், இந்த அறிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் புதுடில்லியிடமும் அடிக்கடி இந்த தீர்வை வைத்துக்கொண்டு தான் ஏதோ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தீர்வொன்றை வைத்திருப்பதாக மார்தட்டிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த அறிக்கையினை பகிரங்கப்படுத்தியிருப்பதனால் மஹிந்தா வைத்திருக்கும் தீர்வென்ன என்பதனை அறியக்கூடியதாகவுள்ளது.

**சர்வகட்சிக் குழுவின் ஆலோசனைதான் என்ன?**

தமிழர்கள் கைகளை தலையில் வைத்து அதிரும்படியான ஒரு ஆலோசனையை சமர்ப்பித்துள்ளது இந்த சர்வகட்சி குழு. தமிழர்களின் தேசியப் பிரச்சனையை தீர்ப்பதற்கு மாறாக எந்த தீர்வையும் முன்வைக்காமல் வெறுமனே இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வை முன்வைத்துள்ளது. தமிழரின் தாகம் தமிழீழ தாயகம் என்ற கோட்பாட்டுடன் களம் இறங்கிய விடுதலைப் போராளிகளையும் அவர்களின் பல தசாப்த போராட்டங்களையும் கொச்சைப்படுத்த வேண்டும் என்ற தோரணையிலேயே இந்த குழுவின் அறிக்கை அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

**அனலை நிதிஸ் ச.குமாரன்**

விடுதலைப்புலிகள் தமிழீழமே ஒரே தீர்வென்று பல காலமாக ஆயுதவழியாக போராடினார்கள். தமிழரின் போராட்ட வடிவங்கள் மாறினாலும் தாகம் அணையாமல் தமிழர் மனங்களில் இருந்து கொண்டேயிருக்கும். இப்படியாக தமிழரின் எதிர்பார்ப்பு இருக்கையில் சர்வகட்சிக் குழுவினால் வழங்கப்பட்டிருக்கும் தீர்வு தமிழருக்கு எந்த விமோசனத்தையும் கொண்டுவரப் போவதில்லை. இரு இனங்களுக்கு இடையில் குறிப்பாக இரு வெவ்வேறு மொழி பண்பாடு, கட்டமைப்பானது பிரிபடாததும் ஒன்றிணைக்கப்பட்டதுமான கட்டமைப்பாக கருதப்படல் வேண்டும்.

**அரசின் வடிவம் முறைமை:**

இலங்கை, மத்திய மட்டத்தில் நாடாளுமன்ற முறைமை கொண்ட அரசைக் கொண்டிருக்கும்.

**புத்த மதத்தின் அந்தஸ்து:**

இலங்கை குடியரசு புத்த மதத்திற்கு அதி உன்னதமான இடத்தை வழங்கல் வேண்டும். அத்தோடு அதன் பிரகாரம் அரசின் கடப்பாடானது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 10, 14 (1) (உ) ஆல் அனைத்து மத உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்ட பிரகாரம் புத்த சாசனத்தை பாதுகாத்தலோடு பேணிப் போற்றலும் வேண்டும்.

**அரச கரும மொழியும் தேசிய மொழியும்:**

தேசிய மொழிகளான தமிழும் சிங்களமும் இலங்கையின் அரச கரும மொழிகளாக இருக்கும்.

**ஆங்கில மொழியின் பிரயோகம்:**

ஆங்கிலமானது உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.

**அரசியலமைப்பின் மீயுயர் தன்மை-இறையாண்மை:**

அரசியலமைப்பின் இறையாண்மையானது தற்போது காணப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்குட்பட்டதும் ஆனால், உயர் நீதிமன்றத்திலிருந்து வேறானதுமான ஓர் அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் பாதுகாக்கப்படுவதுடன் அங்கீகரிக்கவும் படல் வேண்டும். அரசியலமைப்போடு முரண்படுகின்ற செயல் மற்றும் செய்யாமை தொடர்பான மத்திய மற்றும் மாகாணங்களின் அனைத்துச் செயற்பாடுகளும் வேறாதானதாகும்.

**(மத)பேதமைகளுக்கு-பிரிவினைகளுக்கு எதிரான பாதுகாப்பு:**

அரசின் ஒற்றுமை, இறைமை

முறைமையையும் கட்சி அடிப்படையிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையையும் கொண்டதான இரண்டு வாக்குச் சீட்டுகளுடனான ஒரு கலப்புத் தேர்தல் முறைமையை ஏற்றுக் கொள்கிறது.

**அதிகாரப் பகிர்வு:**

மக்களின் அதிகாரமானது அரசின் மூன்று மட்டங்களிடையே பகிரப்பட்டிருக்கும். குறிப்பாக மத்திய அரசு, மாகாண மற்றும் உள்ளூர்


நிசாம்

அரசுகளிடம் ஒவ்வொரு மட்டமும் வேறான அதிகாரப் பட்டியல்களை அரசியலமைப்பின் ஊடாக கொண்டிருக்கும்.

**ஆட்சிப் பேரவை (செனட்):**

தேசிய சட்டவாக்கத்தில் பொறுப்பு வகிக்கக் கூடியதான மாகாணங்களைக் கொண்டு ஆட்சிப் பேரவை ஒன்று அமைக்கப்படும். மாகாணங்களிடையே எதிரிடையான விளைவுகளைக் கொண்ட கவனயீனப் போக்கான சட்டங்களுக்கு எதிரான ஆழமான ஒரு பொறி முறையாக இது தொழிற்படும். இது முன்மொழிவது யாதெனில், ஒவ்வொரு மாகாணமும் 63 மொத்த உறுப்பினர்கள் அமைவான, அந்தந்த மாகாண

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 30 பேர் அக்கரைப்பற்றில் கைது

கொழும்பு,ஜூலை27

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றனர் என்ற சந்தேகத்தின்பேரில் 30 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

கொழும்பிலிருந்து சென்ற இலங்கை மின்சார சபையின் விசேட குழுவினரும், அக்கரைப்பற்றுப் பொலிஸாரும் இணைந்து அக்கரைப்பற்று முதலாம் பிரிவுப் பகுதியில் அதிகாலை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் கூறினர். (ஏ)

## கல்முனையில் 29ஆம் திகதி ஒன்றிணைப்புச் செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூலை27

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் செயலமர்வு எதிர்வரும் 29ஆம் திகதி கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் நடைபெறும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும், மனித அபிவிருத்தி தாபனமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் எம்.எம்.சறூக் இச் செயலமர்வுக்குத் தலைமை தாங்குகிறார்.

கல்முனைப் பிராந்திய எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும், எதிர்காலத்தில் ஏற்படும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காகவும், சம்பவம் ஒன்று நிகழும்போது அதற்கான சட்ட நடவடிக்கையை ஒருநிலைப்படுத்துவதற்காகவுமே இச்செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

# திருமலையில் அதிகரிக்கும் டெங்கை கட்டுப்படுத்த கூட்டு வேலைத்திட்டம்

திருகோணமலை,ஜூலை 26

திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கூட்டு வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்மாவட்ட சுகாதாரப் பிரிவு அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவினர் ஆகியோரினதும், உள்ளூராட்சி மன்றங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றினதும் ஒத்துழைப்புடன் இக்கூட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபையிர் தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மாவட்ட மட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் மாகாண சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். (ஏ)

# மட்டு. மாவட்டத்தில் செயற்றிட்டங்கள்

மட்டக்களப்பு,ஜூலை26

கிழக்கு மாகாணத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையிலான நல்லுறவை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சுயதொழில் குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் - பொலிஸாருக்குமிடையிலான நல்லுறவு செயற்றிட்ட நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு எஹெட் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு எஹெட் மாவட்டப் பணிப்பாளர் பேராசிரியர் சிறிதரன் சில்வெஸ்டர் தலைமை வகித்தார்,

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஐ.எம். கருணாரட்ணவின் ஆலோசனையின் கீழ் சிறுவர், மகளிர் பிரிவு உதவிப் பொலிஸ் பரிசோதகர் திருமதி கிருபைரமணி யோகராசா உட்படப் பலர் விரிவுரை நிகழ்த்தினர்.




சிறுவர் துஷ்பிரயோகம், இளம் வயது திருமணம், ஆட்கடத்தல் உட்படப் பல தலைப்புகளில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

# மாவலி நீரைத் திருப்பி கிண்ணியாவில் விவசாயம்

## குழு இன்று நேரடிப் பார்வை

திருகோணமலை,ஜூலை27

மகாவலி ஆற்றின் நீரைத் திருப்பி கிண்ணியாப் பகுதிக்கு நீர்ப்பாசனம் வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தவிசாளர் சட்டத்தரணி எம்.எச்.எம். பாயிஸ் இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உட்பட நீர்ப்பாசன திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள், இன்று 26 ஆம் திகதி விவசாய அமைப்புகள் சகிதம் மகாவலிப் பிரதேசத்தைப் பார்வையிடவுள்ளனர்.

இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் கிண்ணியா பிரதேசத்தில் நீண்டகாலமாகக் கைவிடப்பட்டுள்ள நெற்காணிகளில் தங்களால் விவசாயத்தை இலகுவாக மேற்கொள்ள முடியும் என இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.(ஏ)

# கள்ள நோட்டுக் குழு தாந்தாமலையில் கைது

மட்டக்களப்பு,ஜூலை27

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் கள்ள நோட்டு அச்சிட்டு வந்த நால்வர் கொண்ட குழுவினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில், 1000ரூபா பெறுமதியான 142 கள்ள நோட்டுகள், இரு மோட்டார் சைக்கிள்கள், கணனிகள், லெப்டொப், சிடிக்கள், கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவை உட்படப் பெருமளவிலான பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அம்பாறையைச் சேர்ந்த இந்நான்கு இளைஞர்களும் தாந்தாமலை முருகன் ஆலய உற்சவத்தின்போது கள்ளநோட்டுகளை மாற்றிக்கொண்டிருந்தபோதே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அளித்த தகவல்களை அடுத்து அம்பாறை உகண பகுதியிலுள்ள இவர்களது அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.(ஏ)

# அமைச்சர் ஆறுமுகன் முடிவுக்கு மனோ கணேசன் வரவேற்பு

கொழும்பு,ஜூலை27

நுவரெலியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் மதுபானசாலைகளைக் கட்டுப்படுத்துமுகமாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் எடுத்துள்ள முடிவுக்கு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பான இணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமைத்தாங்கிய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையகத்தில் அதிகரித்துள்ள மது பாவனை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இதன்போது, வணக்கஸ்தலங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள மது விற்பனை நிலையங்கள் தொடர்பில் தமக்கு இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களை அகற்றும் நடவடிக்கையை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் முன்னெடுப்பாரானால் நாம் அதை வரவேற்போம். அத்துடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

வறுமை நிலை கணிப்பீட்டில் 32 விகிதத்தை தொட்டு நிற்கும் நுவரெலியா மாவட்டம் இலங்கையிலேயே வறுமையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அதே போன்று, மதுபாவனையிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்த இரண்டிற்கும் நேரடி சம்பந்தம் இருக்கின்றது.




வணக்க ஸ்தலங்களுக்கும், பாடசாலைகளுக்கும் அருகாமையில் மது விற்பனை நிலையங்கள் அமைக்கப்படக் கூடாது என்று சட்டம் கூறுகின்றது.

ஆனால் இச்சட்டம் நுவரெலியா மாவட்டத்திலே மீறப்பட்டுள்ளமை கண் கூடாகும். இவற்றில் பெருந்தொகையான மதுவிற்பனை நிலையங்கள் மலையக தொழிற்சங்கவாதிகளாலும், அரசியல் வாதிகளாலுமே ஊக்குவிக்கப்படுகின்றன என்ற பொதுவான குற்றச்சாட்டும் இருக்கின்றது.

மலையகத் தொழிலாளியின் உடல் நலத்தையும், உழைப்பையும் மதுபானம் அட்டையாய் உறிஞ்சுகின்றது. இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நீங்கள் வெளியிட்ட கருத்தை நான் வரவேற்கின்றேன்.

இதையடுத்து இரண்டுவார காலத்திற்குள் உங்களுக்கு கிடைக்கவிருக்கும் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு நுவரெலியா மாவட்டத்தில் சட்ட விரோதமான அனைத்து மது விற்பனை நிலையங்களையும் மூடிவிடுங்கள்.

இதுதொடர்பான உங்களது நடவடிக்கையை எங்களுடன் சேர்ந்து முழு மலையகமும் அவதானித்துக் கொண்டு இருக்கின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் அதீத மதுபாவனையை ஒழிப்பதற்கும் வழிகாட்டும் - இப்படி மனோ கணேசன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஏ)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரே எல்லைகள் நிர்ணயம் செய்யவேண்டும்

## தொ. வி. மு. தலைவர் . அய்யாத்துரை ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு,ஜூலை27

''உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் மலையக இந்திய வம்சாவளித் தமிழர்கள் செறிந்து வாழும் தோட்டப் பிரதேசத்தில் பிரதேசசபை எல்லைகள், கிராமசேவையாளர் பிரிவு எல்லைகள் நிர்ணயம் செய்யப்படவேண்டும். அவ்வாறின்றி தேர்தல் நடைபெறும் பட்சத்தில் மலையகத் தமிழ் மக்களின் தொகுதிவாரியான பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்யக்கூடிய சூழல் உருவாகாது. எனவே, முதலில் எல்லைகள் தீர்மானிக்கப்பட வேண்டும்''

- என்று தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி. அய்யாத்துரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ளக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பெருந்தோட்டப் பகுதியில் பிரதேச சபைகள் மற்றும் கிராமசேவையாளர் எல்லைகள், எப்படி அமையவேண்டும் என்பது குறித்து மலையகத் தமிழ் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் சிவில் அமைப்புகள், தமது கருத்துகளை தேர்தல் மறுசீரமைப்புக் குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளன.

அவைகளை சரியான முறையில் செயல்படுத்துவதன் மூலமே மலையகத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அரசியல் பிரதிநிதித்துவமும் பாதுகாக்கப்படும்.

அரசு கடந்த காலங்களில் தேர்தல் மறுசீரமைப்பு ஆணைக்குழு முன் சமர்ப்பித்த யோசனைகளை அமுல்படுத்தாமல், தன்னிச்சையான முடிவுகளை எடுத்தது.

இதன் காரணமாக, மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அவர்களின் எண்ணிக்கைக்கேற்பத் தீர்மானிக்கப்படவில்லை. விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் ஓரளவு அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்தது.

எனவே, தற்போதைய தொகுதிவாரித் தேர்தல் முறையின் கீழ் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்படுவதற்கு எல்லைகள் தீர்மானிக்கப்படுவது அவசியமாகும்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ள இவ்வேளையில் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும், சிவில் அமைப்புகளையும் அழைத்து பேச்சு நடத்த வேண்டும்.

இது எல்லைகள் மீள் நிர்ணயத்திற்கு உசிதமாக இருக்கும். கடந்த காலத்தில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவங்கள் புறக்கணிக்கப்பட்டன.

நீங்கள் செய்யப்போகும் தேர்தல் மறுசீரமைப்பு மலையகத் தமிழ் மக்களை புறக்கணித்ததாக அமையக்கூடாது - இப்படி அய்யாத்துரை தெரிவித்துள்ளார். (ஏ)

# பிபிலை விகாரையில் திருடப்பட்ட புத்தர்சிலை மீட்பு: மூவர் கைது

பதுளை,ஜூலை 26

பிபிலை போதிருக்காராம விகாரையில் திருடப்பட்ட பெறுமதிமிக்க புத்தர்சிலை, மறைவிடமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சிலையை திருடியவர்களென்று கருதப்படும் மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஆசிரியர் ஒருவரும் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சிலையை ஏற்றி வந்த வாகனம் கராஜ் ஒன்றிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாகனத்தின் வர்ணத்தை மாற்றும் ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகரொருவருக்கு விற்பனை செய்வதற்காகவே சிலை பிபிலைக்கு கொண்டு வரப்பட்டதென கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரினால் மீட்கப்பட்ட சிலை, பிபிலை பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## சிற்றூர்திகளுக்கு விடை கொடுப்பார்களா? பிரயாணிகளின் கஷ்டம் தீருமா?

இன்று பலராலும் பேசப்படும் ஒரு விடயம் அபிவிருத்தியாகும். பத்திரிகைகளிலும் அபிவிருத்தி பற்றிய செய்திகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் குடாநாட்டில் மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும், போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி காணாமல் தேய்ந்த நிலையில் காணப்படுகின்றன. வசதி படைத்தவர்கள் சொந்த வாகனங்களில் பயணிக்கின்றனர். ஆனால் ஏனைய எழுபத்தி ஐந்து வீதமான மக்கள் அரச பேருந்துகள், தனியார் சிற்றூர்திகளையே நம்பி இருக்கின்றனர்.

அதிகாலையிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், நோயாளர்கள் எனப் பல தரப்பினரும் தமது பிரயாணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அரச பேருந்துகள் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. சிற்றூர்திகள் வீதிகளில் தவறவிட்டுச் செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்லும் பணிகளையே அவை மேற்கொண்டு வருகின்றன. சிற்றூர்திகள் என்ற பெயரில் 12 தொன்னுக்குட்பட்ட வசதிகளற்ற வாகனங்கள் பல வருடங்களாக மக்களை அல்லல்படுத்தி வருகின்றன. இந்தச் சிற்றூர்திகளில் சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள், வலது குறைந்தோர், இயலாத நிலையிலுள்ளவர்கள், நோயாளிகள் என்ற வேறுபாடுகளின்றி மூச்சுத் திணறும் அளவுக்கு மக்கள் ஏற்றப்படுகிறார்கள். ஊர்திக் காப்பாளரின் அச்சுறுத்தல், கண்டிப்பு என்பனவற்றை பொறுத்துக்கொண்டு வளைந்து கொடுப்பவர்களே இவற்றில் பிரயாணத்தை மேற்கொள்ள முடியும். ஏனென்றால் பிரயாணம் செய்வதற்கு அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்தகைய சிறிய ஊர்திகள் போக்குவரத்துச் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கேதான் நிலைமை இன்னமும் மாறவில்லை. யாழ்.மாவட்டத்தில் வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் போதாவது இத்தகைய சிறிய ஊர்திகளுக்குத் தடைவிதிக்க வேண்டும். சிறிய வண்டிகளில் ஒரு வழிப் பாதையால் மக்கள் ஏறி இறங்கும் போது படும் துன்பங்கள் அவர்களுக்குத்தான் தெரியும்.

ஆகவே இனியாவது இத்தகைய சிறிய சிற்றூர்திகளை விலக்கி வைத்து விட்டுப் பெரிய பஸ்வண்டிகளைச் சேவையிலீடுபட அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும். இந்த விடயத்தில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், அரச அதிபர் ஆகியோர் இனியாவது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும்.

சி.இ.ஆறுமுகம்

# அரசின் கைப்பொம்மையாக பொலிஸ் மா அதிபர்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

அரசின் கைப்பொம்மையாக பொலிஸ் மா அதிபர் மாறிவிட்டார் என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகின்றது. றுஹுணு பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அவர் தெரிவிக்கின்றார் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பு, பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

றுஹுணு பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் வெளியிட்ட தகவல்கள் மூலம் அவர் அரசின் கைப்பொம்மையாக செயற்படுகின்றமை தெரியவந்துள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் கடந்த 23ஆம் திகதி கருத்து வெளியிட்ட போது அது இயற்கை மரணம் என்றார்.

எனினும், 24 ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மாணவன் தாக்கப்பட்டதன் காரணமாகவே உயிரிழந்தார் எனத் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டின் நீதிக்கு என்ன நேரிடும்? இப்படி ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

(அ-சி)

# மரண அறிவித்தல்

## அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை நேற்று (26.07.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அந்தோனிமுத்துவின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி டேவிட்டின் அன்பு மருமகனும் அன்ரன் (மித்திரன்-கனடா), வனஜா ஜெயசீலன் (மானி/ மகளிர் கல்லூரி), கிரிஜா தவநாதன், றூபா ஜோண்சன், Sr.சுதர்சினி A.C. (கழு/கார்மேல் பற்றிமாக் கல்லூரி), ஸ்ரெலா அல்போன்ஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபத்திரா (கனடா), ஜெயசீலன் (யாழ்.மத்திய கல்லூரி), தவநாதன் (முகாமையாளர், மக்கள் வங்கி, நாவலர் றோட்), ஜோண்சன் (முகாமையாளர், A.C.I. Ltd, இரத்மலானை), அல்போன்ஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அகிலன், சுஜீவன் (கனடா), நிஷாந்தி, நிஷாந்தன், சங்கர், பிரஷாந், றொனேஷ், டிலான், எறல், றொஷி, ஏறன், அலெக்ஸ், அல்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதியஞ்சலி நிகழ்வு அவரது இல்லத்தில் இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகி பி.ப.4 மணிக்கு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
மகன்-அன்ரன் (மித்திரன்)

# மரண அறிவித்தல்



## திரு சிவதாசன் சின்னத்தம்பி

(சிற்றூர்த்திச் சேவை சங்க சாரதி, தென்மராட்சி)

யாழ்ப்பாணம் தென்மராட்சி வடவரணி மாசேரியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாசன் சின்னத்தம்பி அவர்கள் 02.07.2010 வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார். அன்னார், சின்னத்தம்பி (முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர்) வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், தர்சினி (டென்மார்க்), நிரஞ்ஜினி ஆகியோரின் அன்பு சகோதரனும், பாலதரன் செல்வராஜா (டென்மார்க்) அவர்களின் அன்பு மைத்துனரும், லெஷானா (டென்மார்க்) அவர்களின் அன்பு மாமனும், வரதராசா சுப்பிரமணியம் (பிரான்ஸ்), தவமணி வரதராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும், செல்லத்துரை (நெல்லியடி-டிஸ்கோ), செல்வராசா, குமாரு, கந்தசாமி, (E.V.K), சின்னையா, சின்னத்தம்பி, சுசி, சுகந்தா, கனகேஸ்வரி, விசாலாட்சி, மீனாட்சி ஆகியோரின் பெறாமகனும், சிவதேவி (கனடா), சிவசோதி, சிவசுதன் (கனடா), காலஞ்சென்ற சிவசாம்பவி (கனடா), சிவகுமாரி, கந்தசாமி (ஜேர்மனி), ராசாத்தி (ஜேர்மனி), சதீஸ்குமார் (இந்தியா), லவேந்திரகுமார் (இலண்டன்), தினேஸ்குமார், றமேஸ்குமார், பானுசுதன், நிருஜா, பிரசாந், சுலக்ஷனா (கனடா), சுதர்சனா, சயந்தா (கனடா), சர்மினா, பாலேந்திரன், தெய்வேந்திரன், காலஞ்சென்ற ராசு (ஜேர்மனி), ரஞ்சி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : B. சின்னத்தம்பி (தகப்பன்)
சி. வள்ளியம்மை (தாய்)
கரவெட்டி, T.P. 0770333409


## வீடு வளவு விற்பனைக்கு

வேரவல், இளவாலை வடக்கு, இளவாலை என்ற இடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் அதனுடன் 10 பரப்புக் காணியும் சிறுவிளான் என்ற இடத்தில் தனியான கிணற்றுடன் 42 பரப்புத் தோட்டக்காணியும்விற்பனைக்குண்டு. குறிப்பு: தரகர் தேவையில்லை தொடர்புகளுக்கு: தொ.பே.021 3210902


## கல்விசார் வளவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 27

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் கல்வியியற்பீடம்சார் கற்கை நெறிகளுக்குக் கல்விசார் வளவாளராகக் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கல்வியியல் முதுதத்துவமாணி அல்லது கல்வியியல் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்குத் தகுதியானவர்கள் தமது சுயவிவரக் கோவையினை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஜ-16)


## நாடகம்



அராலியூர் கலாபூஷணம் ந.சுந்தரம்பிள்ளையின் "ஒரு பாடசாலை முன்னேறுகிறது" நாடகம்

இலங்கை வானொலி தேசிய சேவையில் 31.07.2010 சனிக்கிழமை இரவு 10 மணிக்கு ஒலிபரப்பப்படுகிறது. Internet இல் கேட்கலாம். எல்லோரும் கேளுங்கள்!

(100900)

aat கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Tally

ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே!

Certified Computer Accountant Course

2-3 Months

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் பெருமை



'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இதை விளக்குறதுக்கு எத்தனை பேர் எவ்வளவு கதைகளைச் சொல்லியிருக்காங்கள். அந்தக் காலத்தில் வியாசர் தன்னோட மகன் சுகருக்கு ஒரு கதை சொன்னாராம். நரசிம்ம புராணத்திலே அது வருதாம். அதை ஒரு பெரியவர் சொல்லியிருக்கார். அந்தக் கதையை நான் இப்ப உங்களுக்குச் சொல்கிறேன். கோசல தேசத்திலே யக்ஞசர்மா அப்படியின்னு ஒருத்தர் இருந்தார். அவரோட பிள்ளை தேவசர்மா. இந்த தேவசர்ம குருகுலம் முடிச்சுவிட்டு வீட்டுக்குபோனவேளை அவர் அப்பா காலமாயிட்டார். உடனே இவர் விரத்தியடைந்து ஊரை விட்டே கிளம்பிப் போய் இன்னொரு ஊரில் தங்கி விட்டார்.

தினமும் பகவானைத் தியானம் பண்ண வேண்டியது, பிச்சை வாங்கி சாப்பிட வேண்டியது. இப்படியே ஓடிக்கிட்டிருந்தது காலம். ஒருநாள் காலையிலே ஆற்றுக்குப் போனார். குளித்து வேஷ்டியை துவைத்துக் கரையிலே காயப்போட்ட அந்தச் சமயத்திலே ஒரு காகமும், ஒரு கொக்கும் அந்தப் பக்கமாக வந்து வேட்டியைப் பார்த்துத் தூக்கி கொண்டு கிளம்பின. தேவசர்மா அதைப் பார்த்துவிட்டு ரொம்பவும் கோபமாக அந்தப் பறவைகளைப் பார்த்தார். அவ்வளவுதான் அந்த இரண்டும் அப்படியே எரிஞ்சி சாம்பலாயிட்டுது. அவ்வளவு வலிமை அவருக்கு உண்டு.

அப்பேர்ப்பட்ட தேவசர்மா, அடுத்தநாள், சாவித்திரிங்கற ஒரு பதிவிரதை வீட்டுக்குப் பிச்சை எடுக்க வந்தார். இவர் வந்து வாசலிலே நின்றுகிட்டே இருந்தார். அந்த அம்மா ரொம்ப நேரமா இவரைக் கவனிக்கவேயில்லை. அவங்க வீட்டுக்காரருக்கு ஏதோ பணிவிடைகள் செய்து கொண்டு இருந்தாங்கள். அதையெல்லாம் முடித்துக்கொண்டு இவர் பிச்சை போடுறதுக்காக வெளியே வந்தார். இவர் உடனே அந்த அம்மாவைக் கோபமா முறைத்து பார்த்தார். ஆற்றங்கரையிலே காகத்தையும் கொக்கையும் முறைச்சு பார்த்தாரே அதே மாதிரி! " என்ன அங்கே அந்தப் பறவைகளை எரிச்சது மாதிரி என்னையும் எரிச்சிடலாம்னு பார்க்கிறியா'' என்று கேட்டார் அந்த அம்மா. இவருக்கு தூக்கி வாரிப் போட்டது. ''ஆற்றங்கரையிலே நடந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்!'' என்றார். அதுக்கு அந்த அம்மா சொன்னார், " என் கணவருக்கு சேவை செய்கிறதுதான் என்னுடைய ஒரே தர்மம். அதனாலேதானே எங்கே என்ன நடந்தாலும் எனக்குத் தெரியும்!'' என்றார். தேவசர்மா மலைச்சு போயிநின்றார். அதுக்கப்புறம் அந்த அம்மா இவருக்கு 'அட்வைஸ்' பண்ண ஆரம்பித்தார்.

" இதோ பாருப்பா... உன்னோட தகப்பானார் இறந்து போன உடனே, நீ உங்க ஊரைவிட்டு இங்கே ஓடிவந்து விட்டியே... உன்னோட தாயார் அங்கே தனியா இருக்காங்களே... அவங்களை யாரு கவனிக்கிறது? அனாதையா இருக்கிற அந்த விதவைத் தாயாரை காப்பாத்தாமல் இங்கே இருந்து இப்படிப் பிச்சை எடுத்து வயிறு வளர்த்துக்கிட்டிருக்கிறியே... உனக்கு வெட்கமா இல்லையா? பத்து மாசம் சுமந்தவங்களைப் பரிதவிக்க விட்டிட்டு வந்திக்கிறியே! என்ன நியாயம்?

நீ இப்போ செய்துக்கிட்டு இருக்கிற தியானம், தவம் எதுக்கும் பிரியோசனமில்லை. எவனுடைய வாழ்க்கை வீண். எவன் ஒருத்தன் தன்னுடைய தாயாரைக் காப்பாத்தறானோ, தயார் சொல்கிறதைக் கேட்டு நடக்கிறானோ அவன் செய்யிற எல்லா கர்மங்களும் இகலோகத்திலேயும் சரி பரலோகத்திலேயும் சரி நல்லதையே செய்யும். அதனாலே நீ உடனே உங்க ஊருக்குத் திரும்பிப் போ.. உன்னோட தாயாரைக் காப்பாற்று!'' அப்படின்னு புத்திமதி சொன்னாங்க அந்த அம்மா. தேவசர்மா உடனடியா ஊருக்குத் திரும்பிப் போனார். தாயாரைக் காப்பாற்றினார். அதுக்கப்புறம் அவருக்கு எல்லாம் நல்ல படியா நடந்ததாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

# பிள்ளையார் பெருமை

உலகத்தைக் குடும்பமாகவும் குடும்பத்தை உலகமாகவும் விளங்கிய இரண்டு சுவாமிகள்தான் முருகனும் பிள்ளையா ரும்.ஒரு அப்பாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சாது, இளையவன் சுறுசுறுப்பு. மூத்தவன் அம்மாவுக்கு ரொம்ப உதவி. சமையலுக்கு உதவி செய்வதில் இருந்து கடைக்குப் போவதும் அப்பாவுக்கும் உதவி செய்வார். அவன் இல்லை என்றால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கையே காணாமல்போன மாதிரி.

சின்னவன் படு சுட்டி. எப்போதும் பரபரப்பாகத்தான் இருப்பான். தெருவின் நற்பணிகளுக்கு அவன் தலைவன் வேறு. எப்போதும் அவனைத் தேடி வீட்டுக்கு யாராவது வந்தபடியே இருப்பார்கள்.

அப்பாவின் நண்பர்கள் சின்னப்பையன் என்ன செய்கிறான் என்று கேட்டால், அவனா அவன் தலைவன் மாதிரி. ரத்ததானம், அறியாமை ஒழிப்பு என்று உலகம்தான் அவனுக்கு முக்கியம். முதல் பையன்தான் என்ன பாசம். என்ன பொறுப்பு. அவன்தான் பிள்ளை எனக்கு என்று புராணம் படிப்பார்.

இதே கதைதான் கைலாயத்தில் இருக்கும் முருகன் சின்னவர். பிள்ளையார்தான் அப்பா, அம்மாவுக்குச் செல்லப்பிள்ளை.

அதனால்தான் அவர் பிள்ளைகளின் கடவுள். சிதறுகாய் போட்டதும் குழந்தைகள் ஓ என்று அலறிக்கொண்டு ஓடி வந்து ஆனந்தக் கூத்தாடி அவற்றை எடுப்பார்கள். பிள்ளைகளோடு பிள்ளையாக அவர் ஒன்றிப் போவதால் அவர் பிள்ளையார்.

பிள்ளையார் பெற்றோரால் நேசிக்கப்பட்டபிள்ளை மட்டுமல்ல. பெற்றோரை நேசிக்கும் பிள்ளை. அபரிதமான அன்பைக் கொட்டி நம்மை வளர்த்தவள் அன்னை. அவள் அன்புக்கு ஈடு கிடையாது. பத்து மாதம் சுமந்து மரணத்தைத் துச்சமாகக் கருதி நமது ஜனனத்தை வழங்கிய தாய் ரொம்பவும் பெரியவள். அதில் பத்தில் ஒரு பங்கு அளவு அன்பு காட்டுவது அவசியம்.

திருவிளையாடல் புராணம் என்ற நூலில் இந்த உண்மையைப் பரஞ்சோதி முனிவர் விளக்குகின்றார்.

சுகி.சிவம்.

# முதுமையில் இன்பம்

ஒருவயதான தாத்தா. எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவார். என்ன தாத்தா இப்படி வயதான காலத்தில் கண்டதையெல்லாம் சாப்பிடலாமா? என்று கேட்டால் இது எதனையும் தள்ளாத வயது என்று பதில் சொல்லுவார்.

வயதான காலத்தில் சந்தோஷமாக இருக்க முடியுமா? முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். முதுமையில் இன்பமாக இருப்பதற்கு மூன்று வழி. ஒன்று உடல்நலம் இரண்டாவது மனநலம். மூன்றாவது குடும்பத்திலேயும் சமுதாயத்திலேயும் நல்ல இடம் இவ்வளவு தான்.

முதலில் உடல் நலம் வயதான காலத்தில் பசியும் சுவையும் குறைவாக இருக்கும். எனவே கொஞ்ச உணவாக இருந்தாலும் சத்துள்ள உணவாக உண்ண வேண்டும்.

கேழ்வரகு, கோதுமை,கீரை, பட்டாணி, கடலை போன்றன நார்ச்சத்து ,புரதச்சத்து, இரும்புச் சத்து அதிகம். இவ்வகையான உணவுகளை உண்ணுதல் நல்லது.

அடுத்ததாக உடற்பயிற்சி ரொம்ப அவசியம். அதனால் உடம்பும் மனசும் நன்றாக இருக்கும். நடப்பது கூட ஒரு உடற்பலம் தரும்.

மனநலம் தனியாக இருப்பதை விடுத்து புத்தகம் படிப்பது, வானொலி கேட்பது, நண்பர்களைக் கண்டு உரையாடுவது போன்றன பொழுது போக்காகவும் மனதுக்கு இன்பத்தையும் தரும்.

ஒரு தாத்தாவுக்கு நூறாவது பிறந்தநாள். அவரிடம் ஆசீர்வாதம் வாங்கும்போது, தாத்தா நாங்கள் உங்களது அடுத்த பிறந்த நாளுக்கும் உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கவேணும் என்று பணிவாகக் கேட்டார்கள். அதற்குத் தாத்தா சொன்னார், கவலைப்படாதீர்கள் நிச்சயம் அது நடக்கும். நீங்கள் சின்னப்பிள்ளைகள் தானே அதற்குள் உங்களுக்கு ஒன்றும் ஆகாது என்றார்.

கோ. சுவாமிநாதன்.

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

உலகப் புகழ் பெற்ற சிலர் நம்மிலிருந்து எப்படி வேறுபட்டவர்கள்? என்ன வேறுபட்டவர்கள்? நம்மைப்போலவே எல்லாம் இருந்தும் அவர்கள் பெயரின் அகல நீளம் பிரமாண்டமாய் இருக்கிறது. அவர்கள் வாழ்நாள் நூற்றாண்டு விழாகக் கண்டு நீண்டு கொண்டே போகிறது. உதாரணம் யேசுபிரான்.

இரண்டு நிமிடத்திற்கு முன்பு கேட்ட பெயரை மறந்துபோய் திரும்பக்கேட்டு நினைவில் செருகுகிறோம். ஆனால் இரண்டாயிரம் வருடமாய் இந்த மனிதரை உலகம் நினைவில் வைத்திருக்கிறது. உயிர்க்குலத்தின் மீது அவருக்கு அன்பு இருந்தது. பொய்யற்ற, ஜோடிப்பற்ற, செயற்கையற்ற, நிஜமான அன்பு இருந்தது. அவரது நிழல் கோடிக்கணக்கான ஆடுகள் இளைப்பாறக் கூடிய வகையில் அகல நீளமான ஆலமரமாகிப் பரந்து பெருகியது.

அவரைவிடக் கிழட்டுப் புத்தரை எவனும் மறக்க முடியவில்லை. எல்லை கட்டிக் கொள்ளாத தூய நல்லன்பு அந்த மனிதரிடம் இருந்ததால் உலகம் அவரைக் காதலித்தது. நிபந்தனையற்ற, கலப்படமற்ற, எதிர்பார்ப்பற்ற, பிறர் நலமே கருதும் பிழையற்ற உயிர்க்குலம் முழுமைக்குமான அன்பு அவரை மறக்க முடியாதபடி செய்து விட்டது.

சிங்கத்தைத் தடவிக்கொடுத்து யானையைத் தொட்டுக் கொடுத்து அன்புள்ளவன் சாவதில்லை என்று அமரத்தனத்தை அறிவித்த ... முடியுமா? " உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்'' என்பது எத்தனை பெரிய மகா வாக்கியம்.

இன்றைக்கு பலரிடத்தில் சனிப் பிணம் தனித்துப் போகாது என்ற பழமொழி உதிர்த்து கோழியை உடன் கட்டை ஏற்றுகிறார்கள். அப்படிச் சொல்கிறவர் கூடப் போகலாமே! அவர் ஏன் யோசனை சொல்லிவிட்டு நழுவி விடுகிறார்.

முத்தாய்ப்பாக ஒரு செய்தி சொல்லட்டுமா? அண்ணல் நபிகள் ஒரு முறை அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தபோது அவரது மேல் துணி தரையில் தழையத் தழைய கிடக்கிறது. அப்போது தொழுகைக்கான அழைப்புக் கேட்டதும் எழப்போன நபிகள் நாயகம், பூனைக்குட்டி ஒன்று தமது மேலாடை மீது தூங்குவதைக் கண்டார்.

அதன் தூக்கம் கலையுமே என்று யாரும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத காரியத்தைச் செய்தார். தமது சகோதரியை அழைத்து கத்தரிக்கோல்கொண்டு வரச் சொல்லி துணியைத் துண்டித்துக் கொண்டார். பூனை சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. இப்போது புரிகிறதா? உலகம் எத்தகையோரைத் தொழுகிறதென்று!

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

இதைப் புரிந்துகொண்டால் இந்த நாள் ஓர் இனிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் – 01 | பகுதி - I

* சரியான விடையைத் தெரிவுசெய்க

01. உற்பத்திக் காரணிகளின் ஒன்றிப்பான இணைப்பாக உள்ள தொடர் எதுவாக இனங் காணலாம்?
   1) இயற்கை வளம், ஊழியம், மூலதனம்.
   2) சமூக முதல், இயற்கை மூலதனம், மனித மூலதனம்.
   3) இயற்கை வளம், மனித வளம், மனிதனால் உருவாக்கப்பட்ட வளம்.
   4) நிலையான மூலதனம், சுழலும் மூலதனம்.
   5) இயற்கை வளம், மனித வளம்.

02. உற்பத்தி வாய்ப்புச் செலவு உள்ளதும் நுகர்வில் வாய்ப்புச் செலவு இல்லாததுமாகக் கருதப்படுவதாக உள்ளதை இனங்காண்க.
   1) மழை நீர். 2) இயற்கை நீர்வீழ்ச்சி.
   3) அரச நுகர்வுச் செலவு.
   4) வக்கீல் ஒருவருக்கான கட்டணம்.
   5) சமுர்த்தி நிவாரணம்.

03. மறைமுக வேலையின்மை என்பதிலிருந்து விளங்குவது யாது?
   1) குறிப்பிட்ட ஊழியர்களுக்கு வேலைசெய்ய விருப்பமின்றித் தொழிலின்றி இருத்தல்.
   2) குறிப்பிட்ட உற்பத்திக்கு ஊழியர்கள் திறமையாச் செயற்படல்.
   3) குறிப்பிட்ட உற்பத்தியில் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் ஒதுக்கப்பட்டிருத்தல்.
   4) குறிப்பிட்ட உற்பத்திக்கு ஊழியம் முழுமையாகப் பயன்படல்.
   5) ஊழியர்களுக்கு எந்தவித தொழிலும் கிடைக்காத நிலையும் வேலையில் ஈடுபடாத நிலையும் ஆகும்.

04. உற்பத்தி இயல்தகவு வளையி (Production Possibility Curve) பின்வரும் எச் சந்தர்ப்பத்தில் எந்தவித அசைவும் இன்றி அவ்வாறே எல்லைகள் அமையும் எனத் தெரிக.
   1) வளப்பயன்பாடு திறமையடைதல்.
   2) புதிதாக வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட வளங்கள்.
   3) ஊழியத் தேர்ச்சித் திறன்கள் அதிகரித்தல்.
   4) உட்கட்டுமானங்களின் உருவாக்கம்.
   5) மேற்கூறிய யாவும்.

05. பருநிலைப் பொருளியல் தொடர்பாக அதன் உள்ளடக்கங்களாக இல்லாததைக் கண்டறிக.
   1) கேள்விக்கோட்பாடு, உற்பத்திச் செலவுக் கோட்பாடு.
   2) சென்மதி நிலுவை, நாணயமாற்று வீதம்.
   3) பொதுவிலை மட்டம், பொருளாதார வளர்ச்சி.
   4) முதலீட்டுக் கோட்பாடு, நுகர்வுக் கோட்பாடு.
   5) மேற்கூறிய யாவும்.


06. குறிப்பிட்ட பண்டம் ஒன்றில் கேள்வி, நிரம்பல் சார்புகள் வருமாறு: QD = 1125-50P, QS = 50P. இங்கு 20% மானியத்தை அரசு வழங்குகின்றது. இதன் விளைவாகப் புதிய சமநிலை விலை எவ்வாறு அமையும் எனத் தெரிக.
   1) 15/= 2) 10/= 3) 11.25/= 4) 13/=
   5) யாவும் தவறு.

07. X என்ற பண்டம் தொடர்பாக உள்நாட்டுக் கேள்வி, நிரம்பல் சக்திகள் இணைத்து சமநிலை நிர்ணயிப்பு இடம்பெறும் அதே தருணத்தில் குறிப்பிட்ட பண்டம் 1$ = 100/= என்ற நாணயமாற்று அடிப்படையில் தாராள இறக்குமதி இடம்பெறுவதாகக் கருதுக. இங்கு 25% நாணயப் பெறுமதி ஏற்றம் இதன் விளைவாகத் தற்போதைய இறக்குமதிக்கு யாது நிகழும்?
   1) இறக்குமதியளவு அதிகரிக்கும்.
   2) இறக்குமதியளவு குறையும்.
   3) இறக்குமதியளவு மாறாது.
   4) மிகை நிரம்பல் உருவாகும்.
   5) மிகைக் கேள்வி, மிகை நிரம்பல் ஏற்படாது.


08. பின்வருவனவற்றுள் தவறானதாக உம்மால் அடையாளப்படுத்தப்படுவது யாது?
   1) பதிலீட்டு விளைவு, வருமான விளைவு, இணைந்த கேள்வி வளையி ஒப்பீட்டு ரீதியில் மென்சாய்வுடையதாக அமையும்.
   2) இழிவுப் பொருள், கிபன் பொருள் இரண்டிற்கும் வருமான விளைவு எதிர்க் கணியமானதாக அமையும்.
   3) பதிலீட்டு விளைவை மட்டும் கொண்ட கேள்வி வளையி மென்சாய்வுடையதாக அமையும்.
   4) வருமான விளைவு, இழிவுப் பொருளுக்கு எதிர்க்கணியமாகவும் சாதாரண பண்டத்திற்கு நேர்க்கணியமாகவும் அமையும்.
   5) பதிலீட்டு விளைவு சாதாரண, இழிவுப் பண்டங்களுக்கு நேர்க்கணியமானதாக அமையும்.

09. X என்ற பண்டம் தொடர்பாக மிகைநிரம்பல் சார்பு - 1500+100P' எனவும், நிரம்பல் சார்பு 50P' எனவும் உள்ளது. ஒன்றுக்கு சமனான கேள்வி நெகிழ்ச்சியில் விலை, சம நிலை விலை என்பன முறையே எவ்வாறு அமையும்?
   1) 20, 20 2) 20, 15 3) 30, 15 4) 15, 15
   5) யாவும் தவறு.

10. இங்கு சமூகநலஇழப்பு பகுதியாக அமைவது,
   1) $P_1$, $P_2$, T, R.
   2) E, T, G
   3) $P_1$, $P_2$, T
   4) O, $P_2$, E, Q
   5) O, Q, T, P





11. இங்கு மொத்த நிலையான செலவு எவ்வாறு அமையும் எனத் தெரிக. அத்துடன் வெளியீடு 4 ஆக உள்ளபோது சராசரி நிலையான செலவு யாதாக அமையும் எனத் தெரிக.
   1) 50/=, 20/=
   2) 30/=, 40/=
   3) 100/=, 10/=
   4) 70/=, 15/=
   5) 60/=, 15/=




12. குறிப்பிட்ட நாடொன்றில் மொத்தத்தேசிய உற்பத்தி (Gross National Production) மதிப்பிடல் தொடர்பான பிரச்சினை எனக் கொள்ளமுடியாததாக உம்மால் இனங் காணப்படக்கூடியது,
   1) புற விளைவுகளைப் புறக்கணித்தல்.
   2) நடப்பு மாற்றல்களைக் கணக்கெடுப்பதில்லை.
   3) பெண்களின் பங்களிப்புகள் உள்வாங்கப்படாமல் விடுதல்.
   4) சட்ட ரீதியற்ற முறையில் மதுபானம் வடித்தல்.
   5) பல்கணிப்புப் பிரச்சினைகள்.

13. பொருளாதாரச் சுபீட்சத்திற்கு அரசு பொருள் சேவை மீதான நடப்புச் செலவீனத்தை 120 மில்லியனால் அதிகரித்தல் or 120 மில்லியனால் நேர்வரியைக் குறைத்தல் எனத் தீர்மானிக்கிறது. இங்கு எல்லைச் சேமிப்பு நட்டம் (Marginal Propensity to consume) 0.25 ஆகவும் உள்ளது. இங்கு அரசின் இரு விதமான செயற்படுத்தலின் விளைவுகள் எவ்வாறு அமையும்?
   1) இரண்டும் ஒரே பெறுமதியாக சமநிலை வெளியீட்டை உயர்த்தும்.
   2) அரச செலவே பெருமளவில் சமநிலை வெளியீட்டை உயர்த்தும்.
   3) வரி விதிப்பின் குறைப்பு சமநிலை வெளியீட்டைப் பெருமளவால் உயர்த்தும்.
   4) இரண்டு செயற்பாடும் சமநிலையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது.
   5) இரண்டு செயற்பாடும் சமனிலை வெளியீட்டை ஒரே அளவாகக் குறைக்கும்.

14. நுகர்வுக் கோட்டின் சரிவு முறையே 0.5, 0.7 ஆகவும் உள்ளது. முதலீட்டுக் கோட்டின் சரிவுகள் முறையே 0.1, 0.2 இரண்டாம் கட்டத்தில் சமநிலை வெளியீடுபெருக்கி யாது?




   1) 20000, 5 2) 20000, 10
   3) 10000, 5 4) 5000, 5
   5) யாவும் தவறு.

15. தேசிய கணக்குகளைக் கணிப்பீடு செய்யும்போது பின்வருவனவற்றின் கணிப்பீட்டில் உள்வாங்கப்படுவதை ஆராய்க.
   1) மாணவன் ஒருவன் தனது வீட்டில் இருந்து பெறும் மாதாந்தக் கொடுப்பனவு.
   2) இளைப்பாறிய அரச ஊழியன் ஒருவன் பெற்ற அரச ஓய்வூதியக் கொடுப்பனவு.
   3) சூறாவளி ஒன்றினால் வாழிடங்களுக்கு ஏற்படும் நட்டம்.
   4) மன்னாரை அண்மித்த வடகடலில் பல மில்லியன் பெறுமதியான பெற்றோலியப் படிவுகள் கண்டறியப்பட்டன.
   5) வீட்டுக்கூலி வீட்டுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படுதல்.

16. வெளித்தள்ளுகை விளைவு (Cording - Out effect) என்பதனைச் சரியாக வெளிப்படுத்துவது யாது?
   1) அரசு, கல்வி, சுகாதார சேவையை அனைத்து மக்களுக்கும் வழங்கும் செயற்பாடு.
   2) தனியார் துறை அரசு வழங்காத நலச்சேவைகளை உயர்ந்த விலையில் வழங்குதல்.
   3) குறைந்த வருமானம் பெறும் வறியோருக்கு நிவாரணம் வழங்குதல்.
   4) அரசானது கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற சேவையை வழங்கும்போது தனியார்துறை பாதிக்கப்படல்.
   5) அரசு தனியுரிமை சக்தியைத் தடுக்கும் செயற்பாடு ஆகும்.

17. பின்வரும் கருத்துக்களில் தனியார் நடப்பு மாற்றலுக்கான உதாரணமாக அமைவது யாது?
   1) வீடமைப்புக்கான நன்கொடை.
   2) மின்சார அபிவிருத்திக்கான நன்கொடை.
   3) சமுர்த்தி நிவாரணம்.
   4) மீனவத் தொழிலாளர்களுக்கான இலகுகடன்.
   5) வீதி அபிவிருத்திக்கான நடப்பு மாற்றங்கள்.

18. வரி இசைவு தொடர்பாகச் சரியாக இனங்காணக்கூடியது யாது?
   1) அரசின் வரிவிதிப்பு பொருளாதாரத்திற்கு நன்மையளித்தல்.
   2) அரசு வரியை விதிக்கும்போது மக்கள் தாமாகவே முன்வந்து வரியைச் செலுத்துதல்.
   3) ஏழை, பணக்காரன் என்ற வர்க்க வேறுபாட்டை நீக்கி சமத்துவம் பேணல்.
   4) அரசு வரியை விதிக்கும்போது சந்தைப் பொறிமுறை ஒழுங்காகச் செயற்படல்.
   5) பணவீக்க பணச்சுருக்கம் ஏற்படாதவாறு வரிநிர்வாகம் அமைதல்.

19. அரசாங்க வருவாயில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு வீதமாக வரி வருவாய் பங்களிப்பு வீதம் 2008 இல் எவ்வாறாக உள்ளது எனத் தெரிக.
   1) 12 % 2) 13 % 3) 14.9 % 4) 24 % 5) 17 %

20. அரச பாதீடு தொடர்பாக நடப்புச் செலவீனம் 2008ஆம் ஆண்டில் உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக எவ்வாறான பெறுமதியாக உள்ளதெனத் தெரிக.
   1) 13.5 % 2) 17 % 3) 2.2 % 4) 13 % 5) 12 %

By: S.S.சிறீ B.Com (Spl), DMI, Jaffna.

இவ் ஆசிரியரின் இலவசக் கருத்தரங்கு ஒன்று இன்றும் நாளையும் Rotaract Club இன் அனுசரணையுடன் Higher Study, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

அனுசரணை
ROTARACT CLUB JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் - 01 | பகுதி - II

✱ பகுதி 'அ' இல் இரண்டு வினாக்களுக்கும், பகுதி 'ஆ' வினாவிற்கும் விடை தருக.

## பகுதி 'அ'

01. பின்வரும் கூற்றுக்கள் உம்மால் ஏற்கக் கூடியதா இல்லையா எனக் கூறி காரணம் தருக.
   1) ஒரு தேவை பூர்த்தி செய்யப்பட இன்னொரு புதிய தேவை தோற்றம்பெறல். இதன் விளைவாக அருமை என்பது உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் பொது வானது ஆகும்.
   2) இலவசப் பண்டம் அனைத்தும் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டது.
   3) மாறா அமையச்செலவு நடைமுறைக்கு பொருத்தப்பாடான ஒன்றாகும்.
   4) நபர் ஒருவரிடமுள்ள சொந்த நிதி முதலீடாகினால் அமையச் செலவுகள் எதுவும் ஏற்படாது.
   5) வேலைக்கு அமர்த்தப்படாத ஊழியம் வேலைக்கு அமர்த்தப்படும்போது அமை யச் செலவு காணப்படும்.

02. 1) பொருளாதாரக் கட்டமைப்பு என்பதை விளக்கி அதில் தீர்மானம் எடுக்கும் பிரி வினரை முன்வைக்குக.
   2) பொருளாதார அமைப்பை வகைப்படுத்தும் முக்கிய நியதிகளை முன்வைக்குக.
   3) குறிப்பிட்ட பொருளாதார முறைமை ஒன்றின் செயலாக்கத்தை மதிப்பீடு செய் வதில் பயன்படுத்தக்கூடிய தகுதி விதிகளை முன்வைக்குக.
   4) சமூகம் ஒன்று முகங்கொடுக்கும் பின்வரும் அடிப்படைப் பிரச்சினைகளை விளக்குக
      அ. வளப்பகிர்வு. ஆ. உற்பத்தி.
      இ. உற்பத்திப் பகிர்வு.

03. 1) எல்லை வெளிவாரி விளைவு (Marginal Externalities), கலப்பு வெளிவாரி விளைவு (Multiple Externalities) என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.
   2) வெளிவாரிகள் உள்ள நிலையில் மிகை நுகர்வு, குறை உற்பத்தி, தோன்றும் சந்தர்ப்பங்களைத் தனித்தனி வரைபுகளில் குறித்துரைக்குக.
   3) நிறைவான போட்டி நிறுவனம், தனி உரிமைப் போட்டி நிறுவனம் இரண்டி னதும் நீண்டகால சமநிலைகளின் உத்தமமான முறையியலான வளப் பயன் பாடு நிலவுமா என பொருத்தமான வரைபுகளில் வேறுபடுத்தி ஆராய்க.
   4) தனி உரிமை நிறுவனம் (Monopoly) தனது உற்பத்தியை நெகிழ்ச்சி உள்ள பகுதி யில் வைத்திருப்பதாக கூறப்படுவதை ஆதாரப்படுத்துக.

04. 1)

| Units of labour | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Total Products (Quintals) | 80 | - | - | 368 | - | - | 504 | - | 495 | - |
| Marginal Products (Quintals) | - | 90 | - | 98 | - | 50 | - | 0 | - | -15 |
| Average products (Quintals) | - | - | 90 | - | 86 | - | 72 | 63 | - | 48 |

   அ. காட்டப்பட்ட அட்டவணை தொடர்பான மொத்த உற்பத்தி, எல்லை உற் பத்தி சராசரி உற்பத்திகளைக் கணிப்பிடுக.
   ஆ. வரைபு ஒன்றின் மூலம் TP, AP, MP வளையிகளைக் காட்டுக.
   இ. எல்லை உற்பத்தி நடத்தை, சராசரி உற்பத்தி நடத்தை தொடர்பாக உம் மால் கூறக்கூடியவற்றை வெளிப்படுத்துக.
   2) குறுங்காலத்தின் போதான மொத்த நிலையான செலவு, மொத்த மாறும்செலவு தொடர்பான தொழிற்பாட்டை வேறுபடுத்துக.

## பகுதி 'ஆ'

05. 1) கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு கூற்றிலும் உள்ள வேறுபாடுகள் பற்றி உமது கருத்தைத் தருக.
   அ. குறிப்பிட்ட ஓராண்டு காலப்பகுதியில் சந்தை விலையிலான மொத்தத் தேசிய வெளியீடு 150 மில்லியன் ரூபாவைக் காட்ட தேசிய வருமானம் 120 மில்லியன் ரூபாவைக் காட்டியது.
   ஆ. பேரளவிலான தலா தேசிய உற்பத்தி குறிப்பிட்ட வருடத்தில் 500,000 ரூபாவை வெளிப்படுத்தும் நிலையில் அதே ஆண்டில் மெய்த் தலாத் தேசிய உற்பத்தி 450,000 ரூபாவை வெளிப்படுத்தியது.
   2) மொத்தத்தேசிய உற்பத்தி மதிப்பீட்டில் தோற்றம் பெறுகின்ற பிரச்சினைகள் முக்கியத்துவங்கள் பற்றி ஆராய்க.
   3) குறித்த பொருளாதாரம் ஒன்றில் குறிப்பிட்ட வருடத்திற்கான கற்பிதமான தரவு கள் பில்லியனில் தரப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி கீழே காட்டிய வற்றிற்கான கணிப்பீட்டைச் செய்க.

| | |
|---|---|
| ஊழியருக்கான வருவாய் | 500 |
| தேறிய முதலீடு | 400 |
| தேறிய வட்டி | 100 |
| பங்கிடப்பட்ட இலாபங்கள் | 50 |
| வாடகை | 90 |
| வர்த்தக முயற்சிகள் மீதான வருமான வரி | 20 |
| பங்கிடப்படாத இலாபங்கள் | 40 |
| சென்மதி நிலுவை நடப்புக்கணக்கு மீதி | (250) |
| சென்மதி நிலுவை நடப்பு மாற்றல் தேறியது | 150 |
| தேறிய காரணி வருமானம் | 50 |
| பெறுமானத்தேய்வு | 10 |
| பொருள் சேவை மீதான அரசநடப்புச் செலவு | 400 |
| அரச மாற்றல் செலவு | 100 |
| செலவிடக்கூடிய வருமானம் | 1,000 |
| தனியாள் சேமிப்பு | 400 |
| தேறிய நேரில் வரி | 150 |
| பொருள் காரணியல்லா பணி ஏற்றுமதி | 300 |

   அ. வருமான வழியில் சந்தைவிலை மொத்தத்தேசிய உற்பத்தியை மதிப்பிடுக.
   ஆ. செலவு வழியில் சந்தைவிலையிலான மொத்தத்தேசிய உற்பத்தியை மதிப்பிடுக.
   இ. தேசிய வருமானத்தை மதிப்பிடுக.
   ஈ. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு.
   உ. சாதனக்கிடைப்பனவு, பயன்பாட்டைக் காட்டுக.

06. கீழே சமனிலை தேசிய வருமான மதிப்பீடு தொடர்பான கற்பனைத் தரவுகள் மில் லியனில் காட்டப்படுகின்றன.

| | |
|---|---|
| தனியார் நுகர்வு (C) | = 1000 + 0.8 YD |
| முதலீடு (I) | = 500 + 0.1 Y |
| அரச செலவு (G) | = 600 |
| அரச நேர்வரி (TD) | = 200 + 0.25 Y |
| அரச மாற்றல் (R) | = 200 |
| இறக்குமதி (M) | = 100 + 0.1 Y |
| ஏற்றுமதி (X) | = 300 |

   1) சமனிலை வெளியீட்டை மதிப்பிடுக.
   2) உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் சமனிலையைக் காட்டுக.
   3) வருமானப் பெருக்கியை மதிப்பிடுக.
   4) சென்மதி நிலுவை தொடர்பாக தேறிய ஏற்றுமதி யாது?
   5) வரிப்பெருக்கியை மதிப்பிடுக.
   6) அரச பாதீட்டு மீதி யாது?

07. 1) பின்வருவனவற்றிற்கு வேறுபடுத்தி விளக்குக.
      அ. சிறப்புப்பண்டம், தீங்கு விளைவிக்கும் பண்டம்.
      ஆ. தூய பொதுப்பண்டம், போலிப் பொதுப்பண்டம்.
   2) "சமூக நீதி" என்பதை அரசு ஏற்படுத்த வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இதனை விளக்கி எவ்வகையான சாதனங்களின் உபயோகம் மூலம் சமூக நீதியை அரசு ஏற்படுத்தலாம் எனக் குறிப்பிடுக.
   3) வரி விதிப்பின் மிக முக்கிய பண்புகளாகிய நடுநிலைத் தன்மை, சமத்துவத் தன்மை இரண்டையும் வேறுபடுத்துவதோடு இலங்கை தொடர்பில் இரண்டை யும் முழுமை திறமையாகப் பேணலாமா எனக் காரணங்காட்டி விளக்குக.

08. 1) பின்வருவன அரச பாதீட்டில் எவ்வாறான தலைப்பின் கீழ் உள்வாங்கப்படும் என ஆராய்க. (மில்லியன்)
      அ. சம்பளச் செலவு - 100
      ஆ. வறியவர்களுக்கான சமுர்த்தி நிவாரணம் - 50
      இ. உண்மைச் சொத்துக்களின் கையேற்பு - 100
      ஈ. மாணவர்களுக்கான இலவச சீருடை - 20
      உ. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புக்கு நாளாந்த தேவைக்கான மாற் றல்கள் - 40
      ஊ. வீடமைப்புக்கு அரசினால் வழங்கப்பட்ட மாற்றங்கள் - 200
   2) அ. தற்போது இறைக்கொள்கை அடைவது தொடர்பான இடர்பாடுகளைக் குறிப்பிடுக.
      ஆ. வருமான வரியை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறை களை ஆராய்க.
      இ. வரியல்லா வருமானத்தை அதிகரிப்பதற்குத் தற்போது அரசு மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்க.
      ஈ. பாதீட்டுப் பற்றாக்குறை-முதன்மை பற்றாக்குறை வேறுபடுத்துக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் - 02 | பகுதி - I

✱ சரியான விடையைத் தெரிவுசெய்க.

01. பின்வருவனவற்றில் சரியான கூற்றாகக் கருதப்படுவது,
   1) பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்புக் கண்டிப்பாக பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும்.
   2) உழைப்பாளர் கூலியில் ஏற்படும் அதிகரிப்பு கண்டிப்பாக பணவீக்க விளைவு களை ஏற்படுத்தும்.
   3) வட்டி வீத அதிகரிப்பு மொத்தக் கேள்வியில் குறைப்பை உண்டுபண்ணும்.
   4) ஆவணத்தின் விலை வீழ்ச்சியடையும்போது நபர்கள் கைகளில் வைத்திருக் கும் பணத்தின் அளவு அதிகரிக்கும்.
   5) வட்டிவீதம் அதிகரிக்கும்போது உத்தேச நோக்க கேள்வி அதிகரிக்கும்.

02. மத்திய வங்கி, வணிக வங்கியின் பற்றாக்குறை திரவத்தன்மை பூர்த்திக்காக மேற் கொள்வதாகக் கருதப்படும் செயற்பாடு யாதாக அமையும்.
   1) வங்கி வீதத்தை அதிகரித்தல்.
   2) காசொதுக்கு வீதத்தை அதிகரித்தல்.
   3) மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துதல்.
   4) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துதல்.
   5) முதலீட்டு உச்ச வரம்பை நிர்ணயித்தல்.

03. வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (RFC Account) வைப்புத் தொடர் பாகச் சரியாக இனங்காணப்படுவது யாது?
   1) எந்தவொரு இலங்கைப் பிரஜையும் ஆகக் குறைந்த 500$ இழிவு வைப்பாக செலுத்திக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.
   2) எந்தவொரு இலங்கைப் பிரஜையும் இழிவு வைப்பாக 200$ செலுத்தி வைப்பை ஆரம்பிக்கலாம்.
   3) இழிவு வைப்பு என வரையறை இல்லை.
   4) சொத்துவளம் படைத்தவர்களே கணக்கை ஆரம்பிக்கமுடியும்.
   5) வெளிநாட்டவர் மட்டும் இக்கணக்கை ஆரம்பிக்கமுடியும்.

04. மத்திய வங்கியானது 5 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியலை வணிக வங்கி வாடிக்கையாளருக்கு விற்பனை செய்கின்றது. இங்கு உண்டியல் செயற்பாட்டின் பின்னர் வங்கி முறையின் உச்சக்கடன் 380 ஆக உள்ளது. இங்கு உச்சக்கடன் 80% ஆக உள்ளது. மிகை ஒதுக்கு எதுவுமில்லை. உண்டியற் செயற் பாட்டிற்கு முன்னர் வங்கி முறையின் பணநிரம்பல் யாது?
   1) 400 மில்லியன். 2) 450 மில்லியன்.
   3) 600 மில்லியன். 4) 500 மில்லியன்.
   5) யாவும் தவறு.

05. குறிப்பிட்ட நாட்டின் பணவடிவிலான வட்டி வீதம் குறித்த காலத்தில் 15.5 ஆக வுள்ளது. இங்கு பணவீக்க வீதம் 2 வீதமாகும். வேலையின்மை வீதம் 3 வீத மாகும். கீழுழைப்பு வேலைசெய்வோர் 30 வீதமாக உள்ளது. மெய் வட்டிவீதம் எவ்வாறு அமையும்?
   1) 18.5 2) 10.5 3) -19.5 4) 18%
   5) யாவும் தவறு.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். அண்டை அயலார் உங்களின் செயற்பாடுகளைப் பார்த்துப் பொறாமைப்படுவர். மற்றவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு உண்டு.

### இடபம்




அடுக்கடுக்காக வேலைகள் உருவானாலும் அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். உங்களைக் கேலி பேசிய நண்பர்கள் சிலரே இன்று பாராட்டலாம். உறவினர்கள் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். ஆலய வழிபாடு அமைதி தரும்.

### மிதுனம்



சக ஊழியர்கள் சிலர் காரணம் இல்லாமல் உங்கள் மீது கோபம் கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். சேமித்த பணத்திற்கு திடீரென செலவு உண்டாகலாம். வாங்க நினைத்த பொருள் ஒன்றை கடும் முயற்சி எடுத்து வாங்கினாலும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம். பயணத் தடைகளைச் சந்திக்கலாம்.

### கடகம்



பொறுமை, நிதானத்துடன் செயற்பட்டு எதிலும் பெருமை சேர்க்கும் நாள். சிக்கலாகி விடுமோ எனப் பயந்த காரியம் ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். பயணங்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### சிங்கம்



தொழில் ரீதியான வருமானத்தைப் பெறலாம். நண்பர்கள் சிலரின் வீட்டிற்கு எதிர்பாராமல் செல்ல நேரிடலாம். தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள்.

### கன்னி



தடை, தாமதங்களுக்குப் பின் வெற்றி பெறும் நாள். ஆச்சரியப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். நாடி வந்த சிலருக்கு பிறரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். மற்றவர்கள் உதவியுடன் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். நண்பர்கள் சிலருடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசிக்கலாம். ஆறுதல் அனுபவம் உண்டு.

### துலாம்



எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்காமல், அதில் மாற்றம் ஏற்படலாம். தொழில் ரீதியான விடயங்களில் கவனக் குறைவைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் கொடுக்கும் வாக்குறுதியை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம்.

### விருச்சிகம்



கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். பல நாள்களாகத் தடைபட்ட காரியம் ஒன்று இன்று எளிதில் நடக்கலாம். உங்களுக்குப் பிடித்த பொருள் ஒன்றை மற்றவர்கள் இலவசமாகக் கொடுக்கலாம்.

### தனுசு



மாமன், மைத்துனர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகளைக் கேட்கலாம். பெற்றோர் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய முடியாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.

### மகரம்



பெரிய மனிதர் ஒருவரின் உதவி கிடைக்கும். சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். உங்களை விட மேம்பட்ட சிலரைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் தந்திரமாகச் செயற்படுவீர்கள். பிரியமான சிலருடன் பழங்கதைகள், வீண் கதைகள் பேசி மகிழ்வீர்கள். கோபம், வேகம் தவிர்க்கவும்.

### கும்பம்



கணிசமான பணச் செலவுகளைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் தேவையற்ற அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். கைநழுவிப் போனதாக நினைத்த வாய்ப்புகள் மீண்டும் வந்து சேரலாம். உங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் சிலர் காரியம் சாதிக்கலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக் கறை காட்டுவீர்கள்.

### மீனம்



நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வெறுப்பு, விரக்தி விலகி மனதில் உற்சாகம், தெம்பு குடிகொள்ளும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள்.. நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரிய அளவிலான உதவி கிடைக்கலாம்.

# நிபுணர் குழு இலங்கை செல்ல விசா அனுமதி கோரவில்லை

## தூதரக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

இலங்கை மீதான யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்துள்ள நிபுணர் குழு, இலங்கை செல்வதற்கு விசா கோரி விண்ணப்பம் எதனையும் சமர்ப்பிக்கவில்லை என்று அமெரிக்காவில் உள்ள இலங்கைக்கான தூதரக அதிகாரி தெரிவித்தார்.

நிபுணர் குழு இலங்கை வருவதற்கு விசா வழங்கப்படமாட்டாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்திருந்தமை தெரிந்ததே.

தமக்கு ஆலோசனை வழங்கவே நிபுணர் குழு நியமிக்கப்பட்டது எனவும் இது விசாரணைக்குழு அல்ல எனவும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பி.பி.சிக்கு நிபுணர் குழுவின் தலைவர் மர்சூகி டஸ்மன் வழங்கிய செவ்வியில், இலங்கை செல்வதற்கான விசா தமக்கு மறுக்கப்படுகின்றது என்றும் இதனால் உண்மையைக் கண்டறிவதற்குத் தடை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

## சிறு முகாமைத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜூலை 27

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 2011/2012ஆம் கல்வியாண்டுக்கான முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி (ESBM) ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-16)

**A/L வரலாறு**

**மாபெரும் கருத்தரங்கு**

இம்முறை A/L பரீட்சையில் வரலாறு பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கொன்று D.M.I கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

காலம்: 29.07.2010 (வியாழக்கிழமை), 30.07.2010 (வெள்ளிக்கிழமை)

நேரம்: காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை.

சென்ற ஆண்டு வரலாறு பாடத்தில் உயர்பெறுபேறு பெற்றதோடு மாவட்டத்தின் முதல் மாணவி உட்பட பலர் பங்கு கொண்டது போன்றே இம்முறையும் முதல்நிலைப் பெறுபேற்றைப் பெற ஏற்றவகையில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

யாழின் முன்னணி ஆசிரியர்களுடன் A/L பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் அனுபவமுள்ளவர்களும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இடம்: **D.M.I**
ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி/569168)

**முதலாமாண்டு நினைவலைகள்**



திருமதி
திருநாவுக்கரசு
சிவபாக்கியம் (பேபி)

அன்னை மடியில்
05*09*1929

ஆண்டவன் அடியில்
06*08*2009

அம்மா என்றழைத்தால் அன்போடு குரல் கொடுப்பாய்
உற்றவரும் உறவினரும் போற்றிடவே வளர்த் தெடுத்தாய்
நீர் வளர்த்த மழலைகள் எல்லாம் அம்மம்மா எங்கே?
என பரிதவிக்கின்றார்கள்
பூட்டாச்சி எங்கே? என பூட்டிமார் ஏங்குகிறார்
எல்லோரையும் பரிதவிக்க விட்டுவிட்டு
எங்கு சென்றீர் எம் குலவிளக்கே? உமது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல கதிர்காமக் கந்தனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் - நருமிகா,
நரோமிகா, கரீஸ், கபிலாஷ்.

இல.19, மாவடி வீதி,
5 சந்தி, யாழ்ப்பாணம்.

(100889)

**மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்**



ஆசிரியப் பணியில் 33வருடங்களை நிறைவுசெய்து
அகவை அறுபதைக் கொண்டாடும்
எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி ஜசிந்தா சவரிமுத்து**
அவர்களைச் சீரும் சிறப்பும் பெற்றுப்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

**10ஆம் ஆண்டு நினைவுச்சுடர்**



அமரர் றோ.அன்ரனி(இதயன்)

தோற்றம் 31.01.1956 மறைவு 27.07.2000

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்.

417/10, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**Deutsch வகுப்புகள்**

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் [illegible]

தொடர்பு: 10, Palaly Road, Jaffna. T.P: 0771604823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.03.1993

★ ஜனாதிபதி பிரேமதாஸ அம்பாறைக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிப்பு.

★ பாக்குநீரிணையில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் இருநாடுகள் மத்தியிலும் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிப்பு.

02.03.1993

★ கச்சதீவுக்கு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 58 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்களது படகுகளையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.

★ பிரான்ஸின் அதிவேக கடல் தாக்குதல் படகுகள் போன்ற தாக்குதல் படகுகளை கொழும்பில் இலங்கை அரசு வடிவமைக்க இருப்பதாகத் தெரிவிப்பு.

03.03.1993

★ தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்படும் வகையி லான சமஷ்ரி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசிலனை செய்ய தமது தரப்பு தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவிப்பு.

★ வடபகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சில கேந்திர நிலையங்களை கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கை மிக விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிப்பு.

04.03.1993

★ கிளாலியில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் ஒன்றில் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படகு கடும் சேதமுற்றதுடன் கடற்படை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க நியமிக்கப்பட உள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவிப்பு.

05.03.1993

★ இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடையத்தில் மத்தியஸ்தம் வகிக்கத் தாம் தயாராக இல்லை என நோர்வே அரசு தெரிவிப்பு.

★ இலங்கைக்கான பிரிட்டிஷ் மற்றும் ஆஸ்திரேலிய தூதர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சகிதம் யாழ். குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

06.03.1993

★ யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் அரசாங்க ஹெலிகொப்டர் ஒன்றில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ நாடாளுமன்றத் தெரிவிக்குழு எதிர்வரும் 11 ஆம் திகதி கூடும்போது அதில் கலந்து கொள்ளாது பகிஷ்கரிப்பது என தமிழ்க் கட்சிகள் முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

07.03.1993

★ குடாநாட்டுப் போக்குவரத்துப் பாதை திறப்புத் தொடர்பாக ஐ.நா சபையின் அகதிகளுக்கான தூதரகப் பிரதிநிதி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்திருப்பதாகத் தெரிவிப்பு.

★ ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் மனைவி பிள்ளைகள் மற்றும் தாய் ஆகியோர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

08.03.1993

★ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முன்னணியின் தலைவராக முன்னாள் அமைச்சர் அதுலத் முதலி தெரிவு செய்யப்படுவார் என ஊகம் தெரிவிப்பு.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய வல்லமை எமக்கு இருப்பதால் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

09.03.1993

★ செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து வான்,தரைவழித் தாக்குதல்களை மேற்கொண்டவாறு பாதுகாப்புப் படையினர் முன்னேற ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.

★ இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் படையினரிடம் சிக்குண்டு பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டவர்களில் பலர் சித்தப்பிரமை பீடித்தவர்களாக உள்ளதாகத் தெரிவிப்பு.

10.03.1993

★ அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் கண்காணிப்பின் கீழ் சங்குப்பிட்டி - கேரதீவு பாதையுடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களை குடாநாட்டிற்குள் அனுமதிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவிப்பு.

★ சுதந்திரக் கட்சி உட்பட 5 பிரதான எதிர்க் கட்சிகள் இணைந்து பொது மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய அமைப்பொன்றை உருவாக்கி உள்ளதாகத் தெரிவிப்பு.

11.03.1993

★ தமிழ் நாட்டின் அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி முறிவடைந்திருப்பதால் ஜெயலலிதா தலைமையிலான தமிழக மாநில அரசை மத்திய அரசு கலைத்து விடக் கூடும் என ஊகம் தெரிவிப்பு.

★ யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலை எக்ஸ்றே பிரிவு ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

12.03.1993

★ இப்போது இணைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனித்தனியாகப் பிரித்து அவற்றுக்குத் தனித்தனி சமஷ்டி அலகுகள் அமைக்கப்பட வேண்டும் என நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிப்பு.

★ சமஷ்டித் தீர்வுத் திட்டம் பாரதுரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அதனைச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கைவிட்டு விட வேண்டும் என சிங்கள இனவாத அமைப்பொன்று தனது அறிக்கையில் தெரிவிப்பு.

13.03.1993

★ இந்திய நகரமொன்றான பம்பாயில் வெவ்வேறு இடங்களில் சக்தி மிக்க குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதால் 200 க்கும் அதிகமானோர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் நிலவி வரும் உட்கட்சிப் பூசலுக்கு தீர்வாக லலித் அதுலத் முதலியும் காமினி திஸநாயக்கவும் ஒவ்வொரு ஆண்டும் மாறி மாறித் தலைவர் பதவியை வகிப்பர் என அறிவிப்பு.

14.03.1993

★ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனையை ஏற்று அரசு வடக்கு - கிழக்கைப் பிரிக்குமானால் அது போர் தீவிரமடைய வழிவகுக்கும் என பி.பி.ஸி வானொலி விமர்சிப்பு.

★ மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள படைச் சிப்பாய்களுக்கும், பொலிஸாருக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு இலங்கை அரசை ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தி உள்ளதாகத் தெரிவிப்பு.

15.03.1993

★ கிழக்குப் பகுதியில் தரைவழித் தாக்குதல்களை கடுமையாக்குவதோடு வடக்கில் விமானத் தாக்குதல்களை அதிகரிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்துவது இராணுவத்தினரின் தற்போதைய உத்தி என தெரிவிப்பு.

★ பம்பாய் வெடிகுண்டுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு எந்த வித ஈடுபாடு இருந்ததில்லை என விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு.

# இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் கருத்தால் இலங்கைக்கு சங்கடம்

கொழும்பு, ஜூலை 27

பாலஸ்தீனத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதுவரை விசாரணை செய்து அவருக்குத் தண்டனை வழங்கவேண்டும் என மேல் மாகாணசபை ஐ.தே.கட்சி உறுப்பினர் முகிபுர் ரஹ்மான், முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரபீக் சாகாப்தீன், புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோர் நேற்று முன்தினம் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த மூவரும் நேற்று முன்தினம் காலை கொழும்பு நாரஹேன்பிட்டியில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தி இக்கருத்தை வெளியிட்டனர். இந்தச் செய்தியாளர் மாநாட் டில் கருத்துத் தெரிவித்த விக்கிரமபாகுகருணாரட்ன கூறியவை வருமாறு:-

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் எயார் மார்ஷல் டொனல்ட் பெரேரா பாலஸ்தீனத்துக்கு எதிராகக் கருத்து தெரிவித்துள்ளமை இந்நாட்டின் வெளியுறவுக் கொள்கை குறித்து சந்தேகம் கொள்ளச் செய்கின்றது. பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் குறித்து இலங்கை தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும்.

இலங்கை அரசு இஸ்ரேலின் கொள்கைகளைப் பின்பற்றுமானால் பாலஸ்தீனத்தில் ஏற்பட்டதுபோல் இலங்கையிலும் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை சர்வதேச கம்பனிகளிடம் பறிகொடுக்கும் துர் அபாயகரமான நிலை ஏற்படும் எனவும் அவர் சொன்னார். (சி)

# இராணுவ ரீதியான நடவடிக்கைகள் மூலம் அரசியல் சிக்கலுக்குத் தீர்வுகாண முடியாது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 27

அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது - என்று பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டங்களையே முன்வைக்க வேண்டும் எனவும், இராணுவ ரீதியான நடவடிக்கைகள் மூலம் இறுதித் தீர்வுத் திட்டத்தை எட்ட முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன ஒற்றுமை தொடர்பில் மக்களிடம் போதியளவு விளக்கம் காணப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய மக்களின் கருத்துக்கள் மற்றும் சமய நம்பிக்கைகள் தொடர்பில் அனைவரும் நெகிழ்வுப் போக்குடன் செயற்பட வேண்டியது இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் ஐக்கிய இலங்கையை மீளக் கட்டியெழுப்பக் கூடியதொரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# அமைச்சர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது குறித்த ஒழுக்க விதி விரைவில்

கொழும்பு, ஜூலை 27

அமைச்சர்கள் பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த ஒழுக்க விதியொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்டுகிறது.

பாதைகளில் பயணிக்கும்போதும், பொது இடங்களில் தோன்றும் போதும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து அரசு அறிவுறுத்தவுள்ளது.

அமைச்சர்கள் பொதுப் பாதைகளில் பயணிக்கும்போது தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்றனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதைகளில் பயணிக்க முடியாத வகையில் அமைச்சர்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் பொது இடங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து ஒழுக்கவிதி விரைவில் அறிவிக்கப்படும் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

(சி)

# ஆயுள் வேத மருத்துவ வாரம் ஒகஸ்ட்டில் கொண்டாடப்படும்

கொழும்பு, ஜூலை 27

ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரையிலான காலத்தை ஆயுள்வேத வாரமாக உள்நாட்டு மருந்துகள் அமைச்சர் பியசேன கமகே அறிவித்துள்ளார்.

ஆயுள் வேத மருந்துகளின் பெறுமதியை அறிமுகப்படுத்தவும் மருத்துவ குணமுள்ள மூலிகைகளை பாதுகாப்பதற்கு மக்களை தூண்டுவதற்குமாக இந்த ஆயுள் வேத வாரம் கொண்டாடப்படவிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மூலிகைச் செடிகளை வளர்த்து பயனடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆயுள் வேத மருத்துவம், மருத்துவ மூலிகைகள் தொடர்பான போட்டிகள் மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும். மூலிகைகளை இனம் காணுவதும் போட்டிகளில் ஒன்றாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ப)

# டெங்கு நுளம்பை ஒழிப்பதற்கு மண் எண்ணெய் சிறந்த நாசினி

## இந்திய டாக்டர் தெரிவிக்கிறார்

கொழும்பு , ஜூலை 27

தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் மண்ணெண்ணெயைத் தெளிப்பதின் மூலம் டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். இதுவே சிறந்ததும் மலிவானதுமான டெங்கு ஒழிப்புக்கான வழியாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை வந்துள்ள இந்திய டாக்டர் ஒருவர்.

இலங்கையில் சுகாதார விழிப்புணர்வுத் திட்டமொன்றில் பங்கேற்பதற்காக வந்துள்ள செட்டிநாடு மருத்துவமனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஆலோசகரும் நரம்பியல் நிபுணருமான டாக்டர் வி.சவுந் [illegible] மேலும் தெரிவித்திருப்பதாவது:

தேங்கி நிற்கும் தண்ணீரில் மண்ணெண்ணெய் தெளித்தால் அது தண்ணீரின் மேல் மட்டத்தில் ஒரு படையாகப் படர்ந்து நிற்கும். இது நுளம்புகள் நீரில் முட்டையிடுவதைத் தடுத்துவிடும். மண்ணெண்ணை மிகவும் மலிவாக எந்த இடத்திலும் கிடைக்கின்றது என்று தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் பாவனை மிக இலகுவாகும். நுளம்புகள் அதிகமாகக் காணப்டும் இடங்களில்தான் புகை அடிப்பது மற்றும் இரசாயனப் பிரயோகங்கள் தேவைப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்கள் யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஹொக்கி இறுதிப் போட்டியில் பல்கலைக்கழக உடற்கல்வி அணியும் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

## தேசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

# இறுதிவரை போராடிய யாழ் தெரிவு அணி ஒரு புள்ளியால் அரையிறுதித் தகுதியை இழந்தது

## நடுவர்கள் தவறு இதற்குக் காரணம் என குற்றச்சாட்டு

வலி.வடக்கு, ஜூலை 27

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டத் தெரிவு அணி பலத்த போராட்டத்தின் பின்னர் ஒரு புள்ளியினால் தோல்வியைத் தழுவி அரையிறுதிக்கான தகுதியை இழந்தது.

திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொழும்பு மாநகரசபை அணியும் யாழ். மாவட்ட தெரிவு அணியும் மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 08:02 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் நின்ற போதிலும் நடுவர்களின் தவறினால் புள்ளிகள் குறைக்கப்பட்டு 08:07 புள்ளிகள் என கொழும்பு மாநகர சபைக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் போட்டி ஏற்பாட்டாளர்களுக்குப் புள்ளியில் ஏற்பட்ட குழப்பம் சம்பந்தமாகச் சுட்டிக்காட்டிய போதிலும், அவர்களுடைய வேண்டுதலின் பேரில் தொடர்ந்து இரண்டாம் பாதி ஆட்டம் இடம்பெற்றது.

இப்போட்டியிலும் கூட யாழ்.மாவட்ட அணி முன்னணி பெற்ற நிலையில் இறுதி நிமிடத்தில் வலையில் போட்ட பந்தை பிழையெனக் கூறி எதிரணியினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு புள்ளிகள் பெறும் வாய்ப்பை நடுவர்கள் வழங்கிய நிலையில் கொழும்பு மாநகரசபை 15:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.மாவட்ட அணியை வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட அணியின் முகாமையாளராக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலரும் மாவட்ட வலைப்பந்தாட்ட அணி செயலாளருமான திருமதி ஜே.எப்.ஏ. ரூபசிங்கமும் பயிற்றுவிப்பாளராக உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலரும் சென்றுள்ளார்கள். (ஐ-86)

## ஆளுநரின் ஏற்பாட்டில் வலயங்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு, ஜூலை 27

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டில் வட மாகாண கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் கல்வி வலயங்களை எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி வட மாகாண கல்வி அமைச்சின் உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் அடுத்த மாதம் பாடசாலை விடுமுறை நாள்களில் நடத்துவதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-86)

## 19 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இலகு வெற்றி

வலி.வடக்கு, ஜூலை 27

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணக் கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 36.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பானுசன், சுபர்சன் தலா 14 ஓட்டங்களையும் சபேசன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 30 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பென்டில்கரன் 10 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கஜேந்திரன் 1.2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் ஓட்டம் எதுவும் கொடுக்காது 2 விக்கெட்டுக்களையும் குருநாதன் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 9 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் மதுசன், சோபி முறையே 09, 19 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

106 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 13.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்து.

தனஞ்சயன் ஆட்டமிழக்காது 8 பௌண்டறிகள், 03 சிக்ஸர்களுடன் 57, பென்டில்கரன் 06 பௌண்டறிகளுடன் 32 ஓட்டங்களைப் பெற்றதுடன், உதிரிகளாக 10 ஓட்டங்களும் கிடைத்தன.

மானிப்பாய் இந்துக் கல்லூயைச் சேர்ந்த ஜலினன் 5 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (ஐ-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## ஆக்ரோஷமான இறுதி ஆட்டத்தில் கிறாஸ்கொப்பேர்ஸ் வென்று சாதித்தது

வலி.வடக்கு, ஜூலை 27

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களினால் யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர்கள் அணியும் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் பெறும் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலைமை காணப்பட்டது. ஆட்டம் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க மேலதிகமாக ஐந்து சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

முதல் ஐந்து உதைகளையும் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் உரிய முறையில் பயன்படுத்திய போதிலும் விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களின் ஐந்தாவது உதையை கிறாஸ் கொப்பேர்ஸ் அணியின் கோல்காப்பாளர் திலகராஜ் பெரும் முயற்சியெடுத்து நிறுத்தி தனது அணிக்கான வெற்றியை உறுதிப்படுதினார்.

ஆட்ட நிறைவில் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் 05:04 கோல்கள் என்ற அடிப்படையில் விளையாட்டு விஞ்ஞான அலகு அணியை வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. (ஐ-86)

## யாழ்.இந்து மகாஜனாவை 104 ஓட்டங்களால் வென்றது

வலி.வடக்கு, ஜூலை 27

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்று வரும் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 104 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 41.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

சஜீவன் 43, நிரோசன் 26, பார்த்தீபன் 21, ஹரினாத், விசான் தலா 15 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 58 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த டிலோசன் 3.4 ஓவர்கள் பந்துவீசி 08 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மதுசன் 8 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் விஜிந்தன் 3 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கஜேந்திரன், பிரதீப் முறையே 22,56 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பறினார்கள்.

201 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த 96 ஓட்டங்களைப் பெற்றது.

விஜிந்தன் 21, திலக்ஷன், பிரசாந் தலா 12 ஓட்டங்களைப் பெற்றதுடன், உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சிவேந்திரன் 6 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிரோஜன் 5 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் துனபிராம் 6 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 2 பந்துகளை வீசி ஓட்டம் எதுவும் இன்றி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மீள்குடியமர்வு துரிதமாகிறது; நிவாரணம் வழங்குவதில் அசமந்தப் போக்கு

## தீர்வுகாணுமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி , ஜூலை 27

கிளிநொச்சி,முல்லைத்தீவு பகுதிகளில் துரிதமாக மீள்குடியேற்றம் நிகழ்ந்துவரும் நிலையில் மக்களுக்கான உலர் உணவு வழங்குவதில் தாமதம் ஏற்படுவது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண்டு முற்பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறும் போது அவர்களுக்கு இடைத்தங்கல் முகாம்களில் வைத்துப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டு, சொந்த காணிகளுக்கு அனுப்படுப்படும் போது உலர் உணவுப் பொருள்கள், தறப்பாள்,தடிகள் மற்றும் அன்றாட பாவனைப் பொருள்கள் சில, தகரங்கள் என்பன வழங்கப்பட்டு வந்தன. அத்துடன் மீள்குடியேற்றக் கொடுப்பனவாக 5000 ரூபாவும் உடனடியாக வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது இடம்பெறும் மீள்குடியேற்றத்தின் போது நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவது குறைவடைந்துள்ளதுடன் மீள்குடியேறிய பின்னரும் அவர்கள் நிவாரணப் பொருள்களுக்காக அலைந்து திரிய வேண்டியுள்ளது. மிகக் குறைந்த பெறுமதியான பொருள்களைப் பெறுவதற்குக் கூட, நீண்ட தூரம் சென்று நீண்ட நேரம் காத்திருந்தே பெற வேண்டியுள்ளது.

மீள் குடியேறிய மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்து தாம் குடியிருப்பதற்கு ஏதாவது வசதிகள் செய்ய வேண்டிய நிலையில் நிவாரணத்திற்காக அலைந்து திரிவதில் அதிகம் காலத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் என்பதற்காக மக்கள் இவ்வாறு அலைந்து திரிய வேண்டியுள்ளது குறித்து ஏன் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தாதுள்ளனர் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குடும்பத் தலைவர்களை இழந்துள்ள குடும்பங்களும், முதியவர்களின் குடும்பங்களும் இவ்வாறான நிவாரணங்களைப் பெறுவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதுடன் ,உரிய நேரத்தில் உரிய இடத்தில் சென்று அப்பொருள்களைப் பெறத் தவறும் பட்சத்தில் பின்னர் அதனைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்று இரண்டு மாதங்களாகியும் உலக உணவுத்திட்ட உலருணவுப் பொருள்கள்கூட வழங்கப் படாத நிலையில் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் அதிக கவனம் எடுத்து ''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது'' போன்று அல்லாது அவர்களது நலனில் அக்கறை கொண்டு விரைந்து மனிதாபிமானத்துடன் செயற்படவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (ஐ-405)

# மன்னாரில் நடந்த புலமைப்பரிசில் கருத்தரங்கில் பெரும் எண்ணிக்கையானோர்

மன்னார் , ஜூலை 27

இலங்கை வங்கிக் கிளையினால் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்திருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கிற்கு பல நூற்றுக் கணக்கில் மாணவ , மாணவிகள் கலந்து கொண்டனர்.

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு மன்னார் வலயக் கல்விப் பணிப் பாளர் ஏபல் றவ்வல் தலைமை வகித்தார்.

அவருடன் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சண்முகலிங்கம் மற்றும் இலங்கை வங்கி மன்னார்க் கிளை முகாமையாளர் உட்படப் பெருந்தொகையான பெற்றோர்களும் தாய்மார்களும் கலந்து கொண்டனர். (ஐ-80)




# மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளை மீளக்கையளிக்க விசேட திட்டம் அறிமுகம்

## கிளிநொச்சிக் கிளையில் ஒக.4 ஆரம்பம்

கிளிநொச்சி , ஜூலை 27

கிளிநொச்சி மக்கள் வங்கியில் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களினால் அடகு வைக்கப்பட்ட நகைகள் மீள வழங்கப்படவுள்ளன.

அடுத்த மாதம் 4ஆம் திகதியில் இருந்து இந்நகைகள் மீள வழங்கப்படவுள்ளதாகவும் அலுவலக நேரத்தில் அடகுச்சீட்டினது மூலப்பிரதியினையும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டினையும் சமர்ப்பிப்பதன் மூலம் இந்நகைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அடகு நகைகளை மீளப்பெறமுடியாமல்போனமையால் 31.12.2008 வரையான காலப்பகுதிக்கே வட்டி அறவிடப்படும் எனவும் களவு போன நகைகளுக்குரிய நட்ட ஈடு மத்திய வங்கியினால் நாளாந்தம் வெளியிடப்படும் பவுணின் சந்தைப் பெறுமதிக்கு அமைய வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடகுச் சீட்டுக்களைத் தொலைத்தவர்கள் , இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் , வெளிநாடுகளில் வசிப்பவர்கள் ஆகியோரின் அடகு நகைகளும் காலக் கிரமத்தில் உரிய ஆவணங்கள் பெறப்பட்டு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-405)

# மன்னாரில் இரு நாள்கள் நடந்த சட்ட ஆலோசனை முகாம்

மன்னார் , ஜூலை 27

கடந்த சனி, ஞாயிறு இரண்டு தினங்களாக மன்னாரில் நடைபெற்ற இலவச சட்ட ஆலோசனை முகாம் வெற்றிகரமாக முடிவுற்றது.

கொழும்பு - மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்திருந்த இந் நிகழ்வு மன்னார் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்குக் கொழும்பிலிருந்து வந்திருந்த சட்டத்தரணிகளுடன் மன்னாரில் சேவையாற்றும் அனைத்து சட்டத்தரணிகளும் சமுகமளித்து மக்களின் பல்வேறு சந்தேகங்களுக்கும் தீர்வு வழங்கினர்.

இரண்டு நாள்களும் இதற்கு வருகை தந்திருந்த விதவைகள், இளம் வித வைகள், கைம்பெண்கள், கணவர்களினால் கைவிடப்பட்ட பெண்கள் , உடல் ஊனமுற்றவர்களின் துணைவர்கள் ஆகியோர் அங்கு சமுகமளித்து தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொண்டனர்.

அனேகமான பெண்கள் வாழ்வாதார உதவி கோரியதையும் காணக் கூடியதாக விருந்தது.

இருநாள் நிகழ்வுக்கும் மன்னாரின் பிரபல சட்டத்தரணி எஸ். விநோதன் பொறுப்பாக விருந்தார். (ஐ-80)

# ஆளணி கணித்தல் செயலமர்வு சனியன்று

கண்டாவளை , ஜூலை 27

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கான தரமான உள்ளீடு, ஆசிரிய ஆளணி கணித்தல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி மு.ப 8.00 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை I ஏபி அல்லது I ஆயின் மேற்படி விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் இருவரையும் வகை II, வகை III பாடசாலை ஆயின் ஆசிரியர் ஒருவரும் தவறாது பங்குபற்ற வேண்டும் என்பதுடன் பொருத்தமான ஆசிரியர் அல்லாதவிடத்து அதிபர் பங்குபற்ற வேண்டுமென கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.புவனராசா கேட்டுள்ளார். (ஐ-432 )

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி , ஜூலை 27

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் க.பொ.த. உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவர் சிவகுகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கும் சிறப்பு விருந்தினராக கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கமும் ஏனைய விருந்தினர்களாக மக்கள் வங்கியின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் சிறீகௌரிபாலா, மக்கள் வங்கியின் பொறியியலாளர் எக்கநாயக்க , மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய அலுவலக செயலாளர் நந்தகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் கல்லூரி மாணவர்களால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. மங்கல விளக்கினை மக்கள் வங்கியின் வன்னி பிராந்திய உதவிப் பொது முகாமையாளரான ரஞ்சித் கொடித்துவக்கு, கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. அமிர்தலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து செ. தர்ஷாவின் வரவேற்புரை நடைபெற்றது.

பின்னர் விருந்தினர்கள், மாணவர்களுக்கு மதிய போசன விருந்தளிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றன.

நிகழ்வில் கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி ச. திருநாவுக்கரசு, கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற போஷகர் தி. சிவரூபன்,கல்லூரியின் அதிபர் க. இரத்தினகுமார், சிறப்பு விருந்தினர் அ. அமிர்தலிங்கம், பிரதம விருந்தினர் ரஞ்சித் கொடித்துவக்கு ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-405)

# உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பல பகுதிகளிலும் சிரமதானப் பணி

கண்டாவளை , ஜூலை 27

கிளிநொச்சியில் உள்ளூராட்சி வாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும் பல்வேறு திட்டங்கள் சிரமதானப் பணி மூலம் முன்னெடுக்கப் பட்டன.

கிளிநொச்சி திருநகர் மயானம், வட்டக்கச்சி சில்வ வீதி ,தூயமணி முன்பள்ளி போன்றனவும் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

இச்சிரமதானப் பணிகளில் கிராம அபிவிருத்திச் சங்கம், கரைச்சிப் பிரதேசசபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டனர். மிகச் சிறப்பான முறையில் கிளிநொச்சியில் உள்ளூராட்சி வாரம் அனுட்டிக்கப்பட்டது. (ஐ-432)

# பளைக்கோட்டப்பாடசாலைகளின் ஆங்கிலதினப் போட்டிகளின் முடிவுகள்

கண்டாவளை , ஜூலை 27

அண்மையில் நடைபெற்ற பளைக் கோட்ட ஆங்கில தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முடிவுகள் வருமாறு:

**பார்த்து எழுதுதல்**

தரம் 3- ஜீ. ஆரணி (மாசார் அ.த.க.பா), தரம் 4 -ஜீ. நிக்சனா (மாசார் அ.த.க.பா), தரம் 5- அ.அபியூட் (பளை றோ.க.த.க.பா), தரம் 6- ஆர்.லாகசோபிகா (பளை மத்திய கல்லூரி), தரம் 7- ஆர். மஞ்சிதா (பளை மத்திய கல்லூரி),தரம் 8 அ. ஆன்நிலக்சனா (பளை மத்திய கல்லூரி), தரம் 9- மி.ரஜனி (பளை மத்திய கல்லூரி), தரம் 10- ரி. றண்சியா (பளை றோ.க.த.க.பா),தரம் 11- ஜ.ஜிலானி (பளை மத்திய கல்லூரி), தரம் 12- பி.தர்சிகா (பளை மத்திய கல்லூரி), தரம் 13- நி. குசாலக்சனா (பளை மத்திய கல்லூரி).

**கவிதை**

தரம் 3- ஜி. ஆரணி (மாசார் அ.த.க.பா), தரம் 4 - ஏ. விஜிதா (பளை றோ.க. த.க.பா), தரம் 5- ஏ. அபியூட் (பளை றோ.க. த.க.பா), தரம் 6- பி. மேரிடர்வினி (பளை றோ.க.தகபா), தரம் 7- எஸ். வேணுசா (பளை றோ.க. த.க.பா), தரம் 8- ஜே. டிலக்சா (பளை றோ.க. த.க.பா), தரம் 9- ரி. தர்சினி (பளை றோ.க. த.க.பா),தரம் 10- ரி. ஜெரீனா (பளை றோ.க. த.க.பா),தரம் 11- கே.தேனுகா (பளை மத்திய கல்லூரி).

**வாசிப்பு**

தரம் 3- ஜ. சங்கவி (பளை மத்திய கல்லூரி), தரம் 4 -ஏ.தர்சிகா (பளை மத்திய கல்லூரி), தரம் 5- ஜ. பிரவிசா (பளை மத்திய கல்லூரி).

**சொல்வதெழுதல்**

தரம் 6- ஏ. டினக்சன் (பளை மத்திய கல்லூரி), தரம் 7 ஏ. டன்சி (பளை மத்திய கல்லூரி), தரம் 8- ஏ. ஆன்நிலக்சனா (பளை மத்திய கல்லூரி), தரம்9- பி.ரஜனி (பளை மத்திய கல்லூரி),தரம் 10 - ஆர். பிரசாத்(பளை மத்திய கல்லூரி), தரம் 11- ஜ. ஜிலன் ( பளை மத்திய கல்லூரி),தரம் 12- என். துவாரகா (பளை மத்திய கல்லூரி), தரம் 13 - ஏ. அருள்வாணி ( பளை மத்திய கல்லூரி).

**உருவாக்கம்**

தரம் 11- ஆர். ஜீவிதன் (பளை மத்திய கல்லூரி),தரம் 12- ஜி.ஸ்ரீப்பிரியா ( பளை மத்திய கல்லூரி).

**குழுப்பாடல்**

தரம் 1-2 (பளை மத்திய கல்லூரி).

**பேச்சு**

தரம் 13- எஸ் நவீனன் (பளை மத்திய கல்லூரி), தரம் 12 -ஜே. ஜெயமாநதி (பளை மத்திய கல்லூரி). (ஐ-432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் சோ.பத்மநாதனின் கவிதைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

கவிஞர் சோ.பத்மநாதனின் 'சுவட்டெச்சம்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீடு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில், பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

கவிதைத் தொகுப்பினை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வெளியிட்டு வைப்பார். நூலின் ஆய்வுரையை விரிவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணன் நிகழ்த்தவுள்ளார். (த-319)






## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி C.J. ஜெயசீலன் அவர்களின்
பாசமிகு தந்தையார்

**அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(101008)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னைநாள் ஆசிரியர்

**திருமதி மங்களேஸ்வரி நடராஜா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள். யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி,

(101008)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

யாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**வைரவப்பிள்ளை செல்லத்துரை**





தோற்றம்
1941.10.12

மறைவு
2010.06.27

அன்புக்கு இலக்கணமாய், பண்பில் உயர்ந்தவராய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வளர்த்து
ஆளாக்கிய எம் அன்புத்தெய்வமே!
எமையெல்லாம் ஆறாத்துயரினில் ஆழ்த்திவிட்டு
எங்குதான் சென்றீரோ ஐயா.

எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்: ராசம்மா (மனைவி)
மக்கள்: நிர்மலா(லைடன் புடவையகம் யாழ்), நிர்மலராசன், நிர்மலராஜிவி(லண்டன்), நிர்மலரூபிவி(பிரான்ஸ்)
மருமக்கள்: கௌரிகாந்தன்(லண்டன்), துசிகரன்(பிரான்ஸ்), பற்பராதேவி நந்தினி.
சகோதரர்கள்: செல்வரட்ணம்(கோசலா ரான்ஸ்போட்), குணரட்ணம் (மீராம்பாள் ரான்ஸ்போட்), க.கந்தசாமி(கணக்கர்)

(101004)

தி.முகவரி- மாவிட்டபுரம். த.முகவரி-சு. இராகுஜன் (பேரன்)
முதலிகோயிலடி, சேர்ச் லேன்,கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

# சர்வகட்சிக் குழுவின்.......

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவாக்கத்தின் உறுப்பினர்களால் ஒற்றை மாற்று வாக்கு முறைமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரவையாளர்களால் பிரதிநிதித்துவப்படும். புறம்பாக 10 பேரவையாளர்கள் (வடக்கு, கிழக்குக்கு புறம்பாக வதியும் முஸ்லிம்களுக்கு ஏனைய ஒன்று இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும்) சமூக சபைகளால் தெரிவு செய்யப்படுவார்கள். குடியரசின் ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படாத சமூக குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்த இருவரை நியமிப்பார்.

**சமூக சபை:**

இரண்டு சமூக சபைகள் காணப்படும், ஒன்று இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும், மற்றொன்று வடக்கு, கிழக்குக்கு புறம்பாக, சமூக அங்கத்தவர்களின் அபிவிருத்தி தேவைகளுக்காக வட, கிழக்குக்கு வெளியே அவர்கள் எங்கு வசித்த போதிலும் ஆள்புல நோக்குகைகள் இன்றி செயற்படத்தக்க முஸ்லிம்களுக்குமாக காணப்படும்.

**மத்திய மற்றும் மாகாணங்களுக்கிடையே அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்:**

அதிகாரப் பகிர்வானது வெளிப்படையானதாகவும் முற்றிலும் கவர்பாடற்றதாகவும் இருத்தல் வேண்டும். ஒருங்கிய நிரல் இல்லாமலாக்கப்படுவதுடன் மேற்சொன்ன அதிகாரமானது மத்திய நிரல் மற்றும் மாகாண நிரல்களுக்கிடையில் தகுந்த முறையில் பகிர்ந்தளிக்கப்படும். மூன்றாவது நிரலானது உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரங்களை வெளிப்படையாகக் கூறும் விதமாக தொகுக்கப்பட்டிருக்கும்.

**தேசிய மற்றும் மாகாண உயர் பதவி நியமன சபை:**

அரச சேவையினது நீதித் துறையையும் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கும் தேசிய பதவி நியமன சபை காணப்படும். இந்த தேசிய சபையானது பிரதமர், சபாநாயகர், நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஆறு உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இதில் மூன்று பேர் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றவர்களாகக் குறித்த சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் நியமனம் செய்யப்படுவர்.

ஒரு மாகாண உயர் பதவி நியமன சபையானது முதலமைச்சர், சபைத் தவிசாளர் எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினால் பிரேரிக்கப்படுகின்ற ஆளுனரால் நியமனம் செய்யப்படுகின்ற வேறுபட்ட ஆறு பேரைக் கொண்டதாக இருக்கும். மாகாண சபைக் கூட்டமைவானது இயன்ற வரை மாகாணங்களின் இனங்களின் சேர்மத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

**சீர்திருத்த நடபடிமுறைகள்:**

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 82 (5) மற்றும் 83 ஆகியன நிலைப்படுத்தப்பட்டதாக இருக்கும். அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அல்லது வேறு அரசியலமைப்பைக் கொண்டு பிரதியீடு செய்வதற்கான சட்ட மூலமானது நாடாளுமன்றத்தினது இரண்டு சபைகளினதும் 2-3 பெரும்பான்மையான உறுப்பினர்களினது வெவ்வேறான அமர்வு மற்றும் வாக்களிப்பால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**உப்புச் சப்பு இல்லாத பொதி**

தமிழர்கள் அரசியலில் கற்றுக்குட்டிகள் என்ற நினைப்புடன் வலம் வரும் மஹிந்த அரசு ஒரு நாள் மண்ணை கவ்வும் என்பது மட்டும் உண்மை. பல தசாப்த அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான போராட்டங்களின் பின்னர் இப்பொழுது தமிழர்கள் சொல்லால் வர்ணிக்கமுடியாத [illegible] சந்தித்து இருக்கும் வேளையில் [illegible] வைத்துக்கொண்டுதான் நினைத்ததை எதையும் செய்து முடித்து விடலாமென்ற மமதையில் இருக்கும் மகிந்தாவிற்கு யார் என்ன புத்திமதி சொன்னாலும் கேட்கமாட்டார். அதற்காகவே தனது அரசில் அங்கம் வகிக்கும் ஒருவரை இந்த குழுவிற்குத் தலைவராக அமர்த்தி தான் சொல்வதை இவர் மூலமாக தெரிவிக்கலாமென்ற கைங்கரியத்தில் இருக்கின்றார் மஹிந்தா.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். தொகுதிவாரி முறைமையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையையும் கொண்ட கலப்பு தேர்தல் முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

மத்திய, மாகாண, உள்ளூராட்சி மட்டங்களில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியது அவசியம் என்று சர்வகட்சிக் குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை விட மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபை, இந்திய வம்சாவளி மக்களுக்கு சமூக சபை ஏற்படுத்துதல் மற்றும் தேசிய, மாகாண உயர்பதவி நியமன சபை அமைக்கப்படுதல் போன்ற யோசனைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒற்றை ஆட்சிக்குள் அரசியல் தீர்வை காண்பது என்பது நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாதது. காரணம் இரு இனங்களும் பல தசாப்தங்களாக பல முரண்பாடுகளை அனுபவித்தது. மேலும் தமிழீழத்திற்கு மாற்றுத் தீர்வு குறைந்தது தமிழருக்கு சம உரிமையை அளித்து அவர்கள் சமத்துவத்துடன் வாழ வழி காணுவதே ஒரே தீர்வாக இருக்க முடியும்.

அரசின் தன்மை குறைந்தது சமஷ்சி ஆட்சிமுறையை கொண்டதாக மாநிலங்களுக்கு குறிப்பாக ஒன்றிணைந்த தமிழரின் வடக்கு -கிழக்கு மாநிலத்திற்கு (தமிழீழம்) அவர்களை தாமே ஆளும் அளவு அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத் தான் சிறிலங்கா மற்றும் தமிழரின் தேசியப் பிரச்சனைகளை தீர்க்க முடியுமென்பதே நடைமுறைச் சாத்தியமாக இருக்க முடியும். இல்லாவிட்டால் ஒரு பிரபாகரன் அல்ல பல ஆயிரம் பிரபாகரன்கள் நாளை தமிழீழமே தமிழரின் தீர்வு என்று கூறி களம் காண்பார்கள் என்பது தான் உண்மை.

இரு தனித்துவமுள்ள தேசங்கள் சிலோன் என்ற தீவில் இருப்பதனால் இரு நாடாளுமன்றங்களை அமைக்கலாம். இலங்கையின் நாடாளுமன்றத்தை மத்திய மட்டத்திலும் தமிழீழத்தின் நாடாளுமன்றத்தைத் திருகோணமலையிலும் அமைக்கலாம். இவைகள் நாடாளுமன்ற முறைமை கொண்ட அரசுகளைக் கொண்டிருக்கும். முழுத்தீவுக்கும் ஒரே ஒரு மேல் சபை மட்டும் இருக்க வேண்டும். ஐந்து வருடங்கள் சிங்களவரினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் முதல் குடிமகனாக இருக்க முடியும். அடுத்த ஐந்து வருடங்களுக்கு தமிழர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் முதல் குடிமகனாக இருக்க முடியும். இதுவே யதார்த்தமான தீர்வாக அமையும். அனைத்து மதங்களும் சமம் என்ற வகையில் சட்ட யாப்பில் குறிப்பிடப்பட வேண்டும். புத்த நாடு என்ற வார்த்தையை அடியோடு சட்ட யாப்பில் இருந்து அகற்ற வேண்டும்.

இரு சமுதாயங்களுக்குள் புரையோடிப்போயிருக்கும் கசப்புத் தன்மைகள் இல்லாதொழிக்க வேண்டுமாயின் இரு தரப்பினரின் விருப்பு வெறுப்புக்களை உள்வாங்கி செயல்படுவதன் மூலமே தீர்வைக் கொண்டு வரமுடியும். அதைவிடுத்து வேதாளம் முருங்கை மரத்தில் மீண்டும் ஏறுவதுபோல் இந்த சர்வகட்சிக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் தீர்வைத் திணிப்பதன் மூலமாக இலங்கையின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவரலாம் ஆனால் ஈழத் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. யதார்த்தத்தை உணராமல் 1940 மற்றும் 1950-களில் விட்ட தவறையே மீண்டும் சிங்கள தேசம் தமிழர் மீது செய்ய முனைகின்றது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கற்ற பாடங்களையும் மறந்து பழைய தலைமுறை விட்ட பிழையையே 21-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து மென்மேலும் நாட்டைக் குட்டிச்சுவராக்க முனைகின்றார்கள் சிங்களத் தலைமைகள். இனி கடவுளால் தான் தமிழரைக் காப்பாற்ற முடியும் என்று சொல்லிவிட்டு மாண்ட தந்தை செல்வாவின் வாக்கு இன்றைய காலகட்டத்திற்கு நன்றாகவே பொருந்தும். சிங்களத் தலைமைகளின் யதார்த்தமறியாத இப்போக்குத் தொடருமேயானால் கடவுளால் கூட இலங்கையை அழிவுப்பாதையில் இருந்து காப்பாற்ற முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூலை 27

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் வருமாறு:

அபிநயப்பாடல் *(ஆரம்பப்பிரிவு)*

*தரம் - 1,2*

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மல்லாகம் டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்.

*தரம் - 3,4,5*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் க்ல்லூரி.

குழுப்பாடல் *(கனிஷ்ட பிரிவு)*

*தரம் - 6-9*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி (இரு கல்லூரிகள் மூன்றாம் இடம்).

சிரேஷ்ட பிரிவு

*தரம் - 10 -13*

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, (இரு கல்லூரிகள் மூன்றாம் இடம்).

ஆரம்பப் பிரிவு உரையாடல் நாடகம்

*தரம் - 3-5*

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

கனிஷ்ட பிரிவு

*தரம் 6-9*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

சிரேஷ்ட பிரிவு *தரம்*

*10-13*

உடுவில் மகளிர் கல்லூரி, இளவாலை புனித கன்னியர்மடம் மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (இரு பாடசாலைகள் இரண்டாம் இடம்).

கவிதை திறந்த போட்டி

உடுவில் மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

நாடகம் திறந்த போட்டி

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

(50-86)

## காளான் மூலம் உணவு தயாரிப்பு சண்டிலிப்பாயில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 40 பயனாளிகளுக்கு காளான் மூலமான பலவித கறிகள் உருவாக்குவது தொடர்பான விசேட பயிற்சிநெறி வழங்கப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் இவ்விசேட பயிற்சிநெறி சண்டிலிப்பாயில் வழங்கப்பட்டது. சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய விவசாய போதனாசிரியர் பி.மணிவண்ணன் இதற்கான பயிற்சியை வழங்கியிருந்தார்.

(1-302)

## வேலை ஆள்கள் தேவை

**வேலை ஆள்கள்**

- ★ அலுவலக உதவியாளர்
- ★ பராமரிப்பு வேலை செய்யக் கூடியவர்
- ★ பூந்தோட்டப் பராமரிப்பாளர்

**மின் இணைப்பாளர்**
(Electrician)

★ வீட்டு மின் இணைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தச்சுவேலையாள்**

★ மரத் தளபாடங்கள், திருத்த வேலைகள் மற்றும் ஏனைய சிறிய மரவேலைகள் செய்யக் கூடியவர்.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 3 மணிவரை உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**முகாமையாளர்,**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## ஆச்சிரமத்தால் பால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பளை, மகாவித்தியாலயத்தில் ஆண்டு ஒன்று தொடக்கம் இரண்டு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் பசுப்பால் வழங்கப்பட்டது.

அத்துடன் ஜி.சீ.ஈ.சாதாரணதர வகுப்பில் கல்வி கற்று பொதுப்பரீட்சையை எதிர் கொண்டுள்ள மாணவர்களுக்கு பரீட்சையை எதிர்நோக்குவது தொடர்பாக சுவாமி சித்ருபாணந்தா கலந்து ரையாடல் ஒன்றையும் நடத்தினார். (க-236)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

**திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்**



இகத்தில் 07.04.1919 பரத்தில் 22.07.2005

திதி: ஆடிமாத அபரபக்க துதியை - (27.07.2010)

என் அருமை அம்மாவே!
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
அகிலத்தில் நாங்கள் இருக்கும்வரை
உங்கள் நினைவுகள் நீண்டு கொண்டே போகும்.

பிரிவால் துயருறும்:
மகள் செல்வி செந்திற் செல்வம் இரகுநாதன்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(101003) உடையார் விடு, சங்கரத்தை, வட்டுக்கோட்டை

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு.சுவைனஸ் அவர்களின் அன்புத் தங்கை

**டென்சில் சேவியர் சுபாஜனா**

அவர்கள் 26.07.2010 அன்று காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித சாள்ஸ் ம.வி.

(101006)

# மரண அறிவித்தல்

## டென்சில் சேவியர் சுபாஜனா

**(மாணவி, கலைப்பிரிவு 2011 - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)**



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி டென்சில் சேவியர் சுபாஜனா நேற்று (26.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் டென்சில் சேவியர் (உரிமையாளர்- கதீசன் ஹாட்வெயர், சின்னக்கடை) - மேரிறோஸ் (சீநோர் நிறுவனம், குருநகர்) தம்பதியரின் அன்பு மகளும் சுவைனஸ் (ஆசிரியர்- யா/புனித சாள்ஸ் ம.வி.), சுகந்தி (பிரான்ஸ்), சுரேக்கா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜிம்பிறவுண் (பிரான்ஸ்), றெஜிமலா ஆகியோரின் மைத்துனியும் இராஜேஸ்வரி- றோச் மோட்டியர், யோகம்-சின்ராசா, இராசராணி-ஜெயசீலன், ஜெராட்-சுசீலா ஆகியோரின் பெறாமகளும் அருட்தந்தை ஜேசுரட்ணம் (பங்குத்தந்தை, புனித பற்றிமா தேவாலயம்- பண்டத்தரிப்பு), இராஜசூரி- அழகு, பெனற்- ஜான்சி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான இராசாத்தி-ஐயாத்துரை மற்றும் சரஸ்-உடையார் ஆகியோரின் மருமகளும் செல்வன் சாள்ஸ் என்பவரின் அன்புக்குரியவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

இல.07, முதலாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். தொ.பே. 0774709847

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கால் பதிக்க முயலும் சீனர்களால் தமிழகத்துக்கு அபாயம்

## மீண்டும் எச்சரிக்கிறார் வைகோ



சென்னை,ஜூலை 27

இலங்கையில் கால் பதிக்கும் சீனர்களால் தமிழகத்துக்குப் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. இதுவரை தாக்குதலுக்கு உள்ளாகாத தமிழகமும் வருங்காலத்தில் தாக்கப்படும் அபாயம் உள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் எம்.பி.யும், மருத்துவருமான ஏ.என். கலாநிதி எழுதிய 'சீனப் பெருஞ் சுவர்' என்ற நூலின் வெளியீட்டு விழா சென்னை சேத்துப்பட்டில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த நூலை வெளியிட்டுப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

தென்னகத்தில்தான் கூடங்குளம், கல்பாக்கம் அணு உலைகளும், ஸ்ரீஹரிகோட்டா ரொக்கெட் ஏவுதளமும், தும்பா உள்ளிட்ட விண்வெளி ஆய்வு மையங்களும், விஜய நாராயணம், ஆவடி உள்ளிட்ட பாதுகாப்பு கேந்திரங்களும் உள்ளன.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு சீனா ஆயுத உதவி செய்ததன் மூலம் அங்கு காலூன்ற முயற்சிக்கிறது.

இதனால், தமிழகம் உள்பட தென்னகத்துக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுவரை தாக்குதலுக்கு ஆளாகாத தமிழகமும் வருங்காலத்தில் தாக்கப்படும் அபாயம் உள்ளது எனக் கருதப்படுகிறது.

சீனாவைப் பகை நாடாக இந்தியா கருதியதே இல்லை. அந்த நாட்டுடன் நட்புறவு பாராட்டவே, நேரு விரும்பினார். ஆனால், சீனாதான் நம் மீது படையெடுத்து இந்திய மக்களின் மனங்களை தவிக்க வைத்தது. அப்போது சிறையில் இருந்த அண்ணா, நேருவின் வேண்டுகோளை ஏற்று பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டார். 'நாடோடி மன்னன்' படத்தின் 100 ஆவது நாள் விழாவில் தனக்கு அளிக்கப்பட்ட தங்கவாளை நிவாரண நிதிக்கு வழங்கினார் எம்.ஜி.ஆர்.

ஆனால், சோனியா காந்திக்கு பிரச்சினை குறித்து சரியான அணுகுமுறை இல்லை. ஒருவர் சொல்வதை அப்படியே வழிமொழிவது சிந்தனையாளர் கூட்டம் அல்ல.

- இப்படி அவர் கூறினார்.

இதில் நூலாசிரியர் டொக்டர் கலாநிதி, தொழிலதிபர் மாதவ் குல்கர்னி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஔவை நடராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# மஹிந்த மனைவியுடன் அசின் 'போஸ்': அதைப் பார்த்தபோது ரத்தம் கொதித்தது!

## நடிகர் சங்கக் கூட்டத்தில் ராதாரவி, சத்தியராஜ் மட்டும் கண்டனம்





சென்னை,ஜூலை 27

படப்பிடிப்புக்காக இலங்கை சென்றுள்ள நடிகை அசினுக்கு நேற்றுமுன்தினம் நடந்த நடிகர் சங்கப் பொதுக்குழுக் கூட்டத்தில் ராதாரவி, சத்தியராஜ் ஆகியோர் மட்டுமே கண்டனம் தெரிவித்துப் பேசினர்.

நடிகை அசின் இலங்கை சென்றது மட்டுமின்றி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியுடன் சேர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளார். அதைப் பார்த்தபோது ரத்தம் கொதித்தது. ரத்தக் கண்ணீர் வடிந்தது என்று நடிகர் சத்தியராஜ் கதறினார்.

சங்கக் கூட்டத்தில் ராதாரவி பேசியவை வருமாறு -

இலங்கைக்கு நடிகர், நடிகைகள் செல்லக் கூடாது என்று திரைப்படச் சங்கங்கள் முடிவு செய்து அறிவித்துள்ளன. அதை மீறி அசின் இலங்கை சென்றிருக் கிறார். அவர் கேரளாவைச் சேர்ந்தவர். எல்லோருக்கும் இன உணர்வு வேண்டும்.

அசின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. ஆனால் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் சரத்குமார் கேட்டுக் கொண்டார். அதற்காக அசின் இதுவரை சரத்குமாரிடம் தொடர்புகொண்டு நன்றி கூடத் தெரிவிக்கவில்லை.

இலங்கை சென்றதற்காக அசின் நடிகர் சங்கத்தில் நேரில் ஆஜராகி வருத்தம் தெரிவித்துக் கடிதம் கொடுக்க வேண்டும். இனிமேல் இலங்கைக்கு நடிகர்-நடிகைகள் யார் செல்வதாக இருந்தாலும் நடிகர் சங்கத்தில் சொல்லி விட்டுத்தான் செல்ல வேண்டும்.- இப்படி அவர் பேசினார்.

அங்கு சத்தியராஜ் பேசியவை வருமாறு-

நடிகை அசின் இலங்கை சென்றது மட்டுமின்றி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியுடன் சேர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளார். அதைப் பார்த்தபோது ரத்தம் கொதித்தது - ரத்தக் கண்ணீர் வடிந்தது.

இலங்கை என்பது ரத்த பூமி. அங்கு நடிகர் - நடிகைகள் செல்லக் கூடாது. நடிகர் கருணாஸ் இலங்கையில் கதிர்காமம் கோவிலுக்குச் செல்ல முடிவு செய்திருக்கிறார் எனக் கூறியுள்ளார். கருணாஸை நான் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து நீங்கள் இலங்கை செல்ல வேண்டாம். அங்கு தனித்தமிழ் ஈழம் மலர்ந்த பின்னர் நீங்கள் போகலாம் - நானும் வருகிறேன். நான் ஒரு நாத்திகனாக இருந்தாலும் தமிழீழநாடு உருவான பின்னர் அங்குள்ள கோவிலுக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன்.

இலங்கை சென்றுதான் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்க வேண்டாம். அப்படி ஒரு நிலை வந்தால் உயிரையே விடலாம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# கருணாஸின் செயலைத் தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்

## சீமானின் 'நாம் தமிழர்' இயக்கம் சீற்றம்

சென்னை, ஜூலை 27

தனக்குத் திரைப்பட வாய்ப்பில்லாத போது கனடா, அமெரிக்கா என்று ஈழத் தமிழர்களின் பணத்தில் பிழைப்பு நடத்திய கருணாஸ் இன்று இலங்கையில் நடைபெறும் களியாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்க முனைந்துள்ளதை உலகத் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள். அத்துடன் 'நாம் தமிழர்' இயக்கத்தின் மீது அவர் வீசி வரும் அவதூறுகளைச் சட்டப்படி சந்திப்போம் - என்று அந்த இயக்கம் சீறியுள்ளது.

இதுகுறித்து நாம் தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

கொழும்பில் உள்ள தனியார் வானொலி நிறுவனம் ஒன்று சமீபத்திய இலங்கையின் போர் வெற்றியைக் கொண்டாடும் வகையிலும், அந்த நிறுவனத்தின் 16 ஆம் ஆண்டுத் தொடக்க விழாவை முன்னிட்டும் 3 நாட்கள் சிறப்பு நிகழ்ச்சியை இம்மாதம் 24, 25, 26 ஆகிய திகதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டது.



இதில் கலந்து கொள்ள தமிழ்நாட்டில் இருந்து பலரை அழைத்த பொழுதும் அனைவரும் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். ஆனால் 10 லட்சம் பணத்துக்கு ஆசைப்பட்டு கலந்துகொள்ள சம்மதித்தவர் நடிகர் கருணாஸ் ஆவார்.

அவருடன் செல்வதாக இருந்த அங்காடித்தெரு நடிகர் பாண்டி மட்டும் தமிழ் உணர்வாளர்களின் வேண்டுகோளை ஏற்று கொழும்பு செல்லும் நிகழ்ச்சியை ரத்துச் செய்தார்.

இந்நிலையில் கடந்த சனியன்று காலை 8.30 மணிக்கு சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் விமானத்தில் அவருக்கும் அவரது மனைவி உட்பட 9 நபர்களுக்கும் விமானச்சீட்டுகள், மேற்படி ஒலிபரப்பு நிறுவனத்தால் முன் பதிவு செய்யப்பட்டிருந்தன. சில முன்னணி இயக்குநர்களின் வேண்டுகோளை மீறியும் அவரது பயணம் உறுதியான நிலையில் உலகம் முழுவதிலும் இருந்து அவரிடம் தமிழர்கள் நிகழ்ச்சியை ரத்து செய்ய அவரிடமே முறையிட்டிருக்கலாம் என்று தெரிகின்றது.



தனக்குத் திரைப்பட வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் கனடா, அமெரிக்கா என்று ஈழத் தமிழர்களின் பணத்தில் பிழைப்பு நடத்திய கருணாஸ் இன்று இலங்கை அரசின் வெற்றியைக் குறிக்கும் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்க முனைந்துள்ளது மிகவும் வேதனையைத் தரும் விடயமாகும். அவரது இந்த இனத் துரோகச் செயலை தமிழர்கள் ஒரு பொழுதும் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை திடீரென்று சென்னை பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் தன்னை தொலைபேசியில் மிரட்டுகின்றனர் என முறைப்பாடு அளித்துள்ளார். உண்மை வெளியான உடன் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகின்றார். தமிழர்களுக்கு உதவி செய்வதாக அசினின் வழியில் தம்பட்டம் அடிக்கின்றார். நாம் தமிழர் இயக்கத்தின் மீது அவதூறுகளை அள்ளி வீசுகின்றார்.

தமிழர்களின் குரலாக ஒலிக்கும் நாம் தமிழர் இயக்கம் இதுகுறித்து அச்சம் கொள்ளாது. தமிழர்களின் இனமானப் பணியில் அது தன்னைத் தொடர்ந்து அர்ப்பணிக்கும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியச் செய்திகள்

# சத்தியமங்கலத்தில் புதையல்; 744 தங்கநாணயங்கள் மீட்பு!



ஈரோடு,ஜூலை 27

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியில் தங்கப்புதையல் கண்டுபிடிக்கப்பட்டு, 744 தங்க நாணயங்கள் மீட்கப்பட்டன.

சத்திவட்டம், திங்களூர் அருகிலுள்ள வனப்பகுதியில் மஜ்ரா கோட்டமாளம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் வீரன். இவரது மனைவி மாதி. இவர்களது வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், மண்ணைத் தோண்டிய போது வட்ட வடிவிலான மண்சட்டி புதைந்திருந்தது தெரியவந்தது. அதை வெளியில் எடுத்துப் பார்த்தபோது, சிறிய தங்கக்காசுகள் இருந்துள்ளன. தகவலறிந்து திரண்ட அக்கம்பக்கத்தினர், ஆளுக்கு சில நாணயங்களை எடுத்துச் சென்றுவிட்டனர். தகவலறிந்த வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அக்கி ராமத்திற்குச் சென்று விசாரணை நடத்தி 744 தங்க நாணயங்களைக் கைப்பற்றினர். அவை ஒவ்வொன்றும் 400 மில்லிகிராம் எடை கொண்டவையாக இருந்தன.

# இடதுசாரிகளின் சரிவுக்கு காரத்தின் தவறான வழிகாட்டுதலே காரணம்

## சோம்நாத் சட்டர்ஜி குற்றச்சாட்டு

டில்லி,ஜூலை 27

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 2009 மக்களவைத் தேர்தலில் பலத்த பின்னடைவை சந்தித்ததற்கும், தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருவதற்கும் பிரகாஷ் காரத்தின் தவறான வழிகாட்டுதலே முழுக் காரணம் - என்று மக்களவை முன்னாள் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி குற்றம் சுமத்தியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட சோம்நாத் சட்டர்ஜி, புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். 1971 இல் இருந்து 10 தடவைகள் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் தனது நீண்ட கால அரசியல் அனுபவங்களையும், மலரும் நினைவுகளையும் அந்தப் புத்தகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

2009 மக்களவைத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பலத்த பின்னடைவைச் சந்தித்தது. தற்போது அதன் செல்வாக்கு இறங்கு முகமாகவே உள்ளது. இதற்கு பிரகாஷ் காரத்தின் மோசமான கொள்கைகளும், தவறான வழிகாட்டுதலுமே முழுக் காரணம்.

தற்போதைய தலைமையின் கீழ் இடதுசாரி இயக்கத்தின் செயற்பாட்டைப் பார்க்கும் போது இடதுசாரி இயக்கமே இக்காலக் கட்டத்துக்கு ஒத்துவராததாகிவிட்டது.

- இப்படி அந்தப் புத்தகத்தில் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அசத்தல் ஆரம்பம்!

## பரணவிதாண, சங்கக்கார சதம்

கொழும்பு, ஜூலை 27

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பரண விதாண,



சங்கக்கார ஆகியோர் சதமடித்து அசத்த, முதலாவது நாள் ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 312 ஓட்டங்களைப் பெற்று, அசத்தலான ஆரம்பத்தைக் கண்டுள்ளது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் இந்திய அணி, முதலாவது ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளால் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் இரண்டாவது போட்டி, நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய இலங்கை அணி, முதல் விக்கெட்டுக்காக 99 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த டில்ஷானை (55) இழந்தது.

பின்னர் ஜோடி சேர்ந்த பரண விதாரண - சங்கக்கார ஜோடி சிறப்பாக ஆடி, ஓட்டங்களைச் சேர்த்தது. பரண விதாரண சதமடித்த (100) கையோடு ஆட்டமிழந்தார்.

இறுதியில், நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இலங்கை அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 312 ஓட்டங்களைச் சேர்த்தது.

சங்கக்கார 130 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், இஷாந்த் சர்மா, ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்று ஆகும்.

# பட்டம் வென்றது சானியா ஜோடி

வேல்ஸ், ஜூலை 27

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் சார்பில் இங்கிலாந்தின் வேல்ஸ் நகரில் நடத்தப்பட்டு வந்த ரென்னிஸ் தொடரில், இந்தியாவின் சானியா மிர்ஷா - பின்லாந்தின் எம்மா லெய்ன் ஜோடி மகளிர் இரட்டையர் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

அண்மையில் நடந்து முடிந்த இறுதி ஆட்டத்தில் இந்த ஜோடி, இங்கிலாந்தின் தாரா மூர் - பிரான்செஸ்கா ஸ்ரீபன்சன் ஜோடியை 2-6, 6-3, 13-11 என்ற செற் கணக்கில் வென்றது.




# ரியல் மட்ரிட் அணியிலிருந்து விலகினார் ரால் கன்சாலஸ்

கொழும்பு, ஜூலை 27

ரியல் மாட்ரிட் கழகத்தில் விளையாடி வந்த ரால் கன்சாலஸ், ஜேர்மனியின் சால்கி - 04 கழகத்தில் இணைந்துள்ளார்.

ஸ்பெயின் அணியின் முன்னாள் அணித் தலைவரும் ரியல் மட்ரிட்டின் மூத்த வீரருமான ரால் கன்சாலஸுக்கு தற்போது 33 வயதாகிறது. வயதாகிவிட்ட காரணத்தினால் உலகக்கிண்ணத்துக்கான ஸ்பெயின் அணியில் அவர் இடம்பெறவில்லை.

1994ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை (16 ஆண்டுகளாக) ரியல் மட்ரிட் அணிக்காக 550 போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 228 கோல்களும் அடித்துள்ளார்.

ரியல் மட்ரிட் அணியின் முக்கிய வீரராகக் கருதப்பட்ட அவர், தற்போது ஜேர்மனியின் சால்கி-04 அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

சால்கியில் ரால் இணைந்தமை குறித்து அந்த அணியின் பயிற்சியாளர் மெகாத் கூறுகையில்,

''ராலின் வருகை எங்கள் அணிக்குப் புத்துணர்வை அளிக்கும் என்று நம்புகிறேன். நடைபெறவுள்ள 'பந்தஸ்லீகா'த் தொடரில் அவர் அனைவராலும் கவனிக்கப்படும் வீரராக இருப்பார்.'' - என்றார்.

# மெக்ராத் - சாரா இரகசிய திருமண நிச்சயதார்த்தம்

மெல்பேர்ண், ஜூலை 27

மெக்ராத் தனது வாழ்க்கையின் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பிக்கவுள்ளார். மனைவி மறைந்த சோகத்திலிருந்து மீண்ட இவர், சாரா லியானார்டியுடன் திருமண நிச்சயதார்த்தம் செய்துகொண்டுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான கிளன் மெக்ராத், 1999இல் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேன் என்பவரைக் காதலித்து திருமணம் முடித்தார். இவர்களுக்கு ஜேம்ஸ்(வயது-10), ஹோலி(வயது-8) என்ற இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

மார்பகப் புற்றுநோயால் மிக நீண்ட காலம் அவதிப்பட்ட ஜேன் (வயது-42), 2008 இல் மரணமடைந்தார்.

இதற்குப் பின்னர், மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுப் பணிகளில் மெக்ராத் தீவிரமாக ஈடுபட்டுவந்தார். ஜேன் நினைவில் வாடிய இவரது வாழ்க்கையில், இத்தாலியைச் சேர்ந்த சாரா லியானார்டி வசந்தத்தை ஏற்படுத்தினார்.

2009இல் தென்னாபிரிக்காவில் நடந்த ஐ.பி.எல்., 'பார்ட்டி'யில் இருவரும் முதன் முதலாகச் சந்தித்துக்கொண்டனர். தொடர்ந்து நெருக்கமாகப் பழகிய இவர்கள், தமது திருமண நிச்சயதார்த்தத்தை மிகவும் இரகசியமாக நடத்தியுள்ளனர்.

# ஆஸியில் எதிர்க்கட்சி ஆட்சிபீடமேறினால் வெளிநாட்டவர்களுக்கான விஸாவில் வெட்டு

## தேர்தல் பிரசாரத்தில் வாக்குறுதி

மெல்போர்ன், ஜூலை 27


நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் விசாவின் எண்ணிக்கையை 3 இலட்சத்திலிருந்து 1.7 இலட்சமாகக் குறைப்போம் என்று ஆஸ்திரேலியாவின் பிரதான எதிர்க்கட்சியான லிபரல் கட்சி தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் அடுத்த மாதம் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் வெற்றிக் கனியைப் பறித்து ஆட்சிப் பீடத்தில் அமரவேண்டும் என்பதில் பிரதான எதிர்க்கட்சியான லிபரல் கட்சி முனைப்பு காட்டி வருகிறது.

இந்தத் தேர்தலில் ஆளும் கட்சியைத் தோற்கடிக்க லிபரல் கட்சி ஏராளமான உத்திகளை வகுத்துள்ளது. இவற்றில் முக்கியமானதாகக் கருதப்படுவது வெளிநாட்டவருக்கு வழங்கும் விசாவின் எண்ணிக்கையை குறைப்பது என்பதுதான்.

ஆஸ்திரேலியாவில் வெளிநாட்டவரின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் அந்நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதை புரிந்துகொண்டுள்ள லிபரல் கட்சியினர், தங்களை ஆட்சியில் அமர்த்தினால் வெளிநாட்டவருக்கு வழங்கும் விசாவின் எண்ணிக்கையை குறைப்போம் என்பதை தேர்தல் வாக்குறுதியாக அளித்துள்ளனர்.

இதை முன்னிலைப்படுத்தியே தேர்தல் பிரசாரத்தை தங்களது கட்சி மேற்கொள்ளும் என்று லிபரல் கட்சியின் தலைவர் டோனி அபோட் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவில் கல்வியை ஆளும் கட்சி விற்று வருகிறது. இதை நாங்கள் ஆதரித்தாலும் வெளிநாட்டவருக்கு அதிகமான விசா வழங்கப்படுவதில் எங்களுக்கு உடன்பாடில்லை என்றும் டோனி அபோட் குறிப்பிட்டுள்ளார்.




# அமெரிக்காவில் விடுதலையான ரஷ்ய உளவாளிகளுக்கு வேலைவாய்ப்பு

## ரஷ்யப் பிரதமர் புடின் தெரிவிப்பு

மாஸ்கோ, ஜூலை 27

''அமெரிக்காவால் விடுவிக்கப்பட்ட ரஷ்ய உளவாளிகளுக்குப் பிரகாசமான எதிர்காலம் அமைத்துத் தரப்படும்'' என்று ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த 10 உளவாளிகள், அமெரிக்காவில் பல நிறுவனங்களில் வேலை செய்துகொண்டு, வேவு பார்த்து வந்தனர். இவர்களைக் கண்டுபிடித்து அமெரிக்கா, கைது செய்தது.

பின்னர், ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, ரஷ்யா கைதுசெய்திருந்த நான்கு அமெரிக்க உளவாளிகளை விடுவித்ததற்குப் பதிலாக, ரஷ்ய உளவாளிகள் 10 பேர் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் ரஷ்யா வந்து சேர்ந்தனர். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை ஒரு தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த ரஷ்ய பிரதமர் புடின் கூறியதாவது:

''ரஷ்ய உளவுத்துறையான கே.ஜி.பி., உளவாளியாக கிழக்கு ஜேர்மனியில் நான் இருந்தேன். ஒரு உளவாளியாக வேலை பார்ப்பது என்பது மிகவும் கடினம். உங்கள் தாய்மொழியைப் போல், நீங்கள் தங்கியிருக்கும் நாட்டின் மொழியையும் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு புடின் தெரிவித்தார்.

# ஜேர்மன் இசைவிழா நெரிசலில் 9 பெண்கள் உட்பட 19 பேர் பலி!

பேர்ளின், ஜூலை 27

ஜேர்மனியில் நடந்த இசைத்திருவிழாவில் கலந்துகொள்வதற்காக கூடிய பெருங்கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி, 19 பேர் பலியாயினர். அவர்களில் 9 இற்கும் மேற்பட்டோர் பெண்களாவர். 340இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஜேர்மனியில் டூயிஸ்பெர்க் என்ற நகரில் ஆண்டுதோறும் இசைத்திருவிழா நடந்து வருகிறது. காதல் பேரணி என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இசைத்திருவிழா, கடந்த 1989ஆம் ஆண்டு அமைதி ஆர்ப்பாட்டமாகப் பேர்ளின் நகரில் தொடங்கியது. பின்னர் திறந்தவெளி இசைத்திருவிழாவாக அது உருவெடுத்தது.

இந்தத் திருவிழாவில் ஐரோப்பா முழுவதுமிருந்து வந்து இசை இரசிகர்கள் கலந்துகொள்வார்கள். 2 ஆண்டுகளாக நடைபெறாமலிருந்த இந்த இசைத்திருவிழா கடந்த ஆண்டு முதல் மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்த இசைத்திருவிழா, டூயிஸ் ரயில் நிலையம் அருகிலுள்ள திறந்தவெளித் திடலில் சனிக்கிழமை நடந்தது. இதில் 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். இதனால் திடலில் இடமின்மையால் மாலை 5 மணியளவில் திறந்தவெளி அரங்குக்கான வழி மூடப்பட்டது.

இந்த விழாவுக்கு வருபவர்கள், சுரங்கப் பாதை வழியாகத்தான் திடலுக்கு வர வேண்டும். அந்தச் சுரங்கப்பாதையில் வந்தவர்கள் திடலுக்குள் நுழைய முடியாமல் அங்கேயே நின்றுவிட்டனர். பின்னால் வந்தவர்கள் முன்னேற முடியவில்லை. திரும்பிச் செல்லவும் முடியவில்லை. முன்னால் செல்ல முடியாமலும், பின்னால் நகர முடியாமலும் இருந்த நிலையில் நெரிசல் அதிகமானது.

நெரிசலில் சிக்கி சிலர் கீழே விழுந்தனர். பின்னால் வந்தவர்கள் அவர்கள் மீது விழுந்தனர். இந்தச் சம்பவத்தில் 19 பேர் பலியாயினர். அவர்களில் ஒன்பதுக்கும் மேற்பட்டோர் பெண்களாவர். மற்றும் 340இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சிலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் சிலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தனர். 340 பேர் காயமடைந்தனர்.

இந்த அளவுக்குத் துயரச் சம்பவம் நடந்த போதிலும் இசை நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டது. இசைநிகழ்ச்சியை இரத்து செய்தால் மீண்டும் கூட்ட நெரிசல் ஏற்படக்கூடும் என்பதால் அந்த நெரிசலை தவிர்ப்பதற்காக நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டது என நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜேர்மனிய ஜனாதிபதி கிறிஸ்டியன் உல்ப்பும், பிரதமர் ஏஞ்சலினா மெர்க்கிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் தங்களது அனுதாபத்தையும் இருவரும் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனியை சோகத்தில் ஆழ்த்தியுள்ள இந்தத் துயர சம்பவம் குறித்து விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளனர்.

# "மட்டால்" தலிபான் வசமானது

காபூல், ஜூலை 27

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நூரிஸ்தான் மாநிலத்திலுள்ள பார்க்-இ-மட்டால் என்ற மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றிவிட்டார்கள். இந்த மாவட்டம் பாகிஸ்தான் எல்லை அருகே உள்ளது. இதன் வழியாகத்தான் தலிபான்களுக்கு ஆயுதமும், உணவுப்பொருட்களும் வந்து சேர்கின்றன. தீவிரவாதிகளும் வந்தடைகிறார்கள்.

இந்த மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றிவிட்டார்கள். இந்த மாவட்டம் இதுநாள் வரை ஆப்கானிஸ்தான் அரசின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. இதைக் கைப்பற்றுவதற்காக கடந்த சில நாட்களாகக் கடும்யுத்தம் நடந்து வந்தது.

யுத்தம் தீவிரமானதைத் தொடர்ந்து உயிரிழப்பைத் தவிர்ப்பதற்காக ஆப்கானிஸ்தான் பொலிஸ் படை வாபஸானது. தெற்கில் ஹெல்மாண்ட் மாநிலத்தில் சங்கின் மாவட்டத்தில் அமெரிக்க இராணுவத்துக்கும், தலிபான்களுக்குமிடையே நடந்த யுத்தத்தில் 40 அப்பாவிகள் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர்ப் பூக்கள்

## செல்வி சேவியர்
## சுபாஜனா
(கலைப்பிரிவு மாணவி - 2011)

அன்பு எனும் ஆயுதம் கொண்டு
நட்பு என்னும் சிறைக்குள்
கடிவாளம் இட்டவளே!
மரணங்கள் மலிந்து விட்ட மண்ணுலகில்
மாண்டார் மீண்டிடார்
ஆனாலும் – உன்
இழப்பை எண்ணி அழுகின்றோம்
உன் ஆத்மா சாந்தி பெற எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நண்பியே! உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(101031)

உன் பிரிவால் துயருறும்:
கலைப்பிரிவு நண்பர்கள்
(கிறிஸ்தவம் 2010, 2011, 2012)

*54, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

## மின்சாரம் தாக்கிய பெண் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் மூர்ச்சையுற்றார்.

இச்சம்பவம் நேற்று கச்சாயில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ.அற்புத மலர் (வயது 43) என்பவர் மூர்ச்சையுற்ற நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மின் அடுப்புக்கு மின்சாரம் பெற்ற வேளையில் தூக்கி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

## உயர் வகுப்பு மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சுதுமலை தெற்கு அம்பாள் விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து 'ஈ சொப்ற்' கணனி நிறுவனத்தின் அனுசரணையுடன் உயர்தர கலைப் பிரிவு மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு கரவெட்டியில் நாளை புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கு மாலு சந்தியில் உள்ள கரவெட்டி பிரதேச சபையில் நடைபெறும். இதில் தமிழ், அரசியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல்கள் குறித்து கருத்துரை வழங்கப்படும். (ஓ-323)

# துயர் பகிர்வு

எமது கல்லூரியின் பிரதி அதிபர் W.ஜெயசீலன்
அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
யாழ். மத்திய கல்லூரி.

(101027)

# கண்ணீர் அஞ்சலி



அ.யோ.கலிஸ்ரஸ் கஜேந்திரன்



சாந்தகுமார் சந்துரு

இவர்களின் அகால மறைவைக்கேட்டு அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்ததுடன் இவர்களின் பெற்றோர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரில் பங்கு கொள்ளும்:
**புனித பத்திரிசியார் கல்லூரி நண்பர்கள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1946 ★ 04 ★ 18



மறைவு
2010 ★ 06 ★ 27

## அமரர் அப்புக்குட்டி
## கந்தையா வீரபாகு

நாள்கள் பல கடந்தாலும்
நம் நினைவை விட்டகலாது
உங்கள் முகம் என்றும் எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்

கடந்த 27.06.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31 ஆம் நாள் நினைவாக இன்று (27.07.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(101028) **குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி







## அன்ரன் யோகராசா கலிஸ்ரஸ் கஜேந்திரன்
(பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்)

## சாந்தகுமார் சந்துரு
(யாழ். பல்கலைக்கழக கலைப் பிரிவு இறுதிவருட மாணவன்)

சுவர்க்கம் நிச்சயித்த நம் நட்புறவு
காலமும் தொடராது
அகால மரணம்
ஆட்கொண்டதேனோ

மாண்டார் மீளாது
போகலாம்
ஆனால் மாறாது
நண்பா உங்கள் அன்பு நினைவலைகள்...

(அ/569188)

**சென்.ஜோன்ஸ் கல்லூரி 2005 A/L மாணவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புத் திருத்த யோசனைகளை முன்வைத்து பேச்சு நடத்துங்கள்

## அரசுக்கு ஐ.தே.க. அழைப்பு

கொழும்பு, ஜூலை 27

அரசமைப்புத் திருத்தத்துக்கு அரசு தமது ஆலோசனைகளை முன்வைத்து அனைத்துக் கட்சிகளுடனும் சிவில் அமைப்புகளுடனும் பேச்சு நடத்தவேண்டும் என்று ஐ.தே.கட்சி பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐ.தே. கட்சிக்கு அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்த சம்பிரதாயபூர்வமாக அழைப்பு விடுத்தது. ஐ.தே.கட்சியுடன் மட்டும் பேசுவதால் எதனையும் சாதித்துவிட முடியாது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு வேறுவிதமாக உள்ளது. எனவே, சகல கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் கூடிய அரசமைப்பே இன்றைய தேவையாகும்.

அரசின் போக்கு இப்போது வித்தியாசமாக உள்ளது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை இழப்பால் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பல கிராமப்புறப் பாடசாலைகள் மூடவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வழங்கப்பட்ட வாக்குறுதியான 2,500 ரூபா சம்பள உயர்வைக் கோரி போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். மக்கள் விலைவாசி உயர்வை சமாளிக்க முடியாமல் அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, அரசின் முக்கிய அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரத நாடகம் காரணமாக சர்வதேச ரீதியில் நெருக்கடி ஆரம்பித்துள்ளது. பான் கீ-மூன் தமக்கு ஆலோசனை வழங்க நியமித்த மூவரைக்கொண்ட நிபுணர் குழுவுக்கு உதவும் முகமாக மேலும் 8 பேரைக் கொண்ட குழுவே அமைத்துள்ளார். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## இந்திய கட்டட கலைஞர்களின் கைவண்ணத்தில் சிறுவர் பூங்கா

தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிறுவர் பூங்கா தென்னிந்திய கட்டடக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாகை மாவட்டம், சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த கட்டடக் கலைஞர்களால் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

சிங்கம், யானை போன்ற உருவங்கள் சிறுவர்களை மகிழ்விக்கக்கூடிய வகையில் கண்கவர் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

சிறவர் பூங்கா அமைக்க ஜப்பானிய நிறுவனம் 10 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தினால் வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சிறுவர் விடுதிக்கு அருகில் பூங்காவும் அமைக்கப்படுகிறது. (ஒ-207)

## யாழ். பல்கலை ஆசிரியர் சங்கத்தினர்
# சகல பணிகளையும் இன்று நிறுத்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தினர் இன்று சகல பணிகளையும் நிறுத்தி பிரதான அலுவலகம் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருக்கின்றனர்.

நேற்றுக் காலை கூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் சங்கங்களின் சம்மேளனம் சம்பள உயர்வு கோரி இன்று அழைப்பு விடுத்துள்ள அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கு கொள்வது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

பரீட்சைகள் உட்பட சகல பணிகளையும் நிறுத்தி ஒன்று கூடுவதெனவும் -

அதன்பின்னர் பிரதான அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வது என்றும் - முடிவு செய்யப்பட்டது.

இந்தப் போராட்டங்களில் விஞ்ஞான மருத்துவ பீடங்களின் ஆசிரியர் சங்கங்களும் பங்குபற்றவிருக்கின்றன. (ஒ-ஐ)

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜூலை 27

இன்று வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுக்கு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை பத்திரிகை நிறுவனம், இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் இணைந்து 2009 ஆம் ஆண்டுக்கான விருதை 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனுக்கு வழங்கியுள்ளதை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வெகுவாகப் பாராட்டுகின்றது.

சுமார் 50 ஆண்டுகளாக பத்திரிகைத் துறையில் சேவையாற்றும் கானமயில்நாதன் துணிச்சலாகவும், ஆணித்தரமாகவும், நடுநிலைமையாகவும் மக்களைக் கவரும் வகையில் ஆசிரியர் தலையங்களைத் தீட்டி மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். இதற்காக 1998 ஆம் 2008 ஆம் ஆண்டுகளில் உதயன் பத்திரிகை துணிச்சலுக்கான விருதையும் சிறந்த இதழியல் பெறுபேற்றுக்கான விருதையும் பெற்றதன் பின்னணியில் இருந்து கருமமாற்றினார்.

எமது சங்கத்துக்கு இவர்களும் முன்னைநாள் 'உதயன்', 'சுடர்ஒளி' பிரதம ஆசிரியர் வித்தியாதரனும் பின்நின்று ஆலோசனைகள் வழங்கி பத்திரிகையாளரின் தொழில் திறனை மேம்படுத்த வழங்கி வரும் பேருதவிகள் பாராட்டத்தக்கவை. (ஒ-6-302)

# அரசின் நிதி கிடைத்த பின்னரே மாகாண அமைச்சுகள் கிளிநொச்சிக்கு

திருகோணமலை, ஜூலை 27

வடக்கு மாகாண சபை அலுவலகங்களை கிளிநொச்சிக்கு மாற்றும் பணிகள், அரசிடம் இருந்து நிதி கிடைத்த பின்பே முன்னெடுக்கப்படும்.

வடக்கு மாகாண சபையின் செயலாளர்களுக்கும் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையில் நேற்று நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாகாண சபை அமைச்சு அலுவலகங்களை கிளிநொச்சிக்கு இடமாற்றுவது தொடர்பாக ஆராய்வதற்காக இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சியில் தமது அமைச்சு அலுவலகங்களை இயக்குவதற்கு, அங்குள்ள கட்டடங்கள் புனரமைக்கப்படவேண்டும் என்று செயலாளர்கள் தெரிவித்தனர்.

அந்தப் புனரமைப்பு வேலைகளுக்கு 200 மில்லியன் முதல் 300 மில்லியன் ரூபா வரை தேவை என்று ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது.

அரசிடம் இந்த நிதியைப்பெற நடவடிக்கை எடுப்பதாகவும் அதுவரை கிளிநொச்சிக்கு மாற்றும் பணியை நிறுத்துவதாகவும் ஆளுநர் செயலாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-ஐ)

# மகத்தான முறையில் சேவையாற்றி வரும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சமாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.மாவட்டத்தில் மகத்தான முறையில் வெற்றிகரமாக இயங்கி அங்கத்தவர்களுக்கு சேவை செய்யும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் பாராட்டுக்கு உரியதாகின்றது.

இவ்வாறு யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றுகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.வேல்குமார் கூறினார்.

இக்கூட்டம் கூட்டுறவாளர் வீரசிங்க மண்டபத்தில் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றது. சமாசத்தின் செயலாளர் சு.நகுலேஸ்வரன் வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையையும் செயல்பாட்டு அறிக்கையையும் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து நடந்த புதிய நிர்வாக சபைத் தேர்வை கூட்டுறவு பரிசோதகர் கைலைநாதன் நெறிப்படுத்தினார். (ஒ)

# தர்சிகாவின் சடலம் கொழும்புக்கு; ஏற்பாடு குறித்து இன்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல வைத்திய மாது தர்சிகாவின் சடலம் நாளை புதன்கிழமை தோண்டி எடுத்து கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பிக்கவுள்ளது.

இந்த மரணம் தொடர்பான விவகாரம் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் முன் எடுக்கப்பட்டது.

கைதடி ஊற்றல் மயானத்தில் புதைக்கப்பட்டுள்ள தர்காவின் சடலத்தை தோண்டி எடுத்து கொழும்புக்கு கொண்டு சென்று சட்டவைத்திய நிபுணரின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

இந்தச் சடலத்தைத் தோண்டி எடுக்கும் போது முன்னெடுக்கவேண்டிய ஏற்பாடுகள் குறித்து நீதிமன்றம் உத்தரவுகளை நேற்று விடுக்கவிருந்தது.

பாதிக்கப்பட்டவர்களும் சாவகச்சேரி பொலிஸாரும் மன்றில் சமுகமளிக்காததை அடுத்து இன்று இதுவிடயம் குறித்து உத்தரவு வழங்கப்படும் என்று நீதிவான் தெரிவித்தார். (ஒ-ஐ)

## மாணவன் கபிலநாத் படுகொலை வழக்கு:
# விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் படுகொலை வழக்கின் மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிடப்பட்டது.

இவ் வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது நீதிவான் ஏ.எம்.எம்.றியால் இந்தக் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை அடுத்த தவணையின்போது நீதிமன்றில் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

# டெங்கு ஒழிப்புப் பிரசாரத்தில் சாவகச்சேரி பொலிஸார் மும்முரம்

தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி பொலிஸாரினால் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸார், சுகாதாரப் பகுதியினர், சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் ஆகியோர் ஆறு குழுக்களாகப் பிரித்து வீடு வீடாகச்சென்று டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதை தடுக்கும் செயற்பாட்டையும் மேற்கொண்டனர்.

அத்துடன் நகர்ப்பகுதியில் உள்ள திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களுக்கும் சென்று பிரசாரப் பணிகளில் ஈடுபட்டனர். (ஒ-207)

# பனைசார் அபிவிருத்தி தொடர்பாக நேற்று கொழும்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 27

பனை அபிவிருத்திச் சபையூடாக பனைசார் தொழிற்துறையை மேலும் விருத்தி செய்வது தொடர்பாக சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பத்து சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் பனைசார் தொழிற்துறையை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் பனை அபிவிருத்திச் சபையூடாக செயற்திட்டங்களை [illegible] வெளிநாட்டு வருவாயை ஈட்டக்கூடிய செயற்திட்டங்கள் குறித்து அங்கு கலந்தோலோசிக்கப்பட்டது.

சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தாம் வழங்கவுள்ள பங்களிப்புக்கள் குறித்து தமது கருத்துக்களையும் வழங்கியிருந்தனர்.

நேற்றைய கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி ஜெகராஜசிங்கம், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோர் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் உடனிருந்தனர். (ஒ)

# ஓட்டோ-கனரக வாகனம் மோதல் மூவர் அதே இடத்தில் துடிதுடித்து மரணம்!

கொழும்பு, ஜூலை 27

வெலிமடை - தம்பவின்ன பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

வெலிமடை - அப்புத்தளை வீதியில் வெலிமடை நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்றுடன் கனரக வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ சாரதி மற்றும் அதில் பயணித்த இரு [illegible] உயிரிழந்துள்ளனர். (ஒ-சி)

## வவுனியாவில் வடமாகாண விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடமாகாண விளையாட்டு விழா எதிர்வரும் 31, ஓகஸ்ட் 1, 2, 3 ஆகிய நான்கு தினங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறுமென மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் உள்ள தமிழர்களின் ஏக பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லையாம்

## வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமே என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூலை, 27

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என நான் தெரிவித்ததாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு இணையத்தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது. இச்செய்தியை தமிழ் ஊடகங்கள் மறு பிரசுரம் செய்துள்ளன. இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள எமது கட்சியின் கருத்து சரியான அடிப்படையில் புரிந்துகொள்ளப்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் உடன்பிறப்புக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு இருக்கக்கூடிய உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். கடந்த காலங்களில் தமிழீழ விடுதலை புலிகளை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக கூட்டமைப்பு பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தது. இன்று புலிகள் இல்லாத நிலையில் வடக்கு, கிழக்கின் அரசியல் தலைமை பாத்திரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வகிக்கின்றது என்பதுவே ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். எனவே, கூட்டமைப்பின் அரசியல் பாத்திரம் தொடர்பில் எமக்கு முரண்பாடு கிடையாது.

அதேவேளையில் வடக்கு, கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார்கள். இம்மக்கள் எதிர்நோக்கும் அரசியல், கலாசார, சமூக - பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான சவால்கள் உதாசீனப்படுத்தப்படவோ அல்லது குறைத்து மதிப்பிடப்படவோ முடியாதவையாகும். இந்த அடிப்படை யதார்த்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட வடக்கு, கிழக்கை தளமாக கொண்டு செயற்படும் அனைத்து தமிழ் கட்சிகளும் புரிந்து கொண்டுள்ளன என நாம் நம்புகின்றோம்.

இப்பிரச்சினைகளை தென்னிலங்கையை தளமாக கொண்டு செயற்படும் கட்சிகள் தாமே எதிர்கொண்டு தீர்வுகாண வேண்டும். இல்லாவிட்டால் எமது கட்சிகளின் செயற்பாட்டிற்கு அர்த்தம் இருக்க முடியாது. இந்த அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையில் இலங்கை முழுக்க வாழும் அனைத்து தமிழ் மக்கள் தொடர்பில் எந்தவொரு கட்சியும் ஏகபோக பிரதிநிதித்துவ உரிமையை கொண்டிருக்கவில்லை. இதுவே ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுதியான நிலைப்பாடாகும். இதை தமிழ் மக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் புத்திஜீவிகளும், புலம்பெயர்ந்த தமிழர்களும் புரிந்துகொள்ள வேண்டும். - இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

# கொழும்பு புறக்கோட்டையில் சுமார் 14 லட்சம் ரூபா கொள்ளை

கொழும்பு, ஜூலை, 27

கொழும்பு, புறக்கோட்டையில் பகுதியில் நேற்று பட்டப்பகலில் சுமார் 14 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வங்கி ஒன்றில் வைப்பிலிட வந்த ஒருவரிடம் இருந்தே இரு ஆயுததாரிகள் இப்பெருந்தொகைப் பணத்தைப் கொள்ளையடித்தனர்.

வங்கிக்கு அருகில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வாகனத்தைத் நிறுத்தி விட்டு வங்கியை நோக்கி இந்நபர் சென்று கொண்டிருந்த சமயமே அவரை ஆயுததாரிகள் இடையில் மடக்கிக் கொள்ளையிட்டனர். புறக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாகப் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ஒ-சி)

## அரசமைப்புத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலை குறித்தும் இக்கட்சிகளுடன் ஆராயப்படும் எனவும் அவர் சொன்னார்.

இதேவேளை, நாளை புதன்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தும். அதன் பின்னர் ஏனைய கட்சிகளுடன் நாடாளுமன்றத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தப்படும் என்றும் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார். (அ-சி)

## 4 மாதங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 205 பேர் குறித்து எதுவித தகவல்களும் இல்லை.

இவர்களில் பெரும்பாலானோர் 12 முதல்18 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அநுராதபுரம் பிரதேசத்திலேயே அதிகமான சிறுவர்கள் காணாமற் போயுள்ளனர். ஜனவரி முதல் ஏப்ரல் வரை இப்பிரதேசத்திலிருந்து 50 பேர் காணாமற்போயுள்ளனர்.

இவர்களில் பலர் விபசாரத்துக்காக அல்லது வளர்ப்புக்காக கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுதியிருந்தமை தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து புதுடில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம் மற்றும் தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு போன்றவர்கள் கலந்துகொண்டு இதுகுறித்து விவாதித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## ஜெனரல் சரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவை நியமித்துள்ளார் என அரச சட்டத்தரணி வசந்த நவரட்ன பண்டார தெரிவித்தார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகவுள்ளதால், அன்றையதினம் சரத் பொன்சேகாவுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட வேண்டும் அரச சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் ரஷ்மி சிங்கபுலி, சரத் பொன்சேகாவை எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (ஒ-சி)

**ஒளியருவி டிஜிற்றல் கலர்லாப்**

நெல்லியடி, வல்வெட்டி எனும் நிறுவனத்திற்குப் பின்வரும் பணி யாள்கள் தேவை.

* Photoshop தெரிந்த (பெண்கள்)

* உதவியாளர் (ஆண்)

முக்கிய குறிப்பு: வடமராட்சியை வசிப்பிடமாகக் கொண்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 0777241958.

## பல்கலை. ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் வீடுதிரும்பிக் கொண்டிருந்த அந்த வேளையில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த சந்துரு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கலிஸ்ரஸ் கஜேந்திரன் (வயது 24) என்பவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது வழியில் மரணமானார். (ஒ-6-14-135)

## ஐ.தே கட்சியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் களையப் பட்டு ஒற்றுமை ஏற்படவேண்டும் என வலியுறுத்துவதற்காகவே தமக்கு தாமே தீமூட்டிக்கொண்டார் எனக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த கட்சி ஆதரவாளர் நேற்று காலை தம்முடன் தொலைபேசியில் உரையாடிய போது கட்சியின் நிலை குறித்து கவலை தெரிவித்தார் எனவும் கரு ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

## மேல் மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குறுந்தூரப் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டதென்றும் இந்தப் பேச்சின் போது இணக்கம் காணப்பட்டது. ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்ட வழித்தடமொன்றின் கட்டணம் மூவாயிரத்து ஐநூறு ரூபாவாகவும், ஆயிரம் ரூபாவாகவும் அதிகரித்த பதிவு அட்டைக்கான கட்டணம் அறுநூறு ரூபாவாகவும் குறைக்கப்பட்டன.

அத்துடன், மேல் மாகாண பஸ் போக்குவரத்து சேவைக்கு முறையான கால அட்டவணை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

- இப்படி தனியார் பஸ் சேவைகள் உரிமையாளர்கள் சங்க தலைவர் கெமுனுவிஜயரட்ண தெரிவித்தார். (ஒ-சி)

# கனடாவை நோக்கிச் சென்ற அகதிகள்; தகவல்களை வழங்க அமெ.-கனடா மறுப்பு!

கொழும்பு, ஜூலை, 27

இலங்கை அகதிகளுடனான 'எம் வீ சண் சீ' எந்த கப்பல் தற்போது என்ற இடத்தில் இருக்கின்றது என்பது குறித்த தகவல்களை அறியமுடியாதிருப்பதாக கனேடிய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தகவல்களை வழங்க கனேடிய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் மறுப்பு தெரிவித்து வருகின்றனர் என ஊடகங்கள் சில குற்றம் சுமத்தியுள்ளன.

219 இலங்கை அகதிகள் மற்றும் 13 இந்திய தமிழ் அகதிகளுடனும் செல்லும் இந்த கப்பல், தற்போது கனடாவை அண்மித்துள்ளது என முன்னதாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

எனினும், தற்போது இந்த கப்பல் குறித்த ஊடக செய்திகளை மாத்திரமே அவதானித்து வருவதாகக் கனடாவின் வெளியுறவுத்துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதே மாதிரியான தகவல்களையே நிறுவனம் ஐக்கிய அமெரிக்காவின் அதிகாரிகளும் வழங்கி வருகின்றன எனக் கனேடிய செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இந்த கப்பல் குறித்த தகவல்களை வெளியிட கூடாது என்ற உத்தரவுக்கு இணங்க, இது தொடர்பில் தகவல் வழங்க முடியாதுள்ள அமெரிக்க கடற்றுறை அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் கடந்த வெள்ளிக்கிழமை, குறித்த கப்பல் தாய்லாந்தின் கொடியுடன், பிரிட்டிஷ் கொலம்பியா துறைமுகம் நோக்கி வருகின்றமையை அமெரிக்க கடற்றுறை அதிகாரி எடம் ஸ்டன்டொன் உறுதிப்படுத்தி இருந்தார். (ஒ-சி )

# மஹிந்த சிந்தனை 5 வருடம் பூர்த்தியடைந்தும் நாட்டில் சகல துறைகளிலும் வீழ்ச்சியே!

## ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

கொழும்பு, ஜூலை, 27

''மஹிந்த சிந்தனையின் 5 வருடம் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில் இந்த நாட்டில் காணப்படும் அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

அத்துடன், யுத்தம் நிறைவடைந்து சுமார் 14 மாதங்கள் கடந்துள்ள நிலையில் யுத்த வெற்றியின் சலுகைகளையோ, அதன் நன்மைகளையோ சாதாரண மக்கள் இதுவரையில் அனுபவிக்கவில்லை.''

- இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடமும் இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும், அதேபோல் மஹிந்த சிந்தனைக்கும் 5 வருடங்கள் முழுமையாக பூர்த்தியாகியுள்ள நிலையிலும் இந்த நாட்டில் சகல துறைகளிலும் வீழ்ச்சியே காணப்படுகின்றது.

இலங்கை அரசு சர்வதேசத்தையும், இலங்கையையும் ஒரு மோசமான முறையில் கையாள்வதையும், நிர்வகிப்பதையும் காணமுடிகின்றது.

- இப்படி ஜயந்த கருணாதிலக்க கூறினார். (ஒ-சி)

## தமிழர் அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. அத்துடன் ஒவ்வொரு தேர் தல் மாவட்டத்திலும் வாக்காளர் எண் ணிக்கைக்கு ஏற்பவே நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் 30வருட காலமாக இடம்பெற்ற யுத்தத்தினால்வாக்காளர் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன்பலனாக எமது பிரதேசங்களில் வாக்காளர்தொகை அதிகமாகக் காட்டப்பட்டது. இதுவரை காலமும் இதன் மூலம் தமிழ் சமூகம் நன்மையையே அனுபவித்துவந்தது.

பல்கலைக்கழக அனுமதி, அரச வேலை வாய்ப்புகளில் உத்தியோகத்தர் நியமனம், அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுத்தல் போன்றனவும் வாக்காளர் தொகைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற விடயங்களே. எனவே இவை அனைத்தும் இதுவரைகாலமும் எவ்வித தடங்கலும் இல்லாமல் பெரும்பாலும் கிடைத்து வந்திருக்கின்றன.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் கணக்கெடுப்பின்போது நாம் வாக்காளராகப் பதிவு செய்யாதவிடத்து வாக்காளர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டு மேற்கூறப்பட்ட சலுகைகள் அனைத்திலும் இழப்பு ஏற்படலாம். இதனைத்தவிர எமது மக்கள் பலர் வேறுநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்தோடு, யுத்தத்தில் பலர் கொல்லப்பட்டும் இருப்பதனால் வாக்காளர் தொகையில் வீழ்ச்சி ஏற்படப் போகின்றது. எனவே வாக்காளர் பதிவில் அசண்டையீனமாக இருந்தால் நிச்சயமாக எமது சமூகம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும். தேர்தலில் வாக்களிப்பதற்காக மட்டும்தான் வாக்காளராக பதிவு செய்வது என்ற எண்ணம் எம்மவர்களிடம் உண்டு. இது முற்றிலும் தவறு. எமது இளம் தலைமுறையினரின் பல்கலைக்கழக அனுமதி, வேலைவாய்ப்பு என்பனவும் வாக்காளர் எண்ணிக்கையை கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வது அவசியம்-என்றுள்ளது.

**ICBP-ICT CAPACITY BUILDING PROGRAM**

சனாதிபதி அலுவலகம் e-Srilanka பயிற்சி கொடுப்பனவு

மேலதிக விபரங்கள் ஞாயிறு 25/07/2010 உதயன் 8ம் பக்கத்தில்

Free Courses A+ Hardware-Australia, BCS-UK, English, ICDL,

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்

324, Palaly Road, Campus Junction, Jaffna.

பயிற்சி உறுதிச்சீட்டுத்திட்டம்

Network Software Engineering

CISCO, LINUX, SUNJAVA

Salary Scale more than 50,000$

www.payscale.com

MCS

Supported By UNDP/JRRP

Call 772395895

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org